படைப்பு

ஊற்று-7 | நதி-10 | பிப்ரவரி 2025 | திங்களிதழ்

ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## ‘சலசலத்து ஓடும் ஓடையில் மிதந்து செல்லும் சருகு போல் என் பயணம்..’

–எழுத்தாளர் அமிர்தம் சூர்யாவுடனான நேர்காணல்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-10 | பிப்ரவரி 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**தேவம்.ஆரோன்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- தலையங்கம் ........ ப.4
- ‘சலசலத்து ஓடும் ஓடையில் மிதந்து செல்லும் சருகு போல் என் பயணம்..’
  - எழுத்தாளர் அமிர்தம் சூர்யாவுடனான நேர்காணல் ........ ப.5
- மொட்டை மாடி கல்பனா
  - ஆண்டன் பெனி ........ ப. 24
- நமக்குள் நம்மைப் பேசவைக்கும் திரைமொழி
  - கவிஜி ........ ப. 31
- வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் - உளவியல்
  - ஆதிரன் ........ ப. 36
- மணியம்மையார்
  - தி.கலையரசி ........ ப. 40
- கவிதைக்குள் கலந்திருக்கும் கதை
  - மு.முருகேஷ் ........ ப. 51
- அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..
  - கடிதங்கள் ........ ப. 58
- வழித்துணையாக.. வலிநிவாரணியாக..
  - வீரசோழன் க.சோ.திருமாவளவன் ........ ப. 62

## சிறுகதைகள்


- பசி வாடை
  - ப.தனஞ்செயன்................................. ப. 26
- குளம்
  - ராம் பிரசாத்.................................. ப. 43


## கவிதைகள்


- ஆனந்தராஜ் ................................ ப. 23
- கோ.லீலா.................................. ப. 42
- ஜின்னா அஸ்மி ............................ ப. 60




## Facilities

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector


**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**
**+91 73388 97788**

# தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எண்பத்திரண்டாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

இலக்கிய உலகில் இருபத்தைந்து வருடங்களாகத் தனது பங்களிப்பைச் செலுத்திவருபவர் அமிர்தம் சூர்யா. பத்திரிகை, வாசிப்பு, படைப்பு எனப் பல தளங்களிலும் அனுபவம் மிக்கவர். இலக்கிய இசங்களைச் சாமானியரும் புரிந்துகொள்ளும் எளிய மொழியில் 'சட்டையை உரித்துக்கொள்ளும் பாம்பு' என்ற தொடராகத் தகவு இதழில் எழுதியவர். அந்தத் தொடர் நூலாகப் படைப்பு பதிப்பகம்வழி வெளிவந்துள்ளது. இவ்இதழில் அவரது நேர்காணல் இடம்பெற்றுள்ளது. அவருக்கே உரிய இயல்பான நடையில் மெல்லிய நகைச்சுவையும் ஆழமிக்க கருத்துக்களும் தொனிக்க நேர்காணலை வழங்கியுள்ளார். கவியரங்கத்திலிருந்து நவீன இலக்கியத்துக்குள் நுழைந்த காரணம், தற்காலக் கவிதைப்போக்கு, சிறுகதைக்கான வரையறை, விமர்சனப் பணி, பிறமொழிக் கலப்பு, நாடகப் பங்களிப்பு, ஜெயமோகனுடனான ஆசான் சீடன் உறவு, சாரு நிவேதிதா குறித்த சித்திரம், ஓவியர் சந்ருவிடம் கற்றன, பேச்சுக்கலை, ஆன்மீக உணர்நிலை, தனிப்பட்ட வாழ்க்கை எனப் பல்வேறு கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டுள்ளார். ஒரு படைப்பாளனின் உணர்வுகளை மட்டுமல்ல, தமிழ் இலக்கியச் சூழலின் வெவ்வேறு பரிமாணங்களையும் இந்த நேர்காணல்வழி அறியலாம்.

ஆர்மீனியக் கவிஞர் ஒருவரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கும் 'தி கலர் ஆஃப் போம்கிரானேட்ஸ்' திரைப்படம் வண்ணக் கலைப் படைப்பாகச் செதுக்கப்பட்டிருப்பதை வியந்து பேசுகிறது உலக சினிமா பகுதி. இந்த உலகை ஆளும் பொய்கள் குறித்த ஆண்டன் பெனியின் கட்டுரை எதார்த்தமாகவும் எள்ளலுடனும் அமைந்திருக்கிறது. வெற்றி குறித்த பரிமாணங்களை ஆதிரனின் கட்டுரை அலசியுள்ளது. வெற்றி பற்றிய பல்வேறு மனநிலைகள் ஆராயப்பட்டு, தனிநபருக்கு நபர் அது மாறும் விதம் விவரிக்கப்பட்டுள்ளது. மணியம்மையார் வாழ்க்கை குறித்த கட்டுரை இடம்பெற்றுள்ளது. கவிஞர் இளம்பிறையின் கவிதைப் பயணம் பற்றி மு.முருகேஷ் விரிவாக எழுதியுள்ளார். கனகா பாலனின் கூராப்பு என்ற கவிதை நூலுக்கான விமர்சனம் இடம்பெற்றுள்ளது. கவிஞர் விக்ரமாதித்யனுக்குப் பத்திரிகையாளர்கள் டி.எஸ்.ரவீந்திரதாஸ், மலர்மன்னன் எழுதிய கடிதங்கள் வெளியாகியுள்ளன.

கூலித்தொழிலாளர்களுக்குத் தாங்கள் உழைக்கும் களத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கூட இல்லை என்ற நிஜத்தைப் பேசியுள்ளது, ப.தனஞ்செயனின் 'பசி வாடை' என்ற சிறுகதை. ராம் பிரசாத்தின் 'குளம்' என்ற சிறுகதை அறிவியல் நோக்கில் பாவனை நிரலை மையமிட்டதாக உள்ளது. இச்சிறுகதைகள் படைப்பு பதிப்பகம் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

– ஆசிரியர்



# ‘சலசலத்து ஓடும் ஓடையில் மிதந்து செல்லும் சருகு போல் என் பயணம்..’

## – எழுத்தாளர் அமிர்தம் சூர்யாவுடனான நேர்காணல்

எழுத்தாளர் அமிர்தம் சூர்யா பிரபல வார இதழான கல்கியில் பதினான்கு ஆண்டுகள் தலைமைத் துணையாசிரியராகப் பணியாற்றியவர். கவிதை, கட்டுரை, சிறுகதை என இலக்கியத்தின் வெவ்வேறு தளங்களிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார். தற்போது கருமாண்டி ஜங்ஷன் என்ற யூ டியூப் சேனலை நடத்திவருகிறார். கவிஞரும் எழுத்தாளரும் பேச்சாளரும் பத்திரிகையாளருமான அமிர்தம் சூர்யாவுடன் ஒரு 360 டிகிரியில் நடத்தப்பட்ட விசாலமான நேர்காணல் இது. 25 வருடங்கள் இலக்கியத்தில் இயங்கிவரும் இலக்கியவாதியின் குரலாக இந்த நேர்காணல் ஒரு ஆவணம்.

அமிர்தம் சூர்யா பேசத் தொடங்கினார்..

வணக்கம் சித்ரா சிவன். ஒரு எழுத்தாளர் எழுத்தாளரை நேர்காணல் செய்வது பெருமிதமான நிகழ்வு. 96இல்தான் காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் பேட்டி படித்தேன். அவர் பத்திரிகையாளரும் கூட. அந்தப் பேட்டியில்.. ‘நான் டேப் ரெக்கார்டரைப் பயன்படுத்தமாட்டேன். உங்களை நீங்களே மடையனாக்கிக் கொள்வதைப் பதிவு செய்கிற டேப் நானும் பயன்படுத்தமாட்டேன், நீங்களும் பயன்படுத்த வேண்டாம்; மேலும் கேள்வி பதில் ஒருபோதும் பேட்டி அல்ல. நீண்ட நேரம் உரையாடிவிட்டு அந்தப் பேச்சை உள்வாங்கிப் பின்னர் உங்கள் மொழியில் எழுதுங்கள். நான் அப்படித்தான் எழுதுவேன்’ என்று சொல்லியிருப்பார்...

அதை 2008இல் கல்கியில் பணியில் சேர்ந்தபோது செயல்படுத்தினேன். நான் எடுத்த எந்தப் பேட்டியிலும் டேப் ரெக்கார்டரைப் பயன்படுத்தவில்லை. உரையாடுவேன், பின் நினைவிலிருந்து என் மொழியில் எழுதுவேன். அப்படியே இங்கும் என்னோடு உரையாடுங்கள்.

**மகிழ்ச்சி நண்பரே. கூடுமானவரை அப்படியே முயற்சிக்கிறேன். இளமைக்காலத் துவக்கத்திலேயே அதாவது 96லேயே நவீன இலக்கிய வெளியில் நுழைந்துவிட்டதாகத் தெரிகிறது. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், பேச்சு என இலக்கியத்தின் பல்வேறு வகைமைகளில் நீங்கள் செயல்பட்டாலும் முதலில் நீங்கள் யாராக உணர்கிறீர்கள்?**

துவக்கம் என்ற சொல்லில் துவக்கி இருக்கிறது. துவக்கி என்றால் துப்பாக்கி என்று பொருள். எனவே கல்கியில் தொடக்கம் என்ற சொல்லையே பயன்படுத்துவோம். நீங்கள் சொன்னது போல் 96இல் நவீன இலக்கியத்தில் நுழையும்முன் நான் கவியரங்கத்தில் கவிதை வாசிப்பவனாகப் பல மேடைகளில் கவிதை வாசித்துக் கைத்தட்டல் பெற்றவனாக இருந்திருக்கிறேன். சுரதா, மு.மேத்தா, வலம்புரிஜான், ஈரோடு தமிழன்பன் எனப் பலர் தலைமையில் கவிதை வாசித்து... சொன்னால் சிரிக்கக் கூடாது சித்ரா... கவியருவி, கவிமுரசு, கவிச்சாரல், இப்படி நிறைய விருதுகள் எல்லாம் பெற்றிருக்கிறேன். இன்றைக்கு இந்த அடைமொழிகள் அங்கதத்துக்குரிய விவாதமாகலாம். ஆனால் அன்று அது ஒரு கெத்து... காவல் அதிகாரியின் சட்டையில் ஏறும் ஸ்டார்ஸ் போல அது.



கவியரங்கத்தில் கோலோச்சிக்கொண்டிருந்த நான் ஒரே இரவில் மனைவியை விட்டு வெளியேறிய சித்தார்த்தன் போல் அந்த இலக்கிய அமைப்புகளை, கவியரங்கக் கூட்டங்களை விட்டு நவீன இலக்கியக் கூடாரத்தில் நுழைந்தேன். அதற்குக் காரணம் என்னை வந்தடைந்த நூல்களும் என் வாசிப்பும்தான். நீட்சேவின் நூல்களும் காப்ரியல் எழுத்துக்களும் தாஸ்தாயெவ்ஸ்கி கதைகளும் பிரம்மராஜன் கவிதைகளும் என்னை ஆக்டோபஸ் கரங்களைப் போல் பற்றிக்கொண்டன. என்னோடு கவியரங்கத்தில் கவிதை வாசித்தவர்கள் இன்னும் மக்களிடம் கவிதை வாசித்தபடியே இருக்கிறார்கள். ஆக, பல வடிவங்களில் நான் என் இருப்பைக் காட்டினாலும் நானொரு கவிஞன் அதாவது நவீனக் கவிஞன் என்பதையே என் அடையாளமாக உணர்கிறேன்.

**அமிர்தம், உங்கள் உரையிலிருந்து இரண்டு கேள்விகள். கவியரங்கங்களை, கவியரங்கக் கவிதைகளைக் குறைவாக மதிப்பிடுகிறீர்களா? இந்த நவீன வாசிப்புக்கு யார் காரணம்?**

அதைக் குறைவாக மதித்தால் இங்கு சொல்லாமல் மறைத்துவிட்டு நேராக வானத்திலிருந்து குதித்தவன் போல நான் பிறப்பிலேயே ஆண்ட பரம்பரை என்று சிலர் சொல்லிக்கொள்வதைப் போல என் தொடக்கமே நவீன இலக்கியம்தான் என்று சொல்லலாமே... நோக்கம் அதுவல்ல. மொழியை வசப்படுத்தும் யுக்தி, அதைப் பேச்சாக கவித்துவமாக மக்களிடம் கடத்தும் சூத்திரம் என இவற்றை நான் அங்கு கற்றேன் என்பதைச் சொல்லத்தான் அதைப் பதிவு செய்தேன். மேலும் வாய்ப்பாடு படிக்காமல் யாரும் கணித மேதையாக முடியாது. அதற்காக வாய்ப்பாடு மட்டுமே ஆகச் சிறந்தது என்று சொல்லமுடியாதுதானே..

தொடர்ந்து கணிதம் பயில்பவர்களுக்கு வாய்ப்பாடு முக்கியம்தானே, அதன் தேவை அவசியம்தானே. அதை மறுதலிக்க முடியாது. உடனே நவீனக் கவிதை எழுதும் முன் கவியரங்கத்துக்குப் போகணுமான்னு கேட்க மாட்டீர்கள்தானே? நான் என்னை ஒப்புக்கொடுக்கிறேன். இங்கு அவ்வளவுதான்.

அடுத்த உபகேள்விக்குப் பதில். இந்த வாசிப்பு எனக்கு வந்தடைய எழுத்தாளர் செந்தூரம் ஜெகதீஷ்தான் தொடக்கப் புள்ளி. அவர் வழியாகவே 96இல் எனக்கு எழுத்தாளர் ஜெயமோகன் அறிமுகமாகி நட்பு தொடர்ந்தது.

**நல்லது. அப்படியாயின் உங்கள் புரிதலில் எது கவிதை? கவிதையின் செயல்பாடு என்னவாக இருக்கவேண்டும் எனச் சொல்லுங்கள் கவிஞரே..**

எது கவிதை என்பதற்கான பதில்களாக..

பிரம்மராஜன் - படிமங்களின் வெளிப்பாடு

பிரமிள் – புதுவகையான தியான மொழி

தேவதச்சன் – அது மாற்றுமொழி கணிதம்

தேவதேவன் – ஆன்மீக வெளிப்பாடு

பழமலய் – மக்களின் வாழ்வியல் ஆவணம்

ரமேஷ் பிரேம் – படிமங்களின் அரசியல்

இன்குலாப் – அதுவொரு போர்க் கருவி.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்து கூறியுள்ளனர். இதுதான் கவிதை என்பதற்கு உறுதியான வரையறை இல்லாததால்தான் இன்னும் கவிதை சிறைபடாமல் சுதந்திரமாக உயிர்ப்போடு இருக்கிறது.

**அப்போ நீங்க கடைசி வரை கவிதைனா என்னென்னு சொல்லமாட்டீங்க...**

அவங்க சீனியர்கள், ஒரு வரியில் சொல்லிட்டாங்க. எனக்குச் சொல்லத் தெரியல. கொஞ்சம் நீளமாகச் சொல்வதென்றால்... தன்னை உணரும் தருணங்களை நிகழ்த்தும் தளமாயும், அனுபவத்தைப் பகிர்ந்து களைப்பாறும் பிரதேசமாயும், வாழ்வின் முடிச்சுக்கள் சிலதை அவிழ்ப்பதும், பின் முடிச்சுக்களைப் போடுவதும், பிறிதொரு சந்தர்ப்பத்தில் நாமே முடிச்சாய் மாறி விழிப்பதுமான விளையாட்டுக் களமாயும், என்னைத் தேடும் தேடலின் மையமாயும், சூரிய வெளிச்சத்தின் ஒற்றைக் கற்றை பாய்ந்ததும் வானவில்லைப் பிரசவிக்கும் முப்பட்டகக் கண்ணாடியாகவும் இருப்பது கவிதை. இன்னும் போன்சாய் போலச் சொல்வதென்றால்... கவிதையின் இயற்பெயர் புனைவு.

**கவிதையில் உங்கள் குரு யார்? யாரை உங்கள் கவிதை வெளியின் அஸ்திவாரமாகக் கருதுகிறீர்கள்?**

குரு என்ற ஒற்றைத்தன்மை அல்ல. எனக்குக் குருக்கள்தான். பிரம்மராஜன், ரமேஷ் பிரேம், தேவதச்சன், தேவதேவன் என்ற இந்த நான்முகன்தான் என் கவிதையாக்கத்திற்கான ஆதாரம் என்பேன்.

**இன்றைய கவிதையின் போக்கு பிரகாசமானதாய் உள்ளதா? நீங்கள் குறிப்பிட்டுச் சில கவிஞர்களை அடையாளம் காட்ட முடியுமா? கவிஞர் சேரன் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளது போல் கவிதையில் தேக்கநிலையை உணர்கிறீர்களா?**

பிரகாசம்தான். அதிலென்ன சந்தேகம்? கவிதை எழுதுபவர்கள் புற்றீசல் போலப் பெருகிவிட்டதைச் சமூக ஊடகங்களின் மூலம் அறிய முடியும். அதில் போலச்செய்தல் வகையறாவும் உண்டு. மூன்று வரி கவிதைகள் எழுதிக் கவிஞர் அந்தஸ்தை அடைந்துவிடும் ரகமும் உண்டு. தினமலர் கவிதை வகையறாவும் உண்டு. நிறைய வாசித்துத் தமது கவிதை முன்னோடிகளை அறிந்து, இஸங்கள் புரிந்து, கவிதைக்கான எல்லாப் பண்புகளையும் பின் தொடர்ந்து

சமரசம் செய்யாமல் கவிதைச் செயல்பாட்டில் இருக்கும் கவிஞர்கள் நிறைய பேர் உண்டு. அவர்களிடம் வெகுஜன இதழுக்குக் கவிதை கேட்டால் கூட தரமாட்டேன் எனகிற போக்கும் உண்டு. அது இயலாமை இல்லை. என் ஏரியா அது இல்லை என்ற தீர்க்கம்.

எனக்குப் பிடித்த கவிஞர்கள் புதியவர்கள் என்று பட்டியல் போட்டால்... இளங்கோ கிருஷ்ணன், கவிதைக்காரன் இளங்கோ, வெயில், போகன், நேசமித்ரன், தேன்மொழி தாஸ் போன்ற சீனியர்களைக் கணக்கிடாமல் பார்த்தால்...

புதியவர்களாக பூவிதழ் உமேஷ், வெ.நி.சூர்யா, சபரிநாதன், சதிஷ்குமார் சீனிவாசன், ச.துரை, கார்த்திக் திலகன், பாலைவன லாந்தர், எஸ்தர் ராணி, சுசித்ராமாரன், நிம்மி சிவா, உமாமகேஸ்வரி பால்ராஜ் மற்றும் புதியவர் இல்லையென்றாலும் ஒரு புது வடிவம் புது மொழி வாய்க்கப்பட்ட தஞ்சை தவசி என நிறைய பெயர்கள் கொண்ட பட்டியல் நீளும். இது என் தனிப்பட்ட ருசி சார்ந்த வெளிப்பாடு. நினைவுப் பிசகில் சிலர் விடுபட்டு இருக்கலாம், இதை எல்லோரும் ஏற்கணும்னு அவசியம் இல்லை.

கவிஞர் சேரன் கருத்தை நாம் புறக்கணித்து விடலாம். அவருக்கு இங்கு நிலவும் சூழல் தெரியாது. புதியவர்களை அவர் வாசிக்கவில்லை போலும். அவர்தான் தேங்கிப்போய் ரொம்ப காலம் ஆயிற்று. கவிதையில் தேக்க நிலை இங்கு இல்லை.

**கவிதை எல்லோருக்குமானதுதானே.. ஏன் அடிக்கடி வெகுஜனத்தை விட்டு விலகுதல் என்ற அடிக்கோடு இடுகிறீர்கள்? புரியாத இறுக்கமான நவீனக் கவிதை யாரிடம் போய்ச் சேரும்? ஒருவகையில் இப்படி சொல்லும் நவீன இலக்கியவாதிகள் ஆதிக்கவாதிகள்தானே?**

இப்படி மூணு கேள்விகளை அடுக்கிக் கேட்டால் எப்படி பதில் சொல்வது? முதல் உப கேள்விக்குப் பதில், நவீனக் கவிதை எல்லோருக்குமானது அல்ல. அல்லது இப்படி சொல்லலாம்... வெகுஜனம் – தீவிர இலக்கியம் என்று தீவிரமான இரு பிரிவுகள் உண்டு. எழுத வருகிறவர்கள் சரியாகத் தமக்கான இடத்தைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும்.

வெள்ளிவீதியார் மொழிக்கும் ஔவையின் மொழிக்கும் உள்ள வித்தியாசம் போலப் பிரம்மராஜனுக்கும் இன்னபிற வெகுஜனக் கவிஞர்களுக்குமான வித்தியாசம் உண்டு. நவீனக் கவிதை எல்லோருக்குமானது அல்ல என்றேன். காரணம் அதன் வாசகன், கவிஞனை விடப் புரிதலில் மேம்பட்டவனாக இருப்பான்.

உதாரணத்துக்கு புராதன இதயம் என்ற பிரம்மராஜன் தொகுப்பில் கல்பழமும் கரும்புப் பூவும் என்ற தலைப்பில் ஒரு கவிதையில் நடுவில் சில வரிகள் கீழ்க்கண்டவாறு வரும், படியுங்கள்..

*சிறுத்தை மனிதரும் பற்களை உதிர்க்க*
*நடந்து செல்வதில்லை சிலந்தி மனிதன்*
*யாளியின் வாயில் புரளும் கல்பழம்*
*படித்தாலும் புரியாது*
*கொன்றாலும் சாகாது*
*நின்றாலும் வேராகும் சீர் பிரிக்கும்*
*கொரில்லாக்கள்*
*எம்பெருமான் சம்ஹார நடனத்தில்*
*கரும்பு பூத்திருக்கிறது*

என்ற வரிகள் வரும். இது தமிழில்தான் எழுதப்பட்டிருக்கு. எல்லாச் சொற்களும் தெரிந்த சொற்கள்தான். ஆனா உடனே புரியாது.

இதன் பொருளை உணர... ஒரு வாசகனுக்கு நிறைய துறைகளில் பரிச்சயம் இருக்கணும். ஜாக் லண்டன் எழுதிய சிறுத்தை மனிதன் பற்றிய புனைவைத் தெரிந்திருப்பான். சிலந்திமனிதன் பற்றிய கார்ட்டூனும் தெரிந்திருப்பான். (ஆக இலக்கிய அறிவு கொஞ்சம் வேண்டும்).



யாளி சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். யாளி என்பது சிங்கமும் யானையும் கலந்த ஒரு கற்பனை உருவம். இதில் சிங்கத்தின் வாயில் கல்லால் செதுக்கப்பட்ட உருண்டை நமது சிற்பக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்தக் கல் உருண்டையைச் சிங்கத்தின் வாயினுள் உருட்ட முடியுமே தவிர சிங்கத்தின் வாயை விட்டு வெளியில் எடுக்க முடியாது என்றும் தெரிந்திருப்பான். (சிற்ப அறிவும் கொஞ்சம் அறிந்திருக்க வேண்டும்).

சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஏழு தாண்டவங்கள் சப்த ஸ்வரங்களைக் குறிப்பதாக அமைகின்றன. அதில் ஒன்று சம்ஹார நடனம் என்று படித்திருப்பான். (புராண அறிவும் லேசாகப் பெற்றிருக்க வேண்டும்).

கரும்பு பூத்தால் மகசூல் பாதிக்கும், அது கரும்பின் இறுதிமுடிவைக் குறிக்கும் என்பதை உணர்ந்திருப்பான். (விவசாய ஞானமும் தெரிந்திருக்க வேண்டும்).

சொற்படையின் கொரில்லாக்கள் என்றால் யாராக இருக்கும், மரபை வலியுறுத்தும் புலவர்களாக இருக்கலாம். (நமது புலவர்களின் குணமும் தெரிந்திருக்க வேண்டும்).

பிறகுதான் அக்கவிதை மீது தமது அர்த்தத்தை வாசகன் எழுத முடியும். எனவேதான் சொன்னேன், நவீனக் கவிதை எல்லோருக்குமானது அல்ல.

என் ருசியை இப்படிச் சொல்வேன். கவிதையைப் படித்ததும் ஆஹா அடடா செம என்று சொல்லும்படியான கவிதையை விடத் தூங்கிக்கொண்டிருக்கும் குளத்தை எழுப்ப ஒரு சிறு கல்லைத் தூக்கிப் போட்டதும் அது விழித்துக்கொண்டு என்னை எழுப்பியது யார் என்று அலைக்கரங்கள் மூலம் கரை வரை தேடி வந்து அமைதியாவதைப் போல...ஒரு நவீனக் கவிதை, வாசிப்பவனிடத்தில் ஒரு தர்க்கத்தை அல்லது ஒரு கேள்வியை அல்லது தேடலைத் தொடங்கிவைத்தால் அதுவே சிறந்த கவிதை. இது சிறந்த கவிதைக்கான என் விதி.

## இது எல்லோருக்கும் எல்லாக் கவிதை

**வகைமைகளுக்கும் பொருந்துமா? எல்லோரும் ஏற்க முடியாதே?**

அது எப்படிங்க எல்லாருக்குமானதா மாறும், மாறாது. அதனாலதான் இலக்கியச் சூழலில் இவ்வளவு பிரிவுகள் இவ்வளவு குழுக்கள் இருக்கு. ரொம்ப சிம்பிளா சொல்றேன். கொலை என்பது தண்டனைக்குரிய குற்றம். பக்கத்து வீட்டுக்காரனைக் கொன்றால் ஆயுள் தண்டனை. ஆனால் எல்லையில் போரில் எதிரிகளைக் கொன்றால் அர்ஜுனா விருது, சிறந்த வீரனுக்கான விருது. கொலை ஒரு இடத்தில் குற்றம், இன்னொரு இடத்தில் பெருமிதம். அப்படித்தான் கவிதை குறித்தான மதிப்பீடும் குழுக்களின் அல்லது இதழ்களின் வரையறையும்.

அப்புறம் நீங்க கேட்ட இன்னொரு உப கேள்விக்கான பதில்... நவீன இலக்கியவாதிகள் ஆதிக்கவாதிகளா என்றீர்... தமது இலக்கியம் சார்ந்து, கருத்தியல் எல்லை சார்ந்து ஆம் ஆதிக்கவாதிகள்தான். இல்லாவிட்டால் ஆயிரக்கணக்காக நாவல்களை எழுதிச் சாதனை படைத்த, இன்னமும் வியாபாரரீதியாக மாஸ் ரீடர்ஸ் பெற்ற நாவலாசிரியர் ராஜேஷ்குமாரை ஏன் நாவல் வெளியீட்டு விழாவில் கூட நவீன இலக்கியவாதிகள் அழைப்பது இல்லை... அவர்கள் தீர்க்கமா இது எங்க ஏரியா உள்ளே வராதே என்று இருக்கிறார்கள். அதனால்தான் சொன்னேன், வெகுஜன இலக்கியம் நவீன இலக்கியம் என்ற எல்லைக்கோடு திடமாக இங்கு இருக்கிறது. ஆளுமைகள் விகடன், குமுதத்தில் எழுதுவதாலேயே அந்த இடைவெளி அழிந்தது போலத் தோன்றுவது ஒரு மாயை.

**கவிதையின் வகைமைகளை தேவைகளை எல்லாம் பேசும் நீங்கள் ஹைக்கூ கவிதைக்கு மட்டும் எதிரானவராக இருப்பதன் காரணம் என்ன? டிஸ்கவரி புக் பேலஸ் கூட்டத்தில் லீலா அம்மு நூல் வெளியீட்டுக் கூட்டத்தில் கூட, ஹைக்கூவா இருந்தா என்னைக் கூப்பிடாதே என்றேன், நல்லவேளை இது ஹைக்கூ இல்லை என்றீர்களே?**

ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறீர்கள், பரவாயில்லை. ஹைக்கூவில் நிறைய போலிகள் வந்துவிட்டன. பெயர் வாங்க அது குறுக்கு வழி போல் ஆகிவிட்டது. நல்ல கற்பனாசக்தி உள்ள கவிஞர்கள் கூட ஹைக்கூவில் மாட்டி வீணாகிறார்கள் அல்லது நல்ல கவிதைக்கான கச்சாப் பொருளை மூன்று வரிகளில் விரயமாக்கிவிடுகிறார்கள். என் நண்பர் திரைப்படப் பாடலாசிரியர் ஒருமுறை கிண்டலாகச் சொன்னார்... மூத்திரத்தைக் கூட மூணு மூணு சொட்டாத்தான் பெய்வாங்க போல என. எங்கள் முன்னோடிக் கவிஞர்களுள் ஒருவரான ஞானக்கூத்தன் கூட தமிழ்ப் பத்தாயத்தில் புகுந்த எலி – ஹைக்கூ என்றார், என் அமிர்தம் இதழ் பேட்டியின்போது.

இவ்வளவு விளக்கம் தேவையில்லை. என் கவிதை ருசிக்கு ஹைக்கூ செட்டாகாது. பழைய கஞ்சிக்குச் சிலருக்கு மூணு பச்சை மிளகா போதும். எனக்கு அது பிடிக்காது, எனக்கு மீன் கொழம்புதான் வேணும். ருசி பேதம்தான். வேறொன்றுமில்லை.

**கவிதையை முன்வைத்து இன்னுமொரு கேள்வி. நவீனக் கவிதை மற்றும் சிறுகதைகளில் அதிகமாகப் பிற மொழிக் கலப்பு நிகழ்கிறது அல்லது திட்டமிட்டு நடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வைத்தால் உங்கள் பதில்?**

ஓ.. நவீனம் என்ற சொல்லை நான் பயன்படுத்துவதால் இந்தக் குற்றச்சாட்டு பக்கம் திருப்புகிறீரா? ஒன்று தெரியுமா சித்ரா?

தினத்தந்தியில் வந்த, எல்லாத் தமிழர்களும் உள்வாங்கிப் படித்து ஏற்றுக்கொண்ட இந்த வரியைப் பாருங்கள்..

‘சாமான் வாங்க வீட்டைப் பூட்டிவிட்டுப் போனபோது.. சுமார் 25 வயதுடைய ஒருவன் ஜன்னல் வழியாகக் குதித்துப் பீரோவை உடைத்தபோது போலிஸ் துப்பாக்கியால் சுட்டதில் இறந்தான்.’

இது பயன்பாட்டில் புழக்கத்தில் உள்ள தமிழ். இதில் சாமான் என்பது உருதுச்சொல். சுமார் என்பது பார்சிச் சொல். ஜன்னல் என்பது போர்த்துக்கீசிய மொழி. பீரோ என்பது பிரான்ஸ் சொல்லாட்சி. போலிஸ் என்பது ஆங்கிலம். துப்பாக்கி என்பது துருக்கி மூலச் சொல் என்பார்கள். ஆக இது திட்டமிட்டுச் செய்த கலப்பா? எந்தக் கவிஞன் இதைக் கலந்தான்? பிற மொழியோடு கொடுக்கல் வாங்கல் உள்ள மொழி தன்னைப் புதுப்பித்தபடி உயிர்ப்போடு முன் நகரும். நானாவது இப்படி மேம்போக்காகச் சொன்னேன். கரிசல் மேதை கி.ரா. மொழிக் கலப்பு அவசியம் என்றே ஒரு பேட்டியில் சொல்லியிருப்பார். அது விவாதத்துக்குரியது. ஆக கவிதையில் சில இடங்களில் தேவை கருதியும் சிறுகதையில் கதைமாந்தர்களின் வழக்கு மொழியின் பொருட்டும் பிற மொழிச் சொற்கள் கலப்பது தவறில்லை.

**இவ்வளவு தரவுகளைக் கொண்ட நீங்கள் சுமார் எத்தனை இலக்கிய நூல் வெளியீட்டு விழாக்களில் பேசியிருப்பீர்கள்? எத்தனை முன்னுரை எழுதியிருப்பீர்கள்? சொன்னால் இதையொட்டிய அடுத்த கேள்விக்கு நான் தயாராவேன்...**

ஐம்பதுக்கும் மேல் முன்னுரை எழுதியிருக்கிறேன். அந்த முன்னுரைகளை நூலாகப் போட புஸ்தகா பதிப்பகம் அணுகியிருக்கிறது. நூற்றுக்கணக்கான வெளியீட்டு நிகழ்வுகளில் உரையாற்றியிருக்கிறேன். அதில் பாதி உரைகளை ஸ்ருதி டீவி கபிலன் அவரின் சேனலில் சேமித்துள்ளார்.

**இப்போது சொல்லுங்கள்... நீங்கள் பாராட்டிப் பேசிய கவிதைத் தொகுப்புகள், முன்னுரைகள் எழுதிய நூல்கள் எல்லாம் சிறப்பானவைதானா? இப்படி பாராட்டுவதன் மூலம் நீங்கள் விமர்சகர் அந்தஸ்தை இழக்க மாட்டீர்களா? இந்தச் செயல்பாட்டின் அரசியல்தான் என்ன?**

விமர்சனம் என்ற பெயரில் தன் மேதாவிலாசத்தைக் காட்ட பலரின்



எழுத்தைத் தொடக்க நிலையிலேயே முடக்கிவிட்டவர்களைத் தெரியும். விமர்சனம் என்றாலே குறைகளைச் சொல்வது என்று யார் வடிவமைத்தது? கருத்து உடன்படாதபோது எதிர்க்கருத்து வைத்து விமர்சிப்பதுதான் முறையே தவிர குற்றம் சொல்வது மட்டுமே அல்ல.

எனக்குத் தெரிந்து நன்றாகக் கதை எழுதும் ஒருவர் சினிமாவில் இருக்கிறார். நல்ல சமூக அக்கறையான மனிதரும் கூட. அவருடைய சிறுகதை நூல் வெளியீட்டில் பெருமை பொங்க உறவினர் / நண்பர்கள் / வாசகர்களை நிகழ்வுக்கு அழைத்து ஒரு ஆளுமையைப் பேச அழைத்தால், அவர் இதெல்லாம் குப்பை, எதுக்கு நீ எழுதுற என்ற தொனியில் பேச, சுற்றம் முன் அசிங்கப்பட்டு அதோடு எழுதுவதை நிறுத்தி டீவி சீரியலுக்குப் போனார். இத்தனைக்கும் அவை அவ்வளவு மோசமான கதைகள் அல்ல. இவரின் தராசில் அது லேசானது போலும்.

சிறந்த கவிஞர்கள் பலருடைய முதல் தொகுப்பு பாருங்கள், இதை எழுதியது இவரா என்று தோணும். ஆக வாசிப்பும் தொடர்ப் பயிற்சியும் சூழலும் நட்பும் ஆகச் சிறந்த படைப்பாளியாக மாற்றிவிடும். அந்தத் துளிரை முளையிலேயே கிள்ளி எறிவானேன்.. திறமையானது தகுதியானது தப்பி நிலைக்கும். மேலும் மேடைக்குப் போகும் முன் இந்தக் கவிதை போலச்செய்தல், இந்தக் கவிதை இன்னாருடைய சாயல், இந்தக் கவிதை கவிதையே அல்ல, இன்னும் நீ நிறைய

வாசி என்று எல்லாப் பலவீனத்தையும் சொல்லிவிடுவேன். மேடையில் ஏறிட்டா அந்த 40 கவிதைகளில் இரண்டு கவிதையாவது தேறிட்டாப் போதும், நான் பாராட்டிவிடுவேன். அது அவனை / அவளை மீண்டும் எழுதவைக்கும். குடும்பத்தில் எழுத்துக்கு நல் மதிப்பைத் தரும். இந்தச் செயலுக்கு எனக்கு விமர்சகர் அந்தஸ்து கிடைக்காமல் இலக்கியத்தில் டெபாஸிட் போனாலும் பரவாயில்லை. யூடியூப்பில், எழுதியவனின் பேரன் வளர்ந்து பார்த்தாலும் எழுத்தின் மீதும் எழுதியவன் மீதும் பெருமிதம் வரணும். அது களங்கக் கல்வெட்டாக அமைதல் கூடாது. இதுதான் என் அரசியல். என் வெற்றியும் கூட.

**உங்கள் சிறுகதைக்கான அடிப்படை அலகு என்ன?**

உங்கள் சிறுகதை என்றால் என் கதை பற்றி அல்ல. சிறுகதை குறித்தான உங்கள் அலகு என்ன என்று கேட்கிறீர்கள், சரிதானே... 2000இல் என் கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதச் சொல்லி எழுத்தாளர் ஜெயமோகனிடம் அளித்தேன். முன்னுரை அளித்த அவர், தொகுப்பிலிருந்து ஆறு கவிதைகளை நீக்கச் சொன்னார். காரணம் அதில் சிறுகதை அம்சம் இருக்கு, கவிதையில் கதை சொல்லக் கூடாது சூர்யா, அதை விரிவாகப் பின்னர் சிறுகதையாக்கு என்றார். அப்படித்தான் சிறுகதை எழுத முயன்றேன்.

பதினான்கு வருடங்கள் கல்கி பத்திரிகையில் பணியில் இருந்த காலங்களில் வாரந்தோறும் சிறுகதைகள் படிப்பதும் தேர்வு செய்வதும் அத்தியாவசியப் பணி. கூடவே வருடந்தோறும் அமரர் கல்கி சிறுகதைப்போட்டிக்கு வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கதைகளைப் படிப்பது என் பணி. ஆக வெகுஜனக் கதைவெளிக்கு எப்படி கதை அமைய வேண்டும் என்பதற்குத் திட்டமிடாத ஆனால் திட்டமிட்ட வரையறை உண்டு. முதல் பக்கத்திலேயே வாசகனின் கையைப் பிடித்து அழைத்து வந்துவிட வேண்டும். அடுத்தடுத்த பக்கங்களில் கதையின் தர்க்கம் அல்லது கதை மையம் பற்றிய விவரிப்பு நிகழ்ந்துவிட வேண்டும். கடைசிப் பக்கத்தில் வாசகன் எதிர்பார்க்காத ஒரு முடிவைச் சொல்லி அட என அவனை வியக்கவைத்தால் வெகுஜனக் கதை வெற்றி... பிரச்சாரத்தின் அறிவுரையின் நெடி இல்லாமல் யதார்த்தமாய்ச் சமூக விஷயத்தைக் கதை சொல்லத் தெரிந்தால் அதில் புதுமை இருந்தால் அவன் வெற்றி பெற்ற எழுத்தாளன் ஆவது உறுதி.

ஆனால் எனக்கான சிறுகதையின் அலகு வேறு விதமானது. புதிய பிரதேசத்தில் நாம் பார்க்கத் தவறிய கோணத்தில் கதை அமையணும்... கதைக்கு முடிவுகூட வேண்டியதில்லை. எதையும் சொல்லாமல் மௌனமாய் விட்டால்கூட பிரச்சனையில்லை. ஆனால் அக்கதை தொட்டுப் பேசும் விஷயம், அது நம்மோடு தர்க்கம் செய்யும் தொனி, அது நம்முள் பாய்ச்சும் வெளிச்சம், புனைவின் மூலம் காட்டும் புதிய பார்வை இவையெல்லாம் முக்கியம்.

**அப்படியான கதைகளை அடையாளம் காட்ட முடியுமா? சிறுகதைகளில் உங்களைக் கவர்ந்த தற்காலக் கதைகளை எழுத்தாளர்களைச் சொல்லுங்களேன்..**

காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் எழுதி ரவிக்குமார் மொழிபெயர்த்த வெளிச்சமும் தண்ணீர் மாதிரிதான், என்ற சிறுகதைக்கு அடுத்து நான் படித்துப் பிரமித்தது ஜெயமோகனின் டார்த்தீனியம். அடுத்து ரமேஷ் பிரேதனின் மூன்று பெர்மான்கள் (வள்ளலார் சடலத்தைப் போகியில் கொளுத்தும் காட்சி). இச்சிறுகதைகளை நான் எப்போதும் எல்லோரையும் வாசிக்கச் சொல்வேன்.

இப்போதைய தலைமுறையில் புதியவர்களின் கதைகளில் சிலாகித்துப் பாராட்டக்கூடியவை உண்டு. அதில் நரனின் கேசம், நெய்வேலி பாரதிக்குமாரின் சலஞ்சலம், செந்தில் ஜெகன்நாதனின்

மழைக்கண், கவிதைக்காரன் இளங்கோவின் பனி குல்லா, கீரனூர் ஜாகிர்ராஜாவின் கலைத்து எழுதிய சித்திரம், புதியமாதவியின் ராஜமாதா, ஆண்டன்பெனியின் சித்தன் கருப்புசாமி, அகராதியின் ஒளி, சீராளன் ஜெயந்தனின் இரைக்காவு, சவிதாவின் கானுறு மலர், தொல்காப்பியனின் ஆவலாதி, சேது எழுதிய பள்ளிகொண்ட பெருமாள் எம்.பி.ஏ., பாலஜோதியின் அரிமாச்சி, அசரப் அலியின் ஒற்றை செருப்பு, அறிவு செல்வனின் மாக்கோலம் மனக்கோலம், விஜி முருகநாதனின் அம்மை அழைப்பு, சித்ரா சிவனின் அதிரூபன் போன்ற கதைகள் என் நினைவுப் பரணில் உள்ளவை.

**இன்னும் நாவல் எழுதாமைக்கு என்ன காரணம்? ஏன்னா அது மட்டும்தான் நிலுவையில் உள்ளது. அதனால கேட்டேன்..**

நேர்க்கோட்டு குடும்ப, சமூக நாவல் மீது எனக்கு இப்போ அலர்ஜி. ஒரு காலத்தில் ரசித்துப் படித்தவன்தான், ஏனோ இப்போது விருப்பம் குறைந்துவிட்டது. பேச அழைத்தால் படிப்பேன். ஆனால் அதீதப் புனைவு என்றால் பிடிக்கிறது அல்லது பின் நவீனத்துவ போஸ்ட் மாடர்னிச நாவல் வகைமை எனில் படிப்பேன். இப்படியான மன அமைப்பால்தான் நாவல் எழுதாமல் சென்ற வருடம் ஒரு குறுநாவல் எழுதி முடித்தேன். எறவானம் எனத் தலைப்பிட்டு, பின் சில மாற்றங்கள் செய்து பறவி என்ற தலைப்பிட்டுள்ளேன். இவ்வாண்டு அது வெளியாகும். அடுத்த நாவல் பாதாளக் கொலுசு. சில அத்தியாயங்கள் எழுதத் தொடங்கிவிட்டேன். இவ்விரண்டும் நேர்க்கோட்டு நாவல்கள் இல்லை. கலைத்துப் போட்ட வடிவம்தான்.

**நாடகப் பிரதி எழுதிப் பரிசு வாங்கியிருக்கீங்க. நாடகம் அரங்கேற்றம் செய்து இருக்கீங்க. நாடகத்தின் மீதான ஈர்ப்பும் தேடலும் எங்கிருந்து தொடங்கியது? நாடகத்தையொட்டிய அனுபவத்தைப் பகிரலாமே?**

என் தாத்தா ஒரு கூத்துக்கலைஞன் (இதை ஜெயமோகன் அவரின் இணையப் பக்கங்களில் பதிவு செய்துள்ளார்). என் பாட்டி அடிக்கடி சொல்லும்... கலை செத்த ஊர்ல காலம் தள்ள முடியாதுடா... என்ற குரல் எனக்கான அசரீரி.

ஆக நாடகத்தின் அடிப்படை இப்படியாக எனக்குள் வந்திருக்கும். அதன் தொடர்ச்சியாகக் கூத்துப் பட்டறை குழுவின் நாடகங்களைத் தேடித் தேடிப் போய்ப் பார்த்தேன். அது நவீன நாடகத்துக்கு வழி வகுத்தது. கூடவே அகஸ்தோ போவால் உருவாக்கிய கட்புலனாகா அரங்கு என்கிற இன்விசிபிள் தியேட்டர் குறித்தான நாடக யுக்தி பற்றியும் படிக்க சில நாடகங்களைப் பார்க்க வாய்ப்பு அமைந்தது. இதெல்லாம் சேர்ந்துதான் என்னை நாடகப் பிரதி எழுத வைத்தது.



ஜெராக்ஸ் என்ற பெயரில் ஒரு நாடகம் எழுதினேன். அது பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் சில கைதிகளை விடுதலை செய்யும் அரசின் பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. மூன்று கைதிகளில் யாரை விடுவிப்பது என்ற வாக்குவாதம்தான் அந்த நாடகம். முடியும்போது இன்விசிபிள் நாடகபாணியாக மாற்றினேன். நாடகப்



பிரதி எழுதியபின் அதில் சில ஐயங்கள் இருந்தன. அதை எழுத்தாளர் ஜெயந்தன் தீர்த்துவைத்தார். இப்போது (2025இல்) சிறந்த நூலுக்கு 5000 பரிசு தருகிறார்கள் அல்லவா, அந்த நாடகம் 2002இல் 5000 ரூபாய் பரிசு பெற்றுத் தந்தது.

பின் எனது டிரில்காஸ் கம்பெனி நண்பர்களை வைத்து அதைத் தமிழ்ச் சிற்றிதழ் சங்கம் நடத்திய ஒரு விழாவில் அரங்கேற்றம் செய்தேன். நாடகம் நடந்துகொண்டிருந்தபோதே ஒரு ரிக்ஷாக்காரர் நல்ல போதையில் கூட்டத்துக்கு மத்தியில் எழுந்து திட்ட ஆரம்பிச்சுட்டார். என்னடா டிராமா இது, ஒழுங்கா மேக்கப் இல்ல, நல்ல டிரஸ் இல்ல, வசனத்தை இழுத்து இழுத்துப் பேசுறீங்க, கேட்டா மாடர்ன் டிராமானு ஊரை ஏமாத்துறீங்க, லூசு பசங்களா, இந்த டிராமாவில் வர்ற வசனத்துக்கு என்னடா அர்த்தம்னு கத்த ஆரம்பிச்சுட்டார். நான் நாடகத்துக்கு இயக்குனர். மேடைக்கு வந்து அவருக்கு விளக்கம் கொடுக்கும்படியாச்சு. பின் நாடகத்தை நிறுத்திட்டோம்.

**அய்யய்யோ அப்போ நவீன நாடக முயற்சி தோல்வியா?**

இல்லையே, வெற்றிதான். அந்தக் குடிகாரர் ரிக்ஷாக்காரர் கேள்வி கேட்டபோது ஜனங்க அவனுக்குத்தான் கை தட்டினாங்களே.

**அது எப்படி உங்க வெற்றியாகும்?**

ஏங்க... ஆடியன்ஸ் மத்தியில் குடிச்சிட்டு அழுக்கு டிரஸ்ல இருந்த அந்த ரிக்ஷாக்காரனாக நடிச்சதே எங்க ஆளுதானே, எங்க நாடக ஆட்களில் ஒருத்தர். அது எங்க வெற்றி இல்லாம வேற யார் வெற்றி. இன்விசிபிள் தியேட்டர் உருவாகச் சூழல் அமையாதபோது இன்விசிபிள் தியேட்டரையே கட்டமைக்கத் திட்டமிட்டோம். நாடகம் வெற்றிதானே.

சில காலத்துக்குப் பிறகு.. எம்.ஜி.சுரேஷ் அவரது பன்முகம் இதழில் என்னை நாடக விமர்சனம் எழுதவைத்தார். நாடகவெளி ரங்கராஜனின் நாடகம் குறித்தும் கவிஞர் இன்குலாப் எழுதிய நாடகம் குறித்தும் கூட விமர்சனம் எழுதினேன். இன்குலாப் நாடகம் குறித்துத் தாக்கி எழுத அவர் வருத்தப்பட்ட சம்பவமும் உண்டு. எனது நாடகப் பங்களிப்பு இப்படியானது. அது ஒரு காலம் கார் காலம்.

**இன்று நாடகப் பிரதிக்கான எழுத்து உயிர்ப்போடு இருக்கிறதா?**

கண்டிப்பாக. சென்ற ஆண்டு வெளிவந்த கோமதி சங்கர் எழுதிய 'நீலகண்ட பிரம்மச்சாரி' என்ற நாடகப் பிரதியும் இவ்வாண்டு வெளியான வே.எழிலரசு எழுதிய 'முத்தமிழும் மூன்று கொலைகளும்' என்ற நாடகப் பிரதியும் கவனம் கொள்ளத்தக்கவை. கோமதி சங்கர்.. போராளிகள் ஏன் ஆன்மீகவாதிகளாக மாறுகிறார்கள் என்பதற்கான பதிலை அந்நாடகத்தில் அரூபமாகச் சுட்டியிருப்பார். எழிலரசு, ஒளவை ஒரு விளிம்புநிலை பெண்மணியோ என்ற கேள்வியை எழுப்பியிருப்பார். இரண்டும் முக்கியமான நாடகப் பிரதிகள்.

**நவீன ஓவியத்துடனான புரிதல் எங்கு முளைத்தது? ஓவியர் சந்ரு உடனான அனுபவம் - கற்றல் எவ்விதமானது? அந்த ஓவியப் புரிதல், வெகுஜனப் பத்திரிகையான கல்கியில் எவ்விதம் செயலாற்றியது?**

இந்தியா டுடே இலக்கிய மலரில் ஞானக்கூத்தன் கவிதைக்கான ஓவியத்தைப் பார்த்து எரிச்சலாகி இதெல்லாம் ஒரு ஓவியமா என்று நவீன ஓவியத்தின் மீதான கோபத்துடனே இந்தியா டுடே அலுவலகத்திடம், அதை வரைந்தவர் போன் விலாசம் கேட்டு, நேரில் சென்று அந்த ஓவியரை நாலு கேள்வி கேட்க வேண்டும் என்று போனேன். அந்த ஓவியர்தான் சந்ரு. அப்போது அவர் எழும்பூர் ஓவியக் கல்லூரியின் முதல்வர் என்று தெரியாது. அவர் தமது ஓவிய சகாக்களை வைத்துக்கொண்டு ஒரு இயக்கம் போலவே நடத்தினார். இந்தியா டுடேவில் அவரின் மாணவர்களே கோலோச்சினர்.

இந்தியா டுடே ஓவியம் பற்றி அவரிடம் கேட்டேன். அந்த ஓவியம் வெற்றுக் கிறுக்கல் என்று வாதிட்டேன். அதற்கு அவர், 'அந்தக் கவிதை சொல்லும் கருத்து அபத்தமானது. அது கவிதை அல்ல, கிறுக்கல்தான். அதற்கு எதிர்வினையாகத்தான் அந்த ஓவியம் வரைந்தேன். கவிதைக்கு இணையாக ஓவியம் போடுவது அல்லது கவிதை விட்ட இடத்தை ஓவியத்தால் நிரப்புவது மட்டும் ஓவியன் பணி அல்ல. இன்னொரு விஷயம் உண்டு. கவிதை சரியில்லை எனில் அதை ஓவியத்தாலும் எதிர்வினையாற்றலாம். நான் அதைத்தான் செய்தேன் என்றார். எனக்கு அந்தப் பதில் புதியது. அது கலகக் குரலாகத் தோன்றியது. அப்படியாகத்தான் அவருடன் பழக்கமானது. அவர் வரைவதை அவர் செதுக்குவதை வீட்டிலிருந்து பல மாதங்கள் பார்த்தபடியே இருந்தேன். நிறைய பேசுவோம், நிறைய தர்க்கம் செய்வேன். அங்குதான் நவீன ஓவியம் குறித்தான புரிதல் கிடைத்தது.

அவரைப் பற்றி நான் எழுதிய கட்டுரை, எடுத்த பேட்டி மூன்று இதழ்களில் வெளியானது. அதில் கவிஞர் லட்சுமி மணிவண்ணன் நடத்திய சிலேட்டு இதழுக்கு நான் ஓவியர் சந்ருவிடம் – 'வண்ணங்களும் மனப் பிறழ்வும்' என்ற தலைப்பில் உரையாடிய நேர்காணல் அச்சானது. அது மிக முக்கியமானது.

ஓவியர் சந்ரு குறித்தான மாற்று விமர்சனம் ஓவிய வெளியில் உண்டு. நேரிடையாகவே என்னிடமும் சொன்ன ஆளுமைகள் உண்டு. அந்தக் குற்றச்சாட்டு என்னவெனில்... சந்ரு கலைக்குள் தலித் அரசியல் பேசுகிறார். கலையில் அப்படி நேரிடையாகப் பேசக்கூடாது. கலகம் என்ற பெயரில் கலாச்சார பண்பாட்டுக் கூறுகளைச் சீர்குலையவைக்கிறார், ஓவிய உரையாடலைப் பின்னோக்கி இழுத்துவிட்டார் என்பதுதான் அது.

அக்கருத்து விவாதிக்க வேண்டிய கருதுகோள். ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒரு அரசியல், தேவை இருக்கும்தானே... எல்லோரும் காமதேனுவை அழகாக, நவீனமாகப் படம் வரைந்தபோது சந்ரு, காமதேனு சாணி போடுவது போல் ஓவியம் போட்டால் எரிச்சலும் கோபமும் வரத்தானே செய்யும். அவரிடம் கேட்டால் தெய்வாம்சம் பொருந்தியது மகிமை கொண்டது என்றாலும் அது மாடுதானே, சாணி போடுவது இயல்புதானே என்பார். இந்தக் கலகம் பலரை ஈர்த்தது. அன்றும் சரி இன்றும் சரி அவரைக் கொண்டாடுபவர்களில் பலர் தலித்துக்கள் அல்ல. வன்னிய, நாயுடு சமூகத்தைச் சார்ந்த படைப்பாளிகளே. ஏன் இப்படி சொல்கிறேன் எனில் தலித் அரசியலைப் பேசும் அவரைத் தலித் ஆளுமைகள் கொண்டாடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டவே.

அவர் மூலம் நிறைய ஓவியர்கள் எனக்கு அறிமுகமானார்கள். கல்கியில் பணியில் சேர்ந்ததும் சிறுகதைகளுக்கும் கவிதைகளுக்கும் தொடர்ந்து நவீன ஓவியத்தைப் போடவைத்து வாசகரிடம் அதை அறிமுகம் செய்தோம். நவீன ஓவியர்களின் பேட்டிகளைப் பதினாறு வாரம் தொடர்ந்து வெளியிட்டோம். நவீன சிற்பிகளை அடையாளம் காட்டினோம். கல்கி தீபாவளி மலர் புதுமையில் மிளிர்ந்தது.

இதைச் செயலாற்ற நிர்வாகம் எனக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தது. நானும் அவ்வப்போது வரையத் தொடங்கிச் சில நூல்களுக்கு அட்டைப்படம் கூட போட்டேன். இந்த அனுபவங்களால் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றும் நிலைக்கும் நகர்ந்தேன் எனலாம்.

**இப்படியான பேச்சுக்கலையை எவ்விதம் பயின்றீர்? ஒரு மேடைப் பேச்சுக்குத் தேவையான ஆலோசனை என்ன?**

முதலில் தமிழை அழகாக உச்சரிக்கத் தெரியணும். உச்சரிப்பில் ஏற்ற இறக்கம் முக்கியம். எனக்குக் கவியரங்கம் அந்தப் பயிற்சியைத் தந்தது. நான் தினத்தந்தி செய்தியைக் கூட கவிதை போல வாசித்துக் கைத்தட்டல் வாங்கிடுவேன். சரி டிப்ஸ் இதுதான். முதல்ல எந்தத் தலைப்பில் அல்லது எந்த நூல் குறித்துப் பேசப்போகிறோமோ... அதைப் பற்றிய தெளிவு வரணும். உதாரணத்துக்கு, ஒரு புத்தகத்தை அட்டையின் ஓவியத்திலிருந்து வாசிக்கணும். வாசிக்கும்போதே பிடிச்சது எல்லாம் பக்க எண் போட்டுத் தனி பேப்பரில் எழுதிக்கணும். ஓவியத்தைப் பத்தியும் சொல்லலாம். அடுத்து இந்த நூல் தலைப்பில் யாராவது எழுதியிருந்தா அதைத் தேடணும். இது எந்த வகை எழுத்து? அதில் இதற்கு முன் எழுதியவர் யார்னு பார்க்கணும். பிறகு இந்த நூல் ஏன் பிடிக்குதுன்னு சொல்லத் தெரியணும். என்ன பிடிக்குது – அழகியல், சமூகக் கருத்து, கவித்துவம், பெண்ணியம், இப்படி குறிப்பு எடுக்கணும். எதைப் பேசும்போதும் நம்ம அனுபவத்தை அதில் சேர்த்துக்கணும்.

ஒரு நல்ல பேச்சில்... நூல் குறித்தும் நூலின் தகவல் குறித்தும் நமது அனுபவமும் கூடவே சில மேற்கோள்களும் கரம் மசாலா போலச் சேர்த்துக்கணும். முடிக்கும்போது இதனால் தெரிவிப்பது யாதெனில் என்று நமது கருத்தோடு முடிக்கணும். அதே போல் தலைப்பில் பேசணும்னா, அந்தத் தலைப்பு ஒட்டி எல்லாத் தகவல்களும் சேகரிக்கணும். சங்க இலக்கியத்தில் மேற்கத்திய இலக்கியத்தில் கிராமிய வழக்கு இலக்கியத்தில்னு அதையொட்டி எல்லாமே தேடணும். சொந்தக் கதை, சோகக் கதை, எதிர்வீட்டுக் கதையெல்லாம் சேர்க்கலாம். தப்பில்லை. அப்பத்தான் உயிர்ப்பா இருக்கும். அப்படி இல்லையா, நாமளே புனைவில் உருவாக்கிடணும். எல்லாத்தையும் பேப்பரில் குறிப்பா எழுதுவது நலம். வரிசையா பேப்பரில் எழுதிக்கொள்வது சிறப்பு. அப்புறம் வீட்டுல அதை ரிகர்சல் எடுத்துப் பேசிப் பார்த்தல் இன்னும் சிறப்பு. ரொம்ப முக்கியம் கோர்வையா ரசனையா வருதான்னு பார்க்கணும். எங்க ஜவ்வு மாதிரி போர் அடிக்குதுன்னு நமக்கே தெரிஞ்சிடும். அதை நீக்கிடணும். எவ்வளவு நேரம் அந்தக் குறிப்பை வைத்துப் பேச முடியுதுன்னு பார்த்துக்கணும். நேரம் ரொம்ப முக்கியம். 30 நிமிட உரை போதுமானது. ஒருவேளை பேச்சைக் குறைச்சிக்க சொன்னா, எதை எடுக்கலாம்னு முன்னரே முடிவு பண்ணிக்கணும். மேடைக்கு உடையும் முக்கியம். பேசும்போது குறிப்பைப் பார்த்துட்டுப் பிறகு பார்வையாளர்களைப் பார்த்துப் பேசணும்.

மேடைக்குத் தயாராகும் முன் நீ முட்டாள் எதிரே இருப்பவன் எல்லாம் அறிவாளின்னு நினைச்சிப் பேச்சைத் தயாரிக்கணும். மைக் முன்னால் வந்தால் நீதான் அறிவாளின்னு உன்னை நம்பிப் பேசத் தொடங்கணும். எதிலும் ஒரு அறமும் முழு ஈடுபாடும் முக்கியம். பேப்பரில் எழுதி வெச்சி வாசிக்கவே கூடாது. அதுக்குப் பார்வையாளருக்குப் பிரிண்ட் போட்டுத் தரலாமே. பேச்சு என்பது காது வழியா கபாலத்தைத் திறந்து மூளைக்கு முடிச்சு போடுவது. கவிஞன் எழுத்தாளனின் ஊடகம் பேச்சு இல்லை. அது தனிக் கலை. பேசத் தெரிந்தால் கூடுதல் மதிப்பு. அவ்வளவுதான். இப்போதைக்கு இது போதும்னு நினைக்கிறேன்.

**பேச்சாலும் எழுத்தாலும் ஆட்சி மாற்றத்தையே**

**தமிழகத்தில் நிகழ்த்தியிருக்கையில் நீங்கள் உட்பட உங்கள் தரப்பு இலக்கியவாதிகள் மக்கள் பிரச்சனையைப் பேசாது, தனி மனிதன் சார்ந்த விஷயங்களைப் பேசுவதாகவே உணர்கிறோம். இது சரியா? பேச்சு எழுத்தில் கலை கலைக்காக அல்லது கலை மக்களுக்காக என்ற இரு பிரிவுகளில் நீங்கள் எதன் பக்கம்?**

தத்துவ ஞானி ஜே.கே. சொல்வார்... ஜன்னலைத் திற – காற்றும் வெளிச்சமும் இயல்பாய் உள்ளே வரட்டும். இது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருந்தும். தமிழ்ச் சமூகத்தில் அற நூல்களுக்கா பஞ்சம்? எல்லாமே அறிவுரை கூறும் நூல்கள்தான். எல்லாச் சட்டங்களும் மானுடத்திற்குக் கேடயமாய்த்தான் இருக்கின்றன. ஆயினும் ஏன் சாதியின் பேரால் மதத்தின் பேரால் வெறிகொண்டு அலையுறுகிறார்கள்.. ஆக ஒவ்வொரு தனிமனிதனும் அவனளவில் மாறாமல் மாற்றம் பெறாமல் இங்கு எதுவும் சாத்தியமில்லை. பிரச்சாரம் களப்பணி இவற்றை யாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அதை ஒரு எழுத்தாளனும் செய்யவேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது.

ஜெயமோகன் சொன்ன ஒரு மேற்கோள்... ஒரு அறையில் முடங்கி ஆய்வு செய்யும் விஞ்ஞானியின் பணி வெளியே போராடுபவனின் செயலோடு குறைந்தது அல்ல, அந்த விஞ்ஞானியும் சமூகத்தின் பொருட்டே பணி செய்கிறான். அவனையும் கோஷம் போட வற்புறுத்தாதே என்று.

மேலும் படைப்புகளில் பிரச்சார நெடி கூடாது என்பவன் நான். சமூகம் என்பது திசுவானால் மனிதன்தானே செல். எனவே நேரடியாக அதாவது அவனை அவனே ஆய்வது அவசியம் என்று நான் நம்புகிறேன். அது மூடநம்பிக்கை என்று கூட சொல்லலாம், அது உங்க உரிமை.. தனி மனிதப் பிரச்சனைகளை அலசுவதும் அதன் ஊற்றுக்கண்ணை ஆய்வதும் அந்த முடிச்சிலிருந்து விடுவிப்பதும் வாழ்வு குறித்த



தெளிவோடு அவதானிக்கத் தூண்டுவதும் அவசியம் என்பது என் அபிப்பிராயம்.

பேரறிஞர் அண்ணாவிடம் கலை மக்களுக்காக – கலை கலைக்காக என்ற வாதத்தில் நீங்கள் யார் பக்கம், படைப்பில் பிரச்சாரம் இருக்கலாமா? என்று கேட்டனர். அதற்கு அவர் ஒரு அழகான பெண் தம் மார்பகத்தைக் காட்டிக் குழந்தைக்குப் பால் புகட்டும் கலைத்துவமான சிலையிருப்பதாகக் கொண்டால் அது கலைதான். ஆயினும் தானொரு தாய் என்பதை அந்தச் சிலை அந்தப் பெண் மறைமுகமாகப் பிரச்சாரம் செய்தபடியே இருக்கிறாள் அல்லவா... நான் அந்தப் பக்கம் என்றாராம். படைப்பில் பிரச்சாரம் என்பது இப்படியாகக் கலைத்துவமாக அமைதல் வேண்டும். நேரடியாக அல்ல.

**இந்தப் பதிலில் மட்டுமல்ல, எப்படியும் நீங்கள் ஜெயமோகனை எங்காவது சொல்லிவிடுகிறீர்கள். பல கூட்டங்களில் ஆசான் என்றும் அறிவிக்கிறீர்கள். அது ஏன்?**

ஒருவர் பல விஷயங்களை நேரடியாகச் சொல்லித் தரணும்னு இல்ல... படைப்பின் வழியாக அரூபமாகவும் சொல்லித் தரமுடியும் அல்லது நாம் கற்றுக்கொள்ள முடியும். அப்படி கற்றுக்கொண்டால் அவர் ஆசான்தானே.

மேலும் 1995களில் எழுத்தாளர் ஜெயமோகன் அறிமுகமானார். அப்போதெல்லாம் எனக்குக் கடிதம் எழுதுவார். நான் நடத்திய என் அமிர்தம் இதழைத் தமிழில் முக்கிய ஆளுமைகள் எல்லோருக்கும் அனுப்ப நூறு விலாசங்களைத் தேடி அவர் கைப்பட எழுதி அனுப்பியது கண்டு நான் பிரமித்தேன்.

2000இல் என் முதல் கவிதை நூலுக்கு அவர்தான் முன்னுரை எழுதித் தந்தார். பின் சென்னை வரும்போதெல்லாம் சந்தித்து மணிக்கணக்கில் அவருடனான உரையாடல் தொடர்ந்தது. அதன்பின் வருடத்தில் இரண்டு முறை போனில் பேசினாலே ஆச்சரியம். ஆனால் ஏதாவது சொல்ல விரும்பினால் மெயில் போடுவார், அவ்வளவுதான் உறவாடல்.

அவருடைய இதழ் சொல்புதிது. நான் வேலை தேடிக்கொண்டிருந்த காலத்தில் சொல்புதிது இதழை நீ எடுத்து நடத்து சூர்யா என்று ஜெயமோகன் எனக்குக் கடிதம் போட்ட சம்பவமும் உண்டு. அது கடுமையான பணி என்று நான் மறுத்துவிட்டேன்.

திடீரென ஒருநாள் ஒரு விவாதத்தின் தொடர்ச்சியாக என்னைப் பற்றியும் சோ. தர்மன் பற்றியும் ஒரு கட்டுரை எழுதியிருந்தார் அவர் இணையதளத்தில்.

மேலும் மௌனப் புறக்கணிப்பு அல்லது எதையும் கண்டுகொள்ளாமல் போகும் தமிழ்ச் சூழலில்... திடீரென ஒருநாள் அமிர்தம் சூர்யாவின் இலக்கிய உரைகள் தமிழ்ச் சூழலுக்கு முக்கியமானது, அவர் பணியை மறுதலிக்க முடியாது என்று எழுதி என் பேச்சின் சில லிங்க்குகளை அவர் இணையப் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அது உலகம் முழுக்கப் பரவி வாழ்த்து குவிந்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் விஷ்ணுபுரம் விழாவில் சிறப்பு விருந்தினர் அமிர்தம் சூர்யா என அறிவித்து அழைத்தார், கௌரவித்தார்.

திடீரென, எனக்குத் தெரிந்த தகவல்களைத் தொகுத்துள்ளேன், சரிதானா, இன்னும் சேர்க்கணுமா பார் என்று மெயில் போட்டார். ஏன் என்றேன். தமிழ் விக்கியில் உன்னைப் பற்றி ஆவணமாகக் குறிக்க என்றார்.

ஆக, தமிழ்ச் சூழலில் எந்த ஆளுமையும் இப்படி என்னைக் கொண்டாடியது இல்லை. மேலும் மகத்தான வாசிப்பு அனுபவம் கொண்ட தீவிர இலக்கியப் பற்றாளர்கள் கொண்ட ஒரு குழுவில் நான் இருப்பது அவசியமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது.

சமீபத்தில் கூட தமிழ் இலக்கண நூலை அகஸ்தியர் எழுதினார் என்ற சர்ச்சையில் எனக்கு விவரம் தெரியல, ஒரு மெசேஜ் போட்டேன். உடனே போன் செய்து அரை மணி நேரம் விளக்கினார். எப்போதும் அவரின் அசாத்தியமான படைப்பாற்றல் பிரமிக்க வைக்கும். அவர் எழுத்தினூடாக இயங்கும் ஆன்மீகச் சரடு எனக்கான மன ஒத்திசைவுக்கானது. அவர் எல்லோரிடமும் என் நண்பர் அமிர்தம் சூர்யா என்றே அறிமுகப்படுத்துவார். நான் அவரை ஆசான் என்கிறேன். ஒரு நல்ல நண்பன் ஆசானாக வழி நடத்துகிறவனும் கூட.

ஒரு கூட்டத்தில் ஆசான் ஜெயமோகன் பேசும்போது.. மரவட்டையைப் போல மத்தியானம் தன் லட்சோபலட்சக் கால்களால் மறுநாள் மத்தியானத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்ற கவிதையின் படிமம் எனக்குள் வேறு ஒரு படிமத்தைத் தோற்றுவிக்கிறது. மரவட்டையின் மேல் பகுதி மிகுந்த அமைதியுடனும் அதன் கீழ்ப் பகுதி அந்த அமைதிக்குச் சம்பந்தமே இல்லாமல் எண்ணற்ற கால்களின் ஆக்டிவ்வால் சதா இயங்கியபடியும் இருக்கும். அமைதியும் அமைதியின்மையும் ஒரே இடத்தில். இது நான் உருவாக்கிய படிமம். இப்படித்தான் ஒரு படிமம் இன்னொரு படிமத்தைத் தோற்றுவிக்கிறது. படிமம்தான் கவிதையின் அழகு.. என்று பேசினார்.

இது பழமைவாதமா இந்துத்துவமா

தெரியாது. இம்மாதிரியான பேச்சுக்களும் எழுத்தும்தான் என் ருசியாக என் பாணியாக என் தேடலாக எழுத்தின் வாழ்வின் போக்காக இருக்கின்றன. அவரின் அந்தப் பேச்சு என் நினைவில் ஊர்ந்தபடியே இருக்கிறது. ஒவ்வொரு படைப்பாளியும் மரவட்டையாகத்தான் தோற்றமளிக்கிறான். ஒவ்வாமை தொடுதலில் அவன் / அவள் தன் நினைவிற்குள் சுருண்டுகொள்கிறார்கள். அச்சமயம் அதைப் பொருளாக எங்கும் சுலபமாய் வீசி எறியலாம். மீண்டும் எறியப்பட்ட இடத்திலிருந்து அந்த மரவட்டை நகரத் தொடங்கும். நீ அறியாத பொழுதில். ஆக நானும் மரவட்டையாக நகர்ந்தபடி என் பயணத்தைத் தொடர்கிறேன் என்று அவர் சொன்ன படிமத்தின் நீட்சியாக நானும் என் டைரியில் குறித்துவைத்தேன்.

**போதும் புரிந்தது, அந்த மரவட்டையை ஒட்டிய அவரின் உங்களின் படிம தர்க்கம் சிறப்பு. இது முற்றிலும் வேறான கேள்வி. கருத்து வேறுபாடு அதனால் வரும் தர்க்கம் தப்பில்லை எனில் அதனால் விலகல் ஏற்பட்டுப் புதியதாய் முளைக்கும் அமைப்புகள், பிரிவினைகள் இலக்கியத்துக்குப் பின்னடைவுதானே?**

எல்லாக் கட்சிகளும் மக்களுக்கு நன்மை செய்யத்தானே. பிறகு ஏன் இத்தனை கட்சிகள்? சிவப்பு சித்தாந்தத்தில் செயல்படும் கட்சியில் ஏன் இரண்டு பிரிவு? எல்லோரும் ஒன்றாக இணையவேண்டியதுதானே? அது அப்படி இல்லை, சின்ன சின்ன கருத்தியல் வேறுபாடுகளால் பிரிந்து இயங்கும் ஜனநாயகப் பண்பு அது. மரம் ஏன் கிளை விடுகிறது, கிளைகள் மரத்தின் பின்னடைவா? இல்லை. கிளைகள் மரத்தின் விஸ்தாரம். ஆணி வேர் மட்டும் போதாதா, ஏன் சல்லி வேர்? அதுதான் அதன் ஆதாரம். எல்லாம் சேர்ந்துதான் மரத்தின் இயக்கம். எனவே கறை நல்லது போல இலக்கியக் குழுக்களும் அமைப்புகளும் நல்லது. அது பின்னடைவல்ல.

**பெரும்பாலும் தமிழகத்து இலக்கிய அமைப்புகள் நடத்தும் பரிசு, விருது என்றாலே அதில் நீங்கள் நடுவராக ஒருங்கிணைப்பாளராக இருக்கிறீர்கள். அதன் காரணம் என்ன?**

மிக எளிய காரணம்தான். நான் 25 வருடங்களாக இந்த இலக்கியச் சூழலில் இயங்குகிறேன். ஆக எல்லாரையும் எனக்குத் தெரியும். அனைவரும் என் நண்பர்கள். மேலும் என்னை அணுகி நம்பி ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் செய்து முடிக்கலாம் என்ற உத்திரவாதமும்தான் காரணம்.

என் தேர்வு தவறு என்று யாரும் சொன்னது இல்லை. இதற்கு முன் சௌமா விருது தேர்வாகட்டும்... இப்போது ஜெயந்தன் படைப்பிலக்கிய விருது, இராம செ.சுப்பையா அறக்கட்டளை விருது, தூரிகை கவிதை விருது, சிவகாசி லட்சுமியம்மாள் விருது என எதிலும் நேர்மையாகவே செயல்பட்டுள்ளேன். நேற்று எழுத வந்தவர் கூட என் நண்பனாயிருப்பார். ஆக விருது பெறுபவர்கள் என் நண்பர்கள் என்பது தவிர்க்க முடியாத விமர்சனம்.

ஒருமுறை சிறப்பு விருந்தினராக அழைத்தால் அடுத்த முறை அழைக்க மாட்டார்கள். ஆனால் படைப்பு குழும நிறுவனர் ஜின்னா தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக என்னைச் சிறப்பு அழைப்பாளராக மேடையில் நிறுத்துகிறார். டெல்லி அழைத்துச் சென்று ஓவியக் கண்காட்சியைத் திறக்கச் சொல்கிறார் எழுத்தாளர் சீராளன் ஜெயந்தன். துபாய்க்கு அழைத்துப் பேசச் சொல்கிறார் எழுத்தாளர் தேவா சுப்பையா. இதெல்லாம் நான் சம்பாதித்த நட்பின் பொருட்டானது. அது விருது அமைப்பிலும் தொடர்கிறது. அவ்வளவுதான்.

**அய்யப்ப மாதவன் நூல் வெளியீட்டில் எங்கள் நவீன இலக்கியத்தின் தமிழருவி மணியன் என்று உங்களை சாரு நிவேதிதா பாராட்டிப் பேச்சைத் தொடர்ந்தார். ஜெயமோகனை ஆசான் எனச் சொல்லும் உங்களைப் பல இடங்களில் அவர் கொண்டாடுகிறார். அப்படியென்ன ஒத்திசைவு?**

சாரு நிவேதிதாவின் கலகக் குரல், பின்



நவீனத்துவப் போக்கு, நீங்கள் நம்புவதை உடைப்பது இவையெல்லாம் பலரால் ஏற்க முடியாது. அதன் அடி நாதம் அதிகாரத்துக்கு எதிரானது என்பதுதான்.

இதுவரை நீங்கள் கொண்டாடிய ஒன்றை அவர் தூக்கிப் போட்டு உடைப்பார், ஒரு காரணம் சொல்லி. அதை அவ்வளவு சீக்கிரம் ஏற்க முடியாதுதானே? ஆனால் தமிழ் இலக்கியச் சூழலில் அவரைப் போல ஒரு ஜனநாயகவாதியை அன்பான மனிதனை நடிக்காத எழுத்தாளனை நான் பார்த்தது இல்லை. எஸ்.ராமகிருஷ்ணனை ஜெயமோகனை புதியதாக எழுத வந்துள்ள ஒருவன் நேரடிச் சந்திப்பில் பெயர் சொல்லி அழைத்துப் பேசமுடியுமா தெரியல. ஆனா சாரு நிவேதிதாவை... சாரு என்று அழைத்துப் பேச முடியும். நீங்க ஸார் என்றால் சாருன்னே கூப்பிடலாம் என்பார்.

காந்தத்தில் வடக்கு தெற்கு போல இலக்கியத்தில் ஜெயமோகனும் சாருவும். இந்த முரண்தான் காந்தத்தின் இலக்கியத்தின் இயக்கம்.

என் நண்பன் ஒருவனின் குடும்பம் வைஷ்ணவ நம்பிக்கை கொண்ட இந்து குடும்பம். ஒருமுறை ஒரு நண்பர் அன்பளிப்பாகக் கொடுத்த வெள்ளி சிவனின் சிலையை அந்த நண்பரின் மனைவி வாங்க மறுத்துவிட்டார். சிவன் எப்போதும் ஆட்டத்தில் இருப்பவன், இடுகாட்டுக்காரர், ஞானத்துக்கானவர், அவர் என் வீட்டில வேண்டாமே என்றார். எதுக்கு இந்த உதாரணம்... யாரும் தத்தமது நம்பிக்கை உடைபடுவதை விரும்புவது இல்லை, உடைப்பவரை ஏற்பதும் இல்லை. நானே விஷ்ணு கோவிலுக்குப் போக மாட்டேன். எனக்கு அவர் மனரீதியாகப் பொருந்தமாட்டார். அக்காலத்தில் நடந்த சைவ – வைணவ மோதலை நீங்கள் நினைத்துப் பார்த்தால் நான் பொறுப்பில்லை. ஆக, சாரு அந்த வைஷ்ணவ வீட்டில் ஏற்க மறுத்த சிவன் மாதிரி எனலாம்.

**ஆன்மீகம், சித்தர் வழிபாடு, ஜீவ சமாதி தேடல் இப்படியாக உங்கள் இன்னொரு முகம் எப்படி அமைந்தது? அதனால் பெற்றது என்ன?**

எனக்கும் சாமிக்கும் ரொம்ப தூரம். வீட்டில் சாமி கும்பிடும்போது நிற்பதோடு சரி. இன்னும் கேட்டால் அப்போ பெரியார்தாசன்தான் எனக்கு ஆகச் சிறந்த ஞானவான். அவரை அழைத்து கவின் கவி என்ற நண்பனுடன் சேர்ந்து இரண்டு கூட்டம் வியாசர்பாடியில் ஏற்பாடு செய்தவன் நான்.

தூக்கத்தை விட தொழுகை மேலானது என்று காலை அஞ்சு மணிக்கு ஒலிப்பெருக்கியில் சொல்கிறாயே, நைட் ஷிப்ட்டில் கண் விழித்து வேலை பார்த்துவிட்டு நாலு மணிக்கு வீட்டுக்கு வந்து படுக்கிறவனைப் பார்த்துக் கேளு, தூக்கம் முக்கியமா தொழுகை முக்கியமா என்று கேட்ட பெரியார்தாசன், பின்னாளில் இஸ்லாமுக்கு மாறித் தொழுகையின் அவசியம் குறித்துப் பேசியதைக் கேட்டு நாத்திகத்தை நக்கலோடு பார்த்துக் காலத்தின் மீது கவனம் குவித்தவன் நான்.

பத்திரிகையாளன் ஆல் ரவுண்டரா இருந்தால்தான் நீடிக்க முடியும். எனக்கு அரசியல் பிடிக்காது, நான் சினிமா எழுதமாட்டேன் என்றால் அங்கு அவனுக்குப் பணி இல்லை. ஒருமுறை ஆன்மீகம் எழுதத் தெரியுமா என நிர்வாகம் கேட்டபோது, அதெல்லாம் எனக்கு சாதாரணம் என்று வீம்பாகச் சொன்னபோது, சரிஜி

சித்தர்கள் பற்றிப் பதினாறு வாரம் தொடர் எழுதுங்க, வாரம் நாலு பக்கம் உங்களுக்கு ஒதுக்குறோம் என்றபோது பத்திரிகையில் என் இருப்பை நிலைநாட்ட, என் பணியைத் தக்கவைக்க, எனக்கு எதுவும் எழுதத் தெரியும் என நிரூபிக்கவே சித்தர் பற்றித் தேடத் தொடங்கினேன். அதற்காகவே திருமந்திரம், திருவாசகம், சித்தர் பாடல்கள் படித்தேன். பின்னர் அதற்குள் நானே மூழ்கிப்போனேன். பல புதிய திறப்புகள் அவதானிப்புகள் கிடைத்தன. நிர்வாகமும் என் மீது மதிப்பு வைத்து நிறைய சுதந்திரம் அளித்தது. ரொமாண்டிக்கான சூர்யாவின் இன்னொரு ஜன்னல் இப்படியான சித்தர் ஆன்மீகம். ஆக இது கூட திட்டமிடல் இல்லை, காலத்தின் நகர்த்தல்தான்.

இதனால் பெற்றது என்ன? விளக்கமாகச் சொன்னால் சபை பிரசங்கம் போல ஆகி விடக்கூடும். அது உணர்வது, நிறைவது, உவகை கொள்வது, பிறர்க்கு அளிக்கும் வல்லமையைப் பெறுவது.

**சாபம், ஜென்மம், அமானுஷ்யம் பேசும் பழமைவாதியாக இருப்பதால் ஏதேனும் ஒரு தனிமையை இலக்கியச் சூழலில் நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?**

இலக்கியங்கள்தான் நமது இனத்தின் ஞான விளக்கு, அழியாச் சொத்து என்றால் "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து" என்று ஏழு பிறவி பற்றிப் பேசிய திருக்குறளை முட்டாள் குறள் என்று சொல்ல முடியுமா...

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்று பேசிய சிலப்பதிகாரத்தைப் பழசு என்று குப்பையில் போடணுமா.. ஆக இங்க புதுசுன்னு எதுவும் இல்ல. பழசை பாலிஷ் போட்டு வாழுறோம், அவ்வளவுதான்.

முன் பின் பார்த்திராத எண்பது வயது சிற்பி கணபதி ஸ்தபதி முதல் முறையா என்னைப் பார்த்துட்டு, 'டேய் எப்படி இருக்கே, எவ்வளவு சந்தோசமா இருக்கு உன்னைப் பார்க்க? சோழப் பேரரசில் பெரிய கோவிலைச் செதுக்கும்போது உன்னைப் பார்த்தது' என்று சொல்லி அருகே அமரவைத்து என் விரல்களை அன்போடு நீவிவிட்டு 'நலமா தூதுவனே' என்றபோது அவரை லூசு என்பதா? இல்லை இதை நம்பும் நான் லூசா...

சதுரகிரி மலையில் நடந்து செல்லும்போது சடா முடியுடன் ஒரு அம்மா, "கனவு தொல்லையா, எப்பவும் ஒரு பெண் அழும் குரல் கேட்குதா, கவலைப்படாதே. இனி அப்படி கேட்காது, கனவும் வராது, சரியா போ மலை மேல" என்று தானாக வந்து திருநீறு பூசி என் கனவை மோப்பம் பிடித்துச் சொல்ல முடியுமா? இதை ஏன் நான் ஆராயணும்? இப்படி எத்தனையோ சம்பவங்கள் எனக்கு நிகழ்ந்திருக்கு... ஆக முதல்ல திருக்குறள் சிலப்பதிகாரம் இன்ன பிற பழமைவாதப் பிரதிகளைத் தூக்கிப் போட்டுட்டு அப்புறமா என்னிடம் பழமைவாதம் பற்றிக் கேட்கணும்.

அப்புறம் இங்கே இந்த இலக்கிய வெளியில் தனிமை என்பது செயற்கையாகத் திணிக்கப்படுவது. பொருளாதாரத்தால் சாதியால் குழு அரசியலால் ஒரு படைப்பாளி மீது எதன் பொருட்டாவது எங்களோடு இரு, இல்லை தனியா போ, உனக்கென்று சொந்தக் கருத்து கூடாது என்று தனிமையைச் செலுத்துவார்கள். படைப்பாற்றலைப் பொருத்தவரை எதுவும் தனிமையில்லை. வானத்தில் வட்டமிடும் ஒற்றைப் பறவை தனிமையிலா இருக்கும்? அதன் ஒரே இருப்பு மகிழ்வு விடுதலை அந்த வானம்தான். அது வானத்தில் தனியா இருக்கு என்பது பார்ப்பவரின் அறியாமை. இந்தத் தனிமை குறித்து மாஸ்டர் சந்ரு நிறைய பேசி வரைந்து இருக்கார்.

**இலக்கிய அரசியல், எழுத்தின் நுண் அரசியல் எல்லாம் விடுங்கள். நேரிடையாகச் சொல்லுங்கள், அரசியலில் நீங்கள் எதன் பக்கம் இருப்பீர்கள்?**

நான் கடவுளை நம்புகிறவன். சிவ

வழிபாட்டில் சித்தர் வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவன். அதே நேரம் நான் மற்ற மதத்துக்கு எதிரானவன் அல்ல. இதை யார் மதிக்கிறார்களோ.. தலித் மக்களுக்கு யார் பாதுகாவலாக இருப்பார்களோ, சிறுபான்மையினருக்கு யார் ஆதரவாக இருப்பார்களோ, அமைதியான தமிழகத்துக்கு யார் வழி வகுப்பார்களோ, அந்த அரசியல் இயக்கத்துக்கு நான் ஆதரவாளன். அவ்வளவுதான்.

**எழுத்தும் பேச்சுமாகக் கட்டமைந்த உங்கள் வாழ்வில் இலக்கிய வெளி உங்களுக்கான அடையாளத்தை கௌரவத்தை வழங்கியிருக்கிறதா? இலக்கியம் உங்களுக்கு என்னவாக இருக்கிறது?**

கவிஞர்கள் பட்டியலிடும்போது என்னை எழுத்தாளர் என்ற வகைமைக்கு நகர்த்திடுவாங்க. எழுத்தாளர் லிஸ்ட் போடும்போது பத்திரிகையாளர் என்ற அடையாளத்துக்கு மாத்திடுவாங்க. பத்திரிகையாளரா என்றால் இப்போ அமிர்தம் சூர்யா இலக்கியப் பேச்சாளன் என்ற பட்டியலுக்குக் கடத்திடுவாங்க.

ஞானக்கூத்தன் ஒருமுறை என்னிடம் சொன்னார். கவிதை என்றால் கவிதையில் இருங்க... இப்படி கதை நாடகம் ஓவியம் பேச்சு எல்லாவற்றிலும் இயங்கினால் அடையாளச் சிக்கல் வரும் என்றார். எனக்கு அடையாளமோ பெயர் புகழோ முக்கியமில்லை. எனக்கு எதுவெது தெரிகிறதோ அதையெல்லாம் செய்கிறேன். எழுத்தும் பேச்சும் என் இருப்பு. நாளை மரணம் என்று தெரிந்த ஒருவன் எப்படி இந்த நாளை வாழ்ந்து தீர்த்துவிடுவானோ அப்படி பேராவலோடு இந்தக் கணத்தை பொழுதை வாழ்ந்து தீர்த்துவிடுகிறேன். இலக்கியம் எனக்கு இருப்பு, எனக்கு பேஷன், எனக்கு வாழ்வு... அவ்வளவுதான்.

**உங்களுடைய இந்தப் பயணத்தில் குடும்பத்தின் பங்கு என்ன?**

ஒரு சில நவீன இலக்கியவாதிகள் போல் நாடோடியா விட்டேத்தியா வேலை செய்யத் தயங்கிப் பொறுப்பை ஏற்கப் பயந்து அதிலிருந்து தப்பித்து மகா கலைஞனாக மாறிச் சுழலும் தன்மையை இறைவன் எனக்களிக்கவில்லை. அதை அவர்களின் குறை என்றுகூட சொல்லமாட்டேன். காலத்தின் கட்டளை அது. கல்கியில் இருந்தபோது கிரேஸி மோகன் போன் செய்து இலக்கியம் தெரிந்த ஒரு உதவி இயக்குனர் வேணும்னு கே.எஸ்.ரவிக்குமார் கேட்டார், உடனே வாங்க சூர்யா, நான் சேர்த்துவிடறேன், இதை விட இரண்டு மடங்கு சம்பளம், நான் கேரண்டி, படிப்படியாக முன்னேறிடலாம் என்றார். நானோ இல்லங்க ஜி, என் பிள்ளைகள் பொறியியல் சேர்ந்து இருக்காங்க. அவர்கள் படித்து ஒரு வேலை தேடும் வரை எனக்கு உத்திரவாதமான இந்த வேலை முக்கியம் என்று வாய்ப்பை நிராகரிச்சுட்டேன். நான் பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக இருந்தேன். இன்று என் மகன்களும் அவ்விதமான பொறுப்புகளுடன். என் இலக்கியச் செயல்பாடுகளில் அவர்களின் குறுக்கீடு ஏதும் இல்லை. ஆதரவான கொண்டாடும் மனநிலையே அவர்களிடம் உண்டு. ஒற்றை வரியில் நான் விதைத்ததை இன்று அறுவடை செய்யும் பாக்கியத்தைக் குடும்பத்தில் இறைவன் எனக்களித்துள்ளான்.

**உங்கள் இலக்கு, எதிர்கால லட்சியம் என்ன?**

இதுவரை எதையும் நான் திட்டமிட்டது இல்லை. காலம் எப்படி அழைத்துச் செல்கிறதோ அப்படி...

சலசலத்து ஓடும் ஓடையில் மிதந்து செல்லும் சருகு போல் என் பயணம். என் கவிதையில் ஒரு வரி..

...இப்படியின் அமானுஷ்யத்தை
உணரும் கணம் எது?
எனக்கெப்படி தெரியும்
எதனையும் தொற்றிக்கொண்டு பயணிக்கும்
நாயுருவி விதை தரையைத் தொடப்போகும்
அந்த க்ஷணம்.

■

ஆனந்தராஜ்



உன்னிடம் நான் கொண்ட நேசத்தை
அது அதுதான் என நான் அறிந்துகொள்ள
எனக்குத் தேவைப்படுகிறது ஒரு நூற்றாண்டு
எனக்குத் தெரிந்ததை உன்னிடம் சொல்ல
எனக்குத் தேவைப்படுகிறது இன்னொரு நூற்றாண்டு
இறுதியில் சொல்ல நினைத்த என்னை நீ ஏற்றுக்கொள்ள
உனக்குத் தேவைப்படலாம் இரண்டு நூற்றாண்டுகள்
நெடிதுயர்ந்த கோயில்படிகளில்
மெல்லக் கீழிருந்து மேல்நோக்கிக் குதித்துச் செல்கிற
ரப்பர் பந்தெனப் பயணிக்கிறது நமது காதல்.



நீ எனக்கு அப்படித்தான் என்பதுபோல இருக்கிறது
ஆனால் நீ அப்படியல்ல என்பதுபோலவும் இருக்கிறது
முழுமையின்மையின் தாக்குதலால் பலவீனமடையும்
எனதுடலைச் சமாதானப்படுத்தி
தயங்கி விரையும் ரயிலின் சன்னல் கம்பிகளினூடே
நுழைந்து வெளியேறி உன்னைத் தேடத் துவங்கிவிட்டது
உனக்குச் சொந்தமாகிவிட்ட எனது மனம்.
இன்றைய நாள் இப்படித்தான் துவங்குகிறது.
சிவப்பு இட்லிப்பூ செடியின் அடித்தண்டினைத்
தொடர்ந்து பிறாண்டிக்கொண்டிருக்கிறது ஒரு பழுப்புப் பூனை



ஆத்தா நா பாஸாயிட்டேன்

தொடர்-3

ஆண்டன் பெனி

# மொட்டை மாடி கல்பனா

உண்மை பொய் இரண்டுக்கும் பெரிய வேறுபாடு கிடையாது. வாழ்தலின் பொருட்டு, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் அவை.

நான் மட்டுமா பொய் சொல்கிறேன்? என்கிற தற்காப்புச் சொல் இருக்கிற வரையிலும் பொய் ஒருபோதும் அழியாது. வாருங்கள், பொய்கள் பற்றிக் கொஞ்சம் விரிவாகப் பேசுவோம்.

‘என் புள்ளைய நான் அப்படி வளர்க்கல’ அம்மாவின் பொய்.

‘என் புருசன் வெவரமானவரு’ மனைவியின் பொய்.

‘பிரெண்டு வீட்டுக்குப் படிக்கப் போறேன்’ ஒரு பிள்ளையின் பொய்.

‘நான் எப்பவோ வீட்டுக்குக் கிளம்பிட்டேன்’ கணவனின் பொய்.

இந்தப் பிரபஞ்சத்தில் அதிகமாகப் பொய் சொல்கிறவர்கள் வழக்கறிஞர்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அது இலக்கியவாதிகள்தான். அவர்களின் ‘நான் உன்னை மட்டுமே காதலிக்கிறேன்’ என்கிற பொய் மட்டும் இல்லையென்றால் இந்த மாற்றுக்காதல் வாழ்ந்திருக்காது.

காதல் என்பதே முக்கால்வாசி பொய்யும், கால்வாசி உண்மையுமாக உரமிட்டு வளர்ந்த பயிர்.

என்னிடம் இருந்தது நான்கு பொய்கள். அதில் ஒன்றை வைத்துக் காதலித்தேன், இன்னொன்றில் திருமணம் செய்துகொண்டேன், மற்றொன்றில் இலக்கியம் செய்தேன். மீதமிருக்கும் ஒரு பொய்யை என்ன செய்வதென்று தெரியவில்லை. அரசியல் தெரியாது என்பதால் அப்படியே வைத்திருக்கிறேன்.

பொய்யும் உண்மையும் மழை வெய்யில் போல. அதன் வானிலை அறிக்கைகள் மாறுபடும். ஒரு பொய் அதற்கு முந்தைய ஒரு உண்மையால் காப்பாற்றப்பட்டிருக்கும்.

கிராமங்களில் ஒரு சொல்வழக்கு உண்டு. வீட்டிற்குள் பழைய சோறு திங்கிறவன், குப்பைத் தொட்டியில் நெய் தடவிய வாழையிலையைப் போடுகிற அந்தப் பொய்யும் வாழ்தல் பொருட்டே.

அந்த வகையில் எனக்கு மொட்டை மாடி கல்பனாவின் பொய் மிகவும் பிடிக்கும். தான் சொல்வது பொய் என்றாலும் அதை விரும்பி... ஈடுபாட்டோடு சொல்கிற அந்த அழகு பிடித்திருந்தது. அந்தப் பொய் காதலுக்கானது அல்ல... தன் தொழிலில் சிறு அங்கீகாரத்திற்கு மட்டுமே என்பதால் அது தவறில்லை என்றே எனக்குத் தோன்றியது.

இப்படித்தான் உண்மையை விட பொய்கள் எளிதாக மற்றவர்களின் நம்பிக்கைக்கு உரியதாகிவிடுகின்றன.



அரிச்சந்திரனின் பொய் நமக்கு இன்னமும் புரியவில்லை என்பதால் அவனை உலகின் ஒரே உண்மையாளன் என்கிறோம்.

திருமணம் ஆன புதிதில் அரிச்சந்திரன் மனைவி சந்திரமதி : 'சாப்பாடு எப்படி இருக்கிறது நாதா?'

அதற்கு அரிச்சந்திரன் : 'தேவாமிர்தம் போல் என் தேவதையே'.

ஒரே பதிலில் இரண்டு பொய்கள் சொல்கிறான். ஆனால் அது பொதுவெளியில் தெரியாமல் போய்விட்டது. மனைவியிடம் உண்மை மட்டுமே பேசுகிற அல்லது பேசிய கணவன் என்கிற உயிரினம், இன்னும் தோன்றவே இல்லை.

நீங்கள் நினைக்கலாம், 'நீயென்ன கூடவே இருந்தாயா?' என்று. வேண்டியதில்லை, அது பொய்தான் என்று உணர ஒரு திருமணம் ஆகியிருந்தாலே போதும்.

பொய்கள் மிகவும் நம்பிக்கையாக வாழும் இடம் எதுவென்றால்.. அது காதல். சங்க இலக்கிய அகநானூறு புத்தகத்தைப் பிழிந்தால் பக்கத்திற்கு நாலு லிட்டர் பொய்களைப் பிழியலாம்.

ஐபிஎல் விளையாட்டில் வீசப்படும் ஒவ்வொரு டாட் பாலுக்கும் ஐநூறு வீதம் நடப்பட்ட மரங்கள் பாவம் எங்கிருக்கின்றன என்று தெரியவில்லை.

அப்போதுதான் பேசத் தொடங்கியதும் டாக்டராவேன் என்ற குழந்தைகளில் எத்தனை பேர் டாக்டரானார்கள் என்று தெரியவில்லை.

+2 தேர்வில் மாநிலத்தில் முதலாவதாக வந்த மாணவர்கள் 'மருத்துவராகி மக்கள் சேவை செய்வேன்' என்றவர்கள் எங்கு சேவை செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

'மாப்பிள்ளைக்கு எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை, தைரியமா பொண்ணு தரலாம்' என்றும் 'எங்க பொண்ணை நாங்க அப்படி வளர்க்கல' என்றும் உத்தரவாதம் தரப்பட்டவர்கள் எந்தக் கிரகத்தில் குடும்பம் நடத்துகிறார்களோ?

நானே, ஒவ்வொரு நாளிலும் வெளி உலகத்துக்கான என்னுடைய முதல் பொய்யினை, அத்தனை அவசரங்களுக்கு மத்தியிலும், முகத்துக்குப் பவுடர் போட்டுக்கொள்வதன் மூலம் ஆரம்பிக்கிறேன்.

அப்படியென்றால் உள் உலகத்தில்...?

சுவாசிப்பதே அதன் மூலமாகத்தான். ■

ப. தனஞ்செயன்



# பசி வாடை

அன்று என்னவோ கடுமையான குளிராக இருந்தது. ரோட்டோரத்தில் மூட்டம் போட்டாள் மலர்க்கொடி. ஐந்து வயது தாண்டாத ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக அவளோடு சேர்ந்து குளிர் காய்ந்தார்கள். மிக மிக நெருக்கமாக அமர்ந்து குளிர் காய்ந்தார்கள்.

அந்தத் தெருவில் வேறு சிலரும் வாசலில் மூட்டம் போட்டார்கள். கடுமையான பனிப்பொழிவு. அவ்வப்பொழுது மழை வேறு. குளிருக்கு அப்பனின் வேட்டிகளையும் அம்மாவின் கிழிந்த புடவைகளையும் போர்த்திக்கொண்டு அழுக்குத் தலையுடன் குளிர் காய்ந்தார்கள் அந்தத் தெருவில் வசிக்கும் குழந்தைகள். வெப்பத்தை நெருங்கி அணைப்பதே குளிருக்குப் பிரியம்தான். அப்படி எரிந்தது பெரும் சுவாலையுடன் தீ. மூட்டத்தின் எதிரில் அமர்ந்திருந்த சிறுகுழந்தைகள் முகத்தில் கரி படிந்திருந்தது.

குழந்தைகள் இருவரும் மலர்க்கொடி கணவனின் முதல் சம்சாரத்திற்குப் பிறந்தவை என்றாலும் பாசமாகவே பார்த்துக்கொண்டாள் மலர்க்கொடி. அவர்கள் மேல் குளிர் காயும் வெப்பத்தின் வாசனை வீசியது. நெருப்பு கனிந்து நின்றது. மூட்டத்தில் சில சுள்ளிகளையும் கொஞ்சமாகக் காய்ந்த சோலைகளையும் போட்டாள் மலர்க்கொடி.

இவர்களின் பெரும் பொழுது பசியைத் தீர்ப்பதற்கான வேலைகளைப் பார்ப்பதிலேயே கழிந்தது. நன்றாக எரிந்து வெப்பத்தைக் கக்கியது மூட்டத்திலிருந்து வந்த வெப்பம்..

இதமாகக் குளிர் காய்ந்தார்கள். வெப்பத்திலேயே தன் பொழுதுகளைக் கழித்தாலும் குளிருக்காக வெப்பத்தைத் தாங்குவது இதம்தான் அவர்களுக்கு. சற்று நேரத்திற்குப் பிறகு, எரிந்துகொண்டிருந்த நெருப்பில் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்தாள் மலர்க்கொடி.

அவ்வளவு விடியக்காலையில் அவள் கணவன் ஏழுமலை, சாராயக் கடைக்குச் சென்று திரும்பி நடந்து வந்துகொண்டிருந்தான். இரவு முழுவதும் சாராயக் கடைக்கு நடந்து செல்வார்கள் அந்தத் தெருக்களில்.

அதிகாலை சாராயக் கடைக்குச் சென்று, எதிரில் தென்படுபவர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டு, எப்பொழுதும் சாராய வாடை வீசிக்கொண்டே இருக்கும் அந்த வீதி. சாராயம் குடித்துவிட்டுப் பிறர் பற்றிய கவலைகள் எதுவும் இல்லாமல் ஆடிச்செல்வது ஒன்றும் புதிதல்ல. வாழ்வதை விட, போதை ஒன்றுதான் அவர்களுக்கு வேண்டியது. சாராயத்தின் ருசி அவ்வளவு பிடிக்கும். சாலை நெடுக அனைவரிடமும் பேசிக்கொண்டும் தானாகப் பேசிக்கொண்டும், கூடவே ஆடிக்கொண்டும் நடந்து வந்தான் ஏழுமலை. இவனைக் காணும்போதே உள் மனதில் நகைப்புடன் பேசுவார்கள் நாகரீகக் குடிகாரர்களும், அந்தத் தெருவில் சிலரும்.

எந்த ஊருக்குப் போனாலும் இந்த மாதிரி சாராயக் கடையும் கள்ளுக்கடையும் அருகருகே பார்க்க முடியாது என்பது ஏழுமலையின் வாதம். அது உண்மையும் கூட. புதுவையில் நீண்டகால வரலாறே இந்தச் சாராயக் கடையும் கள்ளுக்கடையும்தான். கீற்றுக் கொட்டகையை நல்ல உயரத்தில் காற்று ஓட்டமாகப் போட்டிருப்பார்கள். கடைக்கு எதிரே வெளியில் இருந்து யாரும் பார்க்காத மாதிரி கீற்றால் மறைப்பு கட்டியிருந்தார்கள். சினிமா தியேட்டரில் டிக்கட் கவுண்டர் போல், மூன்று கல்லா போட்டு நல்ல இடைவெளி விட்டுச் சாராயம் ஊற்றித் தர மூவர் அமர்ந்திருப்பார்கள்.

கல்லா எதிரில் தரை முழுவதும் மணல் பரப்பி இருப்பார்கள். குடிக்க வருபவர்கள் அந்த மணல் தரையில் அமர்ந்து நீண்ட நேரம் கதை பேசுவார்கள். சாராய வாடை அப்படி வீசும், அந்த இடத்தில். சிலரிடம் கதைகளைப் பேசிவிட்டு நடந்து வந்தான் ஏழுமலை.

கையில் பணம் தீரும் வரை குடிப்பான். சில நேரம் பனங்கள்ளையும் தென்னங்கள்ளையும் குடிப்பான். சாராயம் குடித்துவிட்டுக் கைலியிலிருந்த மணலைத் துடைத்துக்கொண்டே எழுந்து நடந்து வந்தவன் சும்மா நடந்துவர முடியவில்லை. அந்தத் தெருவில் குளிர் காய்ந்தவர்களிடம் வம்பு வாங்கினான்.

வீட்டிற்கு வந்தவன் “இந்தா மலரு.. நீ கொஞ்சம் குடிடீ” என்றான்.

“யோவ் காலையிலே வா, புள்ளைவோ வேற பாக்கிதுவோ யா,” என்றாள்.

“இந்தா புடி, நீ கொஞ்சம் குடி” என்றான். அவளும் சாராயப் பாக்கெட்டை வாங்கிப் பிள்ளைகளுக்குத் தெரியாமல் உள்ளே பானையில் மறைத்து வைத்தாள். வெளியில் மூட்டமும் அணைந்து புகைவிட்டது. அதற்குள் அந்தப் பக்கமாகக் குரல் வந்தது. வந்தவன் கங்காணி மஞ்சினி.

“யோவ் வாயா ஏழுமலை, நாளைக்குப் பக்கத்து ஊரு மாப்பானை ஊட்டுக் கரும்புத் தோட்டம் வெட்டோணும்.. முதல் நாளே போய்க் கொட்டா போடோணும்” என்றான் மஞ்சினி.

“சரி போகலாம் மாமா” என்றான் ஏழுமலை.

“கத்திய கொஞ்சம் சாணை புடிக்கணும். ஏதாவது கொடுத்துட்டுப் போயேன்... மாமா” என்றான் ஏழுமலை.

“ஏற்கனவே வாங்கி வச்சிக்கரது எல்லாம் போதும். கௌம்பு நாளைக்குக் காலையிலேயே” என்றான் கங்காணி.

“சரி மாமா” என்று உதட்டைப் பிதுக்கினான் ஏழுமலை.

“சும்மா இருய்யா” என்றாள் மலர்.

“ஏன் மலரு, கொஞ்சம் கோழிக்கறி வைச்சு சாப்புடணும். அப்படியே எண்ணெய் தேய்ச்சித் தலை குளிக்கணும். போனா எப்படியும் ஒரு மாசம் ஆயிடும்” என்றான்.

“சரி, இருய்யா” எனப் பேசிக்கொண்டே, அரிசி கொட்டியிருந்த பானையில் கைவிட்டு அரிசியைக் கிளறி ஏதோ தேடினாள் மலர்க்கொடி.

சிரித்தான் ஏழுமலை.

“ஒன்னும் இருக்காது. இப்பத்தான சாராயத்திற்கு எடுத்தேன்” என்றான்.

முறைத்தாள் மலர்க்கொடி.

“நான் போய்க் கடன் சொல்லி வாங்கி வரேன்” என்று கிளம்பினான்.

“யோவ் அப்படியே செட்டியார் கடையில எண்ணெய்ப் பாக்கெட், சீக்கா வாங்கி வந்துரு” என்றாள். தலையாட்டிவிட்டு நடந்தான்.

வழியில் அத்தியூரான் மீன்களை ஒரு கையில் பையிலும், மற்றொரு கையில் மீன் தூண்டிலோடும் வந்துகொண்டிருந்தான். யாராவது குளத்தையோ, ஏரியையோ

ஓவியங்கள் : அமு.ரஜினிகாந்தன்

குத்தகை எடுத்திருந்தால் அதைப்பற்றி எந்தக் கவலையும் படமாட்டான் அத்தியூரான்.

எப்படியாவது இரவு நேரங்களில் மீன்களைப் பிடித்துக்கொண்டு விடியும் முன்பே யார் கண்களிலும் படாமல் விற்றுவிடுவான். பெரும்பாலும் மீன்களை எல்லாம் நிலச் சுவாந்தர்களிடம் விற்றுவிடுவான்.

அத்தியூரான் பிடித்து வரும் விரால் மீன்களை அவர்கள்தான் வாங்குவார்கள். மற்றவர்களுக்கெல்லாம் குறவையும் கெண்டை மீனும்தான்.

நடந்து வந்த அத்தியூரானை வழி மறித்த ஏழுமலை, “ஒரே ஒரு விரால் மீனைக் கொடுணே” என்றான்.

“டேய் ஏழுமலை, இந்த விலைக்கு வாங்க மாட்ட நீ” என்றான் அத்தியூரான்.

“நாளைக்குக் கரும்பு வெட்ட வெளியூருக்குப் போறேன். வந்து காசைக் கொடுத்துவிடறேன் ணே” என்றான்.

“டேய் கடன் எதுவும் கேட்காத... வேணும்னா பணம் கொடுத்து வாங்கிக்கோ” என்றான் அத்தியூரான்.

“இரண்டு பாக்கெட் சாராயம் வச்சிருக்கேன். வூட்டுக்கு வாணே” என்றதும் இருவரும் நடந்தார்கள்.

“மலர்க்கொடி, அந்தப் பாக்கெட்டை எடுத்து வா” என்றான் ஏழுமலை.

ஒன்றை மட்டும் எடுத்து வந்தாள் மலர்க்கொடி.

“இரண்டு கொடுத்தனேடி” என்றான் ஏழுமலை.

“இப்பத்தான் ஒன்ன...” என இழுத்தாள் மலர்க்கொடி.

“ம்...ம்..” என்றான் ஏழுமலை.

“டேய் எனக்கு இதெல்லாம் பத்தாது” என்றான் அத்தியூரான்.

“விரால் மீனு எசமான் ஊட்டுக்கு. கெண்டை குசுமாதான் இருக்குது, இந்தாடா...” என்று சில மீன்களைக் கொடுத்துவிட்டு, “கரும்பு வெட்டி முடிஞ்சிட்டாக் கொடுத்துடு பா. கொடு அத” எனச் சாராயப் பாக்கெட்டை வாயில் வைத்துக் கடித்து இழுத்தான் அத்தியூரான்.

எப்படியோ அவனாண்ட கொஞ்சம் மீன்களைச் சாமர்த்தியமாகப் பேசி வாங்கினான் ஏழுமலை.

“எனக்கு ஒரு யோசனை தோணுது. கரும்பு வெட்டற ஆளுக்குச் சாப்பாடு செய்ய நீயும் எங்க கூட வந்துரேண்ணா” என்றான் ஏழுமலை.

“போடா டேய், அந்த ஊரு மாப்பானை பொல்லாதவன். அவனுக்குக் கள்ளும் மீனும் ஆக்கிப்போட்டு மாளாது” என்றான் அத்தியூரான்.

“தோட்டம் பெரிசு...ணா, கொஞ்சம் சம்பாதிக்கலாம் வா.”

“அடப்போடா, இங்கேயே திருட்டுத்தனமாக் கொஞ்சம் மீன புடிச்சமா வித்தமான்னு பொழப்பு ஓட்டுனா போதும். போயிம் போயிம் அந்தப் பொல்லாதவன் கிட்டக் கரும்பு வெட்டப் போனா, அவ்வளவுதான்.

என்னமோடா.. நிலம், வசதி, பணம் எல்லாம் இருந்தும் அதை எப்படி தனக்கும் மத்தவங்களுக்கும் உபயோகப்படுத்தறதுனு தெரியிலடா எவ்வளவோ மனுஷங்களுக்கு. டேய் மாப்பானை நம்மள ஒருவழி பண்ணிடுவானே டா, சரி நீ இந்த அளவு சொல்லற, பார்ப்போம் டா. இந்த மீனை வித்திட்டு வரேன்” எனக் கிளம்பினான் அத்தியூரான்.

“செரிணா, நானும் என் பொண்சாதியும் உனக்கு ஒத்தாசையா இருக்க மாட்டோமா. வா... போய்ப் பார்ப்போம்” என்றான் ஏழுமலை.

“சரி சரி... அப்புறம் வரேன்” என்று மீன்கள் உள்ள சாக்கைத் தோளில் மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

மீன் விற்று முடித்த பணத்தில் அன்று இரவு முழுவதும் ஏழுமலையும் அத்தியூரானும் நன்றாகச் சாராயம் குடித்தார்கள்.

சாராயக்கடை மணலிலேயே படுத்துக்கொண்டு பேசினார்கள். ஒருவழியாகக் கரும்பு வெட்ட, சாராயத்தின் மேல் சத்தியம் செய்து சம்மதித்தான் அத்தியூரான்.

அத்தியூரானைச் சம்மதிக்கவைத்து, அழைத்துக்கொண்டு மறுநாள் கரும்புத் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தார்கள் கரும்பு வெட்டும் தொழிலாளிகள்.

குடும்பம் குடும்பமாகச் சிறிய கூடாரங்களைக் கரும்புத் தோட்டத்திற்கு முன்பாக இருந்த தார்ச்சாலையின் ஓரமாக அமைத்தார்கள்.

கையில் கிடைக்கும் சிறு குச்சிகளைக் கொண்டும் தோட்டத்தில் உள்ள கருப்பஞ் சோலைகளைக் கொண்டும் சிறிய கூடாரங்களை அமைத்துத் தங்கியிருந்தார்கள். கூட்டமான கூடாரங்களாக இருந்தாலும் ஒன்றாக உலை வெந்தது. அனைவரும் பொண்டாட்டி புள்ளைகளோடு சாப்பிட்டார்கள். அன்று முதல் நாள் என்பதால் வந்த களைப்பில் தூங்கிப்போனார்கள்.

இரவில் அவர்கள் தங்கியிருந்த குடிசைக்குள் சூரியனும் நிலவும் ஓய்வெடுத்தன.

“யோவ் தூங்குயா. இங்க வந்தும் சாராயம்தானா. நாளைக்கு ஊத்திக்க, மிச்சம் வை, நாளைக்கு வேணும்மில்ல” என்ற மலர்க்கொடியின் குரலோடு அனைவரும் தூங்கிப்போனார்கள்.

அந்திக் கருக்கலை விட ஆழமாக இருந்தது அவர்களின் அன்றைய இருள். விடியலுக்கான சில மணிநேரங்கள். இது அமாவாசை விடியல்தான். நாலரை மணிக்கு அத்தியூரானும் ஏழுமலையும் கண்காணி மஞ்சினியை எழுப்பினார்கள்.

“யோவ் மாமா எழுந்திரியா. கற்பூரம் ஏத்திட்டுப் படைக்கணும். ஆளுவ வந்து சேறதுக்குள்ள படையா... வா” என்றதும் கோவணத்துடன் எழுந்து வந்து குடிசைமேல் கிடந்த வேட்டியைக் கட்டினான் மஞ் சினி. கத்தியையும் படையல் சாமானையும் எடுத்துக்கொண்டு கூடாரத்திலிருந்து கரும்புத் தோட்டம் நோக்கி நடந்தார்கள். இரண்டு கரும்பைப் பிடித்துத் துண்டைக் கட்டினான் மஞ்சினி. மஞ்சள் சிகப்பு வைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபட்டார்கள்.

“வயித்துப் பொழப்புக்குக் கந்த கட்டி

கடைசி நாள் கணக்கு பார்த்து

கஷ்டமெல்லாம் தீரோணுமடா சாமி

காசி கொஞ்சம் மீரோணுமடா சாமி”

என்று பாடிக் கும்பிட்டார் கரும்பு வெட்ட வந்த பெரியவர் ராஜமாணிக்கம். அவரைக் காத்தாடினு அந்தத் தெருவில் அழைப்பதும் வழக்கம்.

“யோவ் காத்தாடி மாமா, முதல் கொட்டு போடேன்” என்று சொன்னான் கங்காணி மஞ்சினி.

“மச்சான் நீயே போடுப்பா, உன் கைராசிதான் தோட்டம் சீக்கிரம் வெட்டி முடிச்சி வூட்டுக்குப் போய்ச் சேரோணும்” என்றது காத்தாடியின் குரல்.

கத்தியை எடுத்து முதல் கொட்டு போட்டான் மஞ்சினி. கருப்பஞ்சோலை சலசலவென வீழ்ந்தது. சேவல் கத்தியது.

அவர்கள் வெட்டும் தோட்டத்திற்கு அருகில் ஆலைச் சங்கு ஒலித்தது. டக் டக் எனக் கத்திச் சத்தம் கேட்க ஆரம்பித்தது.

முதல் நாள் கரும்புகளை வெட்டிக் கத்தை கட்டி அடுக்கி வைத்தார்கள். வண்டி நாளைக்குத்தான் வரும். நாளைக்குக் காலையில ஏத்திவுட்டுட்டுக் கரும்பு வெட்டலாம் எனப் பேசிக்கொண்டே அன்றைய வேலையைச் சாயங்காலம் ஆறு மணிக்கு ஆலைச் சங்கு அடித்தவுடன் முடித்தார்கள்.

எங்கோ சென்றிருந்த இரவு திரும்பியது. இரவின் பிடியில் கத்திகள், குடிசையின் எரவாணத்தில் தூங்கின. குடிசை முழுவதும் சாராய வாடை. எத்தனை ஆயிரம் கரும்புகளை வெட்டியிருக்கும் இந்தக் கத்திகள், இந்தக் கைகள். அது ஓய்வெடுப்பது எவ்வளவு அழகு. கரும்பு வெட்டும் ஆட்களுக்குச்

சாப்பாடு செய்தான் அத்தியூரான்.

“காலமெல்லாம் கரும்பு வெட்டி
கஞ்சி குடிக்கக் கத்தி தட்டி
கருப்பங்கத்தை கட்டி வச்சி
காஞ்ச சோலையா
காஞ்சிப் போச்சி ஏம்மனசு
காஞ்ச வயிறு பொஞ்சாதி
கனத்த மார்பு துக்கத்தில
நடு சரவு கருப்பங்காலுல
அம்மணமா கொழந்தை தூங்க
அடிக்கடி எட்டிப் பார்த்தா பொஞ்சாதி
மெல்லக் காத்து வடக்கால வீசுதிங்க
சாறு புழிஞ்ச வெறும் சக்கையாட்டம்
எங்க கூட்டம்
சல்லித் துணி சுத்திக் கட்டி
கூடாரம் கட்டித் தங்கி
அந்தி சாயக் கரும்பை ஏத்தி
ஆலைக்கு அனுப்பி வச்சி
சாராயம் ஊத்திக்கிட்டு
செங்கல்லை அடுப்பு மூட்டி
கவள மீனு குழம்ப வச்சி
கவலையோடு கரும்பு வெட்டி
கனமான கத்தை கட்டி
கடங்காரனைத் தினம் நினச்சி
வாங்கின மிம்பணம்...
வயித்திக்கே செரியாப்போச்சே...”

என மலர்க்கொடி பாடிக்கொண்டே தான் வெட்டிய காய்களை அத்தியூரானிடம் கொடுத்தாள். மலரின் இரண்டு கண்களிலும் கண்ணீர் கனத்து ஓடியது.

அந்தப் பாடல் கேட்கும் தொலைவில் வந்த மாப்பானை, மலர்க்கொடியை முறைத்தான். ஆட்களோடு அமர்ந்து நன்றாக வயிறுமுட்டச் சாப்பிட்டுச் சாராயம் குடித்தான். அங்கேயே படுத்தும் கொண்டான்.

மறுநாள் காலை கரும்பை வண்டியில் ஏற்றிவிட்டார்கள். மீண்டும் கரும்பை வெட்டினார்கள். கரும்புத் தோட்டம் முழுவதும் வெட்டி முடித்த பிறகு காய்ந்த சோலைகளில் தீ பரவி எரிய ஆரம்பித்தது. மீண்டும் கருப்பந்தோட்டம் முளைய ஆரம்பித்தது. சந்தோஷமாக இருந்தான் மாப்பானை. பசியோடும் தேடலோடும் கிளம்பி ஊர் வந்து சேர்ந்தான் கங்காணி மஞ்சினி.

சில நாட்களுக்குப் பிறகு சாராயத்தைக் குடித்துத் தள்ளாடி வீடு வந்தவன் பயந்தான். இருவர் தூரமாக பிளசரை இரண்டு தெருவுக்கு முன்னதாக நிறுத்தி வைத்துவிட்டு ஏழுமலையின் சட்டையைப் பிடித்தார்கள். “யோவ் விடுயா” என்று கத்தினான் ஏழுமலை. விடுவதாக இல்லை வந்தவர்கள். சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். “சாமி விட்டுடுங்க சாமி” எனக் கெஞ்சினான் ஏழுமலை. தெருவே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

விசாரித்ததில், வந்தவர்கள் ஆந்திரா கங்காணியாம். ஆந்திராவில் கரும்பு வெட்ட அட்வான்ஸ் வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லிச் சிங்கப்பல் தெரியச் சிரித்தான் இந்த ஊர் கங்காணி மஞ்சினி. குற்றவாளியை இழுத்துச் செல்வதைப் போல ஏழுமலையை இழுத்துச் சென்றான் சித்தூர் கங்காணி ஒருவன். சாராயக் கடையைப் பிளசர் தாண்டும்பொழுது அழுதான் ஏழுமலை.

வழக்கமாக ஏழுமலையைப் பற்றி ஏதேதோ பேசிவிட்டு இரண்டு நாள்களில் மறந்துபோனார்கள் அந்தத் தெரு வாசிகள். கருப்பங்காட்டை நினைத்தவாறே பிளசரை விட்டு இறங்கி நடந்தான் ஏழுமலை.

கருப்பங்காடு ஏழுமலையின் வாடையைக் கண்டுகொண்டு மௌனமாக அசைந்தது. தூரத்தில் யாரோ நடந்து வருவதைப் பார்த்து அழுத முகத்துடன் புன்னகைத்தான் ஏழுமலை. ■

உலக சினிமா

தொடர்-57




கவிஜி

# நமக்குள் நம்மைப் பேசவைக்கும் திரைமொழி

திரைப்படம் :

## The Color of Pomegranates

மாய யதார்த்தத்தின் விழி மொழியில் 18ஆம் நூற்றாண்டின் கவிஞன் ஒருவனின் வாழ்க்கையைப் பற்றி மௌனமாய்ப் பேசுகிறது இந்தப் படம்.

ஓர் ஆர்மீனியக் கவிஞனின் மனதுக்குள் அவன் வாழ்வு சித்திரங்களாக விரிவதில்.. திகைத்து வகைவகையாய் வண்ணவண்ணமாய்ச் சிதறிப்போகிறோம் நாம். படம் பார்க்கையில் நாம் அவனாகவே மாறிவிடும் தருணங்கள் தகிக்கும் நீரோடை போன்றவை. அது அப்படியாக நம்பப்பட்ட பொழுதுக்குள் தன் நிறத்தை இன்னும் இன்னும் சிதற அடித்துக்கொண்டே நகருகிறது, ஒரு சிவப்பின் மூன்றடுக்குச் சித்திரம் போல.

சயத் நோவா என்ற ஆர்மீனியக் கவிஞனின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு செதுக்கப்பட்ட இப்படம் இயக்குனர் ‘செர்ஜி பரஜினேவ்’வின் கற்பனைகளோடு கூட்டு சேர்ந்து... வண்ணங்களில் வகைவகையாய் இறக்கை சூடித் திரிகிறது. கலை கலாச்சாரம் ஆன்மீகம் என்று அடுக்கடுக்காய்க் காட்சிகளின் வழியே கதை சொல்லும் யுக்தி அபாரம். அதுவும் கவிதைகளின் நுட்பத்தோடும் நுணுக்கத்தோடும் உருவாக்கம் பெற்றிருப்பது அறிவாற்றல் கொண்ட படைப்பூக்க விதியால் கூடிக்கொண்ட மாயவெளி ஜுவாலை.

கவிதைகளை எழுதுகிறோம். கவிதைகள் காட்சிகளாக விரிந்தால், அது ஒரு மாயத்தைச் செய்யும் அல்லவா.. செய்த மாயங்களெல்லாம் மீண்டும் மலரிலிருந்து மொட்டாகும் விவரணைகள் இல்லையா. ஒரு சிந்தனையின் உருவத்தை வார்த்தைகளில் வடிக்காமல் வண்ணக்கலவையின் வழியே ஒரு நிகழ்த்துக்கலையாகச் செதுக்கி ஒவ்வொரு ஃபிரேமிலும் ஒவ்வொரு ஹைக்கூவை உருவாக்கியிருப்பது... உளம் தாண்டிய உந்துதல். கற்பனையற்ற எதுவும் காலத்தில் நிற்காது. கண்கள் கொண்ட பொருளைக்



கற்பனையாக்கும் மாயம், இப்படம்.

கவிஞனின் வாழ்வை சிந்தனையைப் படம் பிடித்துக் காட்டும் இப்படம் ஓர் ஆர்மீனியக் கலைப் படைப்பு. கவிதைக்குள் நகரும் கண்களை ஒளியாக்கி வடித்திருக்கிறார் இயக்குனர். வார்த்தைகளின் வழியே படிக்கப்படும் கவிதைகளைக் காட்சிகளின் வழியே செதுக்கியிருக்கிறார்கள் படக்குழுவினர்.

தன்னைத் தானே வாசிக்கும் புத்தகம், தரைக் கம்பளங்கள் தானே பேசிக்கொள்ளும் விசித்திரம், காற்றில் நீந்தும் மீன்கள், ஆட்டம் போடும் சேவல்கள்... இப்படி விரியும் காட்சிகளைப் படிமங்களாக்கி அதைத் திரைக்குள் உலவவிட்ட இயக்குனர் செர்ஜி பரஜினேவை வியக்காமல் இருக்க முடியாது.

துள்ளும் மீன்கள், துவண்ட ரோஜா, இருளில் முளைத்த முட்கள் எனத் தொடங்கும் பால்யத்தின் திரை.. முட்டியிட்டு அமர்ந்து கவிழ்ந்த தலையைத் தூக்கிப் பார்க்கும் சிறு பிள்ளையின் பார்வையில் இருந்து ஆரம்பிக்கிறது. சிற்ப மொழியின் தனித்தனி அனுபவங்களைக் கொண்டு நீளும் காட்சி மொழிக்கு சப் டைட்டில் தேவை இல்லை. சப் கான்சியஸ் விழித்திருக்க வேண்டும்.

பால்ய காலம் இளமைக் காலம் காதல் காலம் என்று கவிஞன் வாழ்வு விரிய

விரிய அவைகளைக் காட்சிகளாக்கி அதனூடாக ஒரு மாயக் கம்பளத்தை விரித்து மனமாடவிடும் திரை யுக்தி புதிது. கனத்த நூலோடு ஏணியில் ஏறும் கவிஞனின் பால்யம்.. சுமையா சுகமா. மடாலயம் கனவு முதுமை என நீளும் படக் கோர்வையில் இசையும் ஓசையும் கூட காட்சிகளாக விரிகின்றன. மரணத்தின் மௌனமும் அது கொண்ட மாயத்தின் சத்தமும் கூட மாதுளையின் கொப்பளங்களாக வெடிக்கின்றன. மாயலோகத்தில் என்றொரு வார்த்தை இருக்கிறதுதானே. அதன் பொருள் இப்படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் உண்டு. என்ன.... இது மனதின் லோகம்.

நீரேறிய பழைய நூல்களைப் பிழிந்து காய வைக்கும் காட்சியில்... தான் ஏறிய மனதைப் பிழிந்து காய வைப்பது போலவே உணர்ந்தேன். துண்டுதுண்டாய் நிகழும் மனிதத் தேவைகளின் துக்கம்... காலக்குமிழ்களின் நுட்பமெனக் காட்டப்படுகிறது. எங்கிருந்தோ எங்கோ எங்கிருந்தும் எங்கும் எனச் சிவப்பு வண்ணத்தின் வியாக்யானம் தொடர்ந்து ஒன்றிலிருந்து ஒன்றாக மறைந்தும் நிறைந்தும் வழிவது உள்ளுணர்வின் உருமாற்றம் என்றும் நம்பலாம். இசைக்கருவிகள் இடம்பெறும் காட்சியெல்லாம் இதய மீட்டல்கள் நிச்சயம். ஒரு கையில் பற்றி அதே விரல்களால் மீட்டப்படும் சிறு தம்புரா போன்ற வாத்தியம் வெற்றிலைச் சாற்றின் சொந்த இதழ் போலச் சிவக்கச் சிவக்கச் சித்திரம் பேசுகிறது. போர் வீர மண்டையோட்டுக் கவசம் கையில் திரும்பும் நொடியில் மரணத்தேர் நகரும் திக் திக்.

தலைநீள் குப்பிகளாகத் தொப்பிகள் சொல்லும் செய்தி ஒரு தோரணைத் தூவானம் எனலாம். நூல் கோலங்களைக் காற்றினில் போடும் கைகளின் லாவகம் நூதனமானது. நெஞ்சில் விரியும் பழங்காலத்து நூலோ... கையில் தடதடக்கும் நிழல் காலத்து இறகோ... நிற்கும் மனிதனை நீள் மனமாக்கிவிடுகிறது. கிண்ணங்களும் அது கொண்ட தானியங்களும் மேலிருந்து கீழாக ஒரு பௌதீக மாற்றத்தை நம்மிடையே தூவுகின்றன. நிறைந்து வழியும்

ஒன்றில் நிறைய நிறைய வழியும் ஒன்றைக் கண்டெடுக்கும் முத்துக்களாக ஒவ்வொரு தானியத்திலும் உன் என் நம் பெயர்கள். ஒரு கையில் மெழுகுவர்த்தியும் மறு கையில் வெள்ளை ரோஜாவும் சொல்லும் செய்தி என்ன.. சொந்த நிலத்தில் கொள்ளும் ஆதி மரணம் என்றா. நம்மோடு பேசும் திரைமொழி ஒன்று இருக்கிறது. நமக்குள் நம்மைப் பேசவைக்கும் திரைமொழி இது.

நேருக்கு நேராய் இல்லாமல் குறுக்குச் சந்தில் அமர்ந்து பாருங்கள். போர்கள் எத்தனைக்கெத்தனை இரு சிறுபிள்ளை விளையாட்டு. குதிரைகள் மீதமர்ந்து நையாண்டி செய்யும் ஒரு காட்சிப் பிறழ்வில்... உணர உணர ஓர் ஓவியக் கூப்பாடு, அதுவும் கவிஞனின் வாழ்வில் எத்தகைய சத்தம் அது. காற்று வீச மயில் வாயைக் கவ்வியிருக்கும் மனித வாயில் சொல்லொணாக் கவிதைகள். புரியப் புரிய விரிந்துகொண்டே இருக்கும் பக்கங்களில் அவரவர் பாடுகளும் அகிம்சை கோரும். ஆடுகளைப் பலியிடும் ஆதி யுக்தி கடவுளை ஏமாற்றும் சக்தியெனவே இங்கு ஒவ்வொரு காட்சியிலும். எகிறிக் குதிக்கும் கவிதைக் கொம்பென அதன் மேயுமிடம். பலியிட்ட ஆட்டிலிருந்து வழிவதெல்லாம் மாதுளையின் மேனி உருகுதல்தானே.

ஒவ்வொரு காட்சியிலும் ஒளிரும் கலைப்படைப்பின் மகோன்னதம் நமக்குள் ஏற்படுத்தும் தாக்கம் மகத்தானது. மானுட மறுபக்க உள்ளக்கிடக்கையின் அடுக்குத்தொடர் அத்தியாயங்கள் அற்புதம் நிகழ்த்துபவை. உள்நோக்கிப் பார்க்கும் கூர்ந்த மொழியில் படபடவென விரியும் திரைச்சீலை தத்ரூபங்களால் தானியக்கம் போல உருவாக்கம் பெற்றிருக்கிறது. ஓவியங்களைக் காட்சியாக்கி வண்ணங்களைக் கோர்வையாக்கிச் செய்த திரை வடிவம் திணறச் செய்துவிடுகிறது. ஆழ்ந்த அவதானிப்பு கொண்ட உள்வாங்கலின் வழி மட்டுமே உள்ளார்ந்து பொதிந்திருக்கும் பொக்கிஷ முடிச்சுகளை இனம் காண முடியும்.

குறியீட்டுக் குவளைகள் படம் முழுவதிலும். அதில் தவளை ஆவதும் தாவிக் குதிப்பதும் ஏற்றுக்கொள்ளும் இதயங்களைப் பொறுத்தது. சர்ரியலிச ஓவியங்கள் போலத்தான் காட்சிகளின் வெட்டும் ஒட்டும். ஏணிகள் எதற்கென்று தெரியாத புள்ளியில் கட்டடங்கள் முளைக்கும் பின்னணியில் மானுட நகர்வுகள் மெய் சிலிர்க்கச் செய்கின்றன. விரித்து வைக்கப்பட்ட பல பல புத்தகங்களின் இடையே செய்வதறியாது சுற்றிலும் பார்த்துவிட்டுப் பிறகு மெல்ல அப்படியே சரிந்து படுத்துக்கொள்ளும் ஒரு கவிஞனின் பால்யம் இப்படியாகத்தான் திரையில் விரிகிறது. ஒவ்வொரு காட்சியிலும் திரை மொழியின் திறவு திகைக்கத் திகைக்க நம்மைத் தோண்டித் துருவி எடுக்கிறது. பொம்மலாட்டம் போல மானுட ஆட்டத்தில் அறுந்து விழுவதும் அத்தியாயமே.



நீரூற்றி ஐமுக்காளத்தைக் கழுவும் வெண்ணிறக் கால்களுக்கு ஒரு ஷாட் வைத்திருப்பார்கள். பின்னணி இசையும் கணுக்கால் கொண்ட விசையும் நம்மை இம்சிக்கும். இன்னதெனத் தெரியாத உள்ளக் கிளர்ச்சி உணர்வோம். நூல் கண்டுகளை நொதிக்கவிட்டு அதில் சாயம் பூசும் காட்சிகள் நம் மனதின் கொதிப்புகளுக்கு வண்ணமடிக்கும் திருவிழா போல. உயிரோடு இருக்கும் வெள்ளைச் சேவலுக்குச் சிவப்பு சாயம் பூசுவதைப் பார்க்கிறானா... கவிதைச் சிறுவன் அப்படியே கேமராவைப் பார்த்து நம்மிடம் ஏதோ கேட்கிறானா. சூட்டோவியம் சுளீரென வந்து போகிறது திரை வெளிக்குள்.

மனதில் இருக்கும் உருவங்கள் வெளியே

வந்து நடமாடுவதும் நாடகமாடுவதும் மானுடத்தின் ஆழக் குலவைகள். காணும் ஒவ்வொன்றும் வாத்தியம். வாசிக்கும் ஒவ்வொன்றிலும் கவிதை. சத்திய வார்த்தைகளாகப் புத்தி மீறும் நாகரீகம் புதுப் புனைவில் மாயங்கள் மலர்த்திப் பார்க்கிறது.

சிலுவை படுத்தும் பாடு ஒரு காலக் குறியீடு. அதன் துக்கக் கோடுகளின் திசைகள் நெற்றியில் நிம்மதி தருகிறதா... நெக்குருக விடுகிறதா. பின் தொடர, பிறகு திரைக்கதையின் குவிதல் ஓவியத் தெறிப்புகள். சடங்கு சம்பிரதாயக் கூட்டிசையில் செருப்பும் சித்திரம் வார்க்கிறது. மார்பின் ஒரு பக்கம் சங்கும் மறுபக்கம் காம்புமாக நீர் பட்டுப் பூத்திருக்கும் மங்கை உடல் ஒன்றின் அண்மைக் காட்சி... சதைத் துண்டுகள் மீதான ஈர்ப்பை ஸ்தம்பிக்கச் செய்யும். பாறை தழுவும் நீர் வனப்பில் நிழல் வரையும் சோகம்.. அதன் முன் நிற்கும் இச்சிறு காட்சி ஒரு பெருங்கவிதை.

யாருமற்ற அறையில் காற்றின் ரூபம் உணர ஒரு சிறு காகிதம் போதும்.. கூட ஒரு ஜன்னல் இருந்தால் யோகம்.

கவிஞனின் வாழ்வில் போர் என்பதன் பொருள் என்ன. அதன் வடிவம்தான் என்ன. போர் கொண்ட தோட்டாக்களின் துளிர்ப்புகளை அவன் தாண்டிச் சென்று பூவனம் சேர்கையில் வழிந்தோடும் குருதியின் நிறம் என்ன. பிராணிகளின் இழுவைகள் மானுடச் சிலுவைகளாக உணர்த்தும் காட்சிகளில் வெடிகுண்டு துயரங்கள் ஒவ்வொரு கைகளிலும். தன்னைத் தானே சுமக்கும் சித்திரக் குளறுபடிகள் நிஜமான நிஜத்தில் நீக்கமற நிறைந்திருக்க... கவிஞனின் வாழ்வு ஒரு தோளுயரக் கவிதையாகத் தலையில்லாக் கழுத்தில் தத்தளிக்கிறது. நினைவோட்டத்தின் ஒரு கணம் ஒரே நொடியில் வேறு வேறு மின்னோட்ட விதிகளுக்கு உட்பட்டு நீரோட்டியும் நிலமோட்டியும் திரிவதை எப்படி விளங்கச் செய்வது. காட்சிப் பிறழ்வின் வழியே ஒரு சாட்சியை ஏற்படுத்தும் முயற்சி எந்தளவு புரியும் என்று தெரியவில்லை. ஆனால் எதுவுமே புரியாமல் போக அனுமதி இல்லை.



கிரீடத்தின் ஆவல்... குதிரையோட்டிச் சென்று கூத்தில் ஈடுபடும். கொலைபடு பொருளென அது கொண்ட வர்ணம் வேட்டை மனிதனை வேகாமல் தின்னப் பார்க்கும். மனிதர்கள் எழுத்துக்களாகிப் புது மொழியை உருவாக்குவது போல இந்தக் காட்சிகளின் ஆக்கங்கள். தர்க்கம் தாண்டும் தாக யுக்திக்குத் தூரப் பறவைகளே சாட்சி. அப்படி உள்ளங்கைச் சிவப்பிலும் மாதுளையின் நிறம் அப்பிக்கொண்டிருப்பது நீட்சித் தொடர். தூரிகைத் துழாவல்களை முகம் மூடிப் பார்க்கும் வெள்ளுடை சாகசங்களில் காணலாம். சிவப்பங்கிச் சித்திரங்கள் நம்மைத் திரை வயப்படுத்திக்கொண்டே இருக்கும்.

வரும்போதே காணாமல் போகும் வார்த்தைகள் போல வரவரவே காணாமல் போகும் பிம்பங்களும் உண்டு. கிடத்தப்பட்டிருக்கும் மானுட உடலில் இருந்து எழும்பும் சாம்பல் துகள்கள் நம்மிடையே பேசுவது என்ன. உள்ளத்தின் சத்தத்தை அப்படியே ஒலி பிடித்துக் காட்டும் காட்சி ஒன்று இருக்கிறது. சட்டெனப் பிடிபடும் இதய ஒலியின் இருமருங்கிலும் நிழல்மான் ஓடுவதை உணரலாம். ஜமுக்காளக் காய்தலின் மத்தியில் எங்கிருந்து எங்கும் தாவும் நாட்டியத்தின் சிவப்பு நங்கூரமற்ற மனிதக் கப்பல். தெப்பம் கொப்பளிக்கும் தெய்வீகம் அதிலிருக்கிறது.

நுண்ணோவியங்களை வண்ணத்திரையில் விளக்குவது, விளக்கொளியில் இருள் புள்ளிகளை உணர்த்துவது, நிழல் கொண்ட படிமத்தின் யுகத்தை வண்ணமடித்துத் திரைதிரையாய் நகர்த்துவது என விரிகிறது. நின்று நின்று ஓடும் குதிரையின் டக் டக் நமக்குப் புதிதாக இருக்கிறது. புத்திக்குள் நடையபிலும் குதிரையாட்டம் இப்படித்தான் இருக்கும். பிறகு அவனும் அது போலவே ஓடிப்பார்க்கும் குதித்தல் கவிதையின் கடைசி வரி. கவிதை வெளியை வரிகளில் கடத்துவதே பெரும் பாடு. இதில் காட்சிகளில் வெளிப்படுத்தியது அல்லோலகல்லோலம். அற்புதங்களின் நுட்பத்தைக் காட்சிப் பிசிறுகளிலும் கோர்த்திருப்பது குடை மேல் நிழல். மூன்று மாதுளைகள் முக்கோண வாழ்வியலை அவ்வப்போது நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன. கடித்து நொறுக்கும் காட்சியில் மூன்றைத் தாண்டிய முக்தி. அதன் சிவப்பில் ஒவ்வொரு பொருளும் ஒட்டிப் பிசுபிசுக்கும் உற்சவம்.. படம் நெடுகிலும்.

விழித்துக்கொண்டே தியானத்தில் இருப்பது போல இந்த மொத்தப் படமும். முகத்தை மூடி மூடித் திறக்கும் தாளம் அறிந்தோர் அது தொட்டு அகத்தைத் திறக்கவும் அதன் ஆழம் திறக்கவும் அறியலாம். பின்னிரவு கருந்திரையில் ஒரு கோட்டை... அதன் வடிவத்தில் வெட்டப்பட்டு ஒட்டப்பட்டது போல ஓர் அத்தியாயத்தின் முதல் காட்சி. அரசவை சூழலில் ஒரு ஆர்ட்டின் அதிரூபம் அது. உடல் ஒரு பாறை. உள்ளம் ஒரு சுரங்கம். தினம் தினம் ஆய்வு நிகழும் யாத்திரை இரண்டுக்கும். அப்படி ஒரு காட்சிக் குழிக்குள் சென்று மறைந்துகொள்ளும் மொழியை விழி பெயர்க்க மறுக்கிறது. மொழி மறந்த விழியாக இருக்க இருக்க மேலும் பேசுகிறது இந்த சினிமா.

நிஜமும் நிழலும் இல்லாமல் போகும் புள்ளியில்... புது சிறகு. பால்ய காலத்துத் தீர்க்கத்தின் நிலை, காணக் காணத் தவறவிடும் நிலை ஒன்றால் கட்டப்பட்டுக்கொண்டே போவதைத் திறந்தவெளி கை காட்டும் ஆதுரத்தில் உணர முடிகிறது. பிறழ்வின் அருகினில் மிகத் தத்ரூபமாக நெருங்கிய வளைவுகளின் வழியாக ஒரு மாயத்தின் திறவாய்த் துல்லியமாகத் திறக்கும் கதைக்களம். கவிதையின் கதை. காணக் கிடைக்கும் ஆழ்மனதின் விதை. அது படபடவென வளர்ந்து விருட்சமாவதைப் பார்க்கப் பார்க்கப் பார்க்கலாம். ஒரு கவிஞனின் ஆன்மாவின் கோணம் எத்தகையது.. அது என்ன நேரத்தில் என்ன சிந்திக்கும் போன்ற படிமக் கூறுகளை அப்படியே வீசிச் செல்லும் நுட்பத்தை எவ்வரியிலும் இங்கே முழுமையாகப் பகிர முடியவில்லை. அது தன்னிலை சார்ந்தது.

ஆண் பெண் பாத்திரங்கள் உட்பட ஆறு பாத்திரங்களில் இந்தப் படத்தின் நாயகி நடித்திருப்பது இத்திரைப்படத்தின் சுவாரஸ்யச் செய்தி. ஒரு கவிஞனின் வாழ்வு தவறாகச் சித்தரிக்கப்படுகிறது என்று அன்றைய சோவியத் சென்சார் படத்தின் தலைப்புக்குத் தடை விதிக்க... சயத் நோவா என்ற கவிஞனின் பெயரிலேயே வெளி வரவிருந்த இந்தப் படம் இப்போதைய தலைப்புக்கு மாறி இருக்கிறது.

மாதுளையில் இருந்து வெளிவரும் வண்ணத்தின் சிவப்பே படம் நெடுகிலும் ஒளிரும் ருசி. மெல்லப் படியும் அதன் மூர்க்கச் சிவப்பு ஒரு காவியத்தின் கொடியாக அசைவதை இனியும் விவரித்து எப்படி சொல்ல. பார்க்கப்பார்க்க மீண்டும் பாருங்கள். ஒரு புள்ளியில் கொஞ்சமேனும் நகர முடியும் என்றே நம்புகிறேன். நகரா மனது எங்கிருக்கிறது. மாதுளையின் வண்ணத்தில் உதிரா எண்ணங்கள்தான் எங்கிருக்கின்றன.

வரைந்துதான் பார்க்க வேண்டும் என்றில்லை. வாழ்ந்தும் பாக்கலாம் ஓவியத்தில்.

மொழி : ஆர்மேனியன்

இயக்கம் : செர்ஜி பரஜினேவ்

ஆண்டு : 1969




# வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் - உளவியல்

**“The moment of victory is much too short to live for that and nothing else.”**
**- Martina Navratilova**

தவறுகளைத் திருத்திக்கொள்வதில் இருக்கிறது வெற்றியின் ரகசியம். வெற்றியின் உளவியல் என்பது விளையாட்டு, வணிகம் அல்லது வாழ்க்கைச் சவால்கள் என எதுவாக இருந்தாலும், வெற்றியை அடைவதற்குப் பங்களிக்கும் மனச் செயல்முறைகள், உணர்ச்சி நிலைகள் மற்றும் நடத்தை முறைகளைப் புரிந்துகொள்வதில் சுழல்கிறது. தடைகளைக் கடப்பதற்கும், அழுத்தத்தை நிர்வகிப்பதற்கும், உச்ச செயல்திறனை அடைவதற்கும் தனிநபர்களையும் குழுக்களையும் தூண்டும் மனநிலையை இது ஆராய்கிறது. கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

**1. வளர்ச்சி மனப்போக்கு மற்றும் நிலையான மனநிலை :** வளர்ச்சி மனப்பான்மை என்பது அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் கற்றல் ஆகியவற்றின் மூலம் திறன்களையும் புத்திசாலித்தனத்தையும் வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை. வளர்ச்சி மனப்பான்மை கொண்டவர்கள் சவால்களை வளர்த்துக்கொள்ள மற்றும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளாகக் கருதுகின்றனர், இது அவர்களுக்குப் பின்னடைவைச் சமாளித்து அவர்களின் உந்துதலைத் தக்கவைக்க உதவுகிறது. மாறாக, நிலையான மனநிலை என்பது திறன்கள் நிலையானது, தோல்வி பயம் அல்லது சவால்களைத் தவிர்ப்பது போன்றவற்றை உள்ளடக்கியது. இந்த எண்ணம் கொண்டவர்கள் இழப்புகளுக்குப் பிறகு பின்னடைவைத் தக்கவைக்கப் போராடலாம்.

**2. நம்பிக்கை மற்றும் சுயசெயல்திறன் :** சுயசெயல்திறன் (Self-efficacy) என்பது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வெற்றிபெற ஒருவரின் சொந்தத் திறனில் உள்ள நம்பிக்கையாகும். உயர்தர சுயசெயல்திறன் தனிநபர்கள் தங்கள் சவால்களைக் கட்டுப்பாட்டு உணர்வுடன் அணுக உதவுகிறது, அவர்களின் வெற்றிக்கான சாத்தியத்தை அதிகரிக்கிறது. வெற்றி மற்றும் அனுபவத்தின் மூலம் காலப்போக்கில் நம்பிக்கை உருவாகிறது. மேலும் கடினமான சூழ்நிலைகள் அதிகமாக இருக்கும்போது தனிநபர்கள் உத்வேகத்துடன் முன்னேற இது முக்கியப் பங்கு வகிக்கிறது எனலாம்.

**3. மீள்தன்மை :** மீள்தன்மை (Resilience) என்பது, இழப்பு அல்லது தோல்விக்குப் பிறகு துன்பத்திலிருந்து மீண்டு வருவதற்கான திறன் ஆகும். வெற்றிபெற்ற தனிநபர்கள் மற்றும் அணிகள் அதிக அளவிலான மீள்தன்மையைக் கொண்டிருக்கின்றன. தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ளவும், மாற்றங்களைச் செய்யவும், உந்துதலாக இருக்கவும் அனுமதிக்கிறது.

**4. செறிவான கவனக்கூர்மை** (Focus and Concentration) : கவனச்சிதறல்களைச் சரிசெய்து இலக்குகளில் தீவிர கவனம் செலுத்துவது வெற்றியை அடைவதற்கு இன்றியமையாதது.

தீர்க்கமான மனிதர்கள் பெரும்பாலும் தங்கள் பணிகளில் முழுமையாக மூழ்கி, இலக்குகளின் மீது சிரமமில்லாத கவனத்தைச் செலுத்தும் நிலைக்கு நுழைவதற்கான உத்திகளை உருவாக்குகிறார்கள்.

**5. இலக்கு அமைத்தல் மற்றும் உந்துதல் :** தெளிவான, குறிப்பிட்ட மற்றும் அடையக்கூடிய இலக்குகளை அமைப்பது ஒருவரது செயலாக உந்துதலில் முக்கியமானது. இலக்குகள் திசை மற்றும் நோக்கத்தின் உணர்வை வழங்குகின்றன, அர்ப்பணிப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகின்றன. போலவே, உள்ளார்ந்த உந்துதல் (தனிப்பட்ட திருப்தி) மற்றும் வெளிப்புற ஊக்கம் (வெளிப்புற வெகுமதிகள்) இரண்டும் வெற்றியை நோக்கி மக்களைத் தள்ளுவதில் பங்கு வகிக்கின்றன. உண்மையில் 'உள்ளார்ந்த உந்துதல்' (intrinsic motivation) பெரும்பாலும் நீண்ட காலத்திற்கு மிகவும் நிலையானது.

**6. மன அழுத்தத்தைக் கையாளுதல்:** வெற்றிகரமான நபர்கள் பெரும்பாலும் 'திறம்பட்ட உணர்ச்சிக் கட்டுப்பாட்டுத்' திறன்களை வெளிப்படுத்துகிறார்கள். கடுமையான சூழ்நிலைகளில் மன அழுத்தம், பதட்டம் ஆகியவற்றைக் கையாள இது அனுமதிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக 'மனக்கடினத்தன்மை' ஒருவருக்குக் காலப்போக்கில் கட்டமைக்கப்படுகிறது. அவர்கள் அழுத்தத்தின் கீழ் அமைதியாக இருக்கவும், மிக முக்கியமான நேரத்தில் தெளிவான முடிவுகளை எடுக்கவும் இது உதவுகிறது.

**7. செயல் முன்னோட்டத் திறன் மற்றும் மன ஒத்திகை** (Mental Rehearsal): வெற்றிகரமான நபர்களால், வெற்றியை மனரீதியாக ஒத்திகை பார்க்கவும் செயல் முன்னோட்டத் திறன் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தவும் முடிகிறது. விரும்பிய முடிவைத் தெளிவாகக் கற்பனை செய்வதன் மூலம், தனிநபர்கள் தங்கள் நம்பிக்கையை அதிகரிக்கலாம், பதட்டத்தைக் குறைக்கலாம் மற்றும் அவர்களின் உண்மையான செயல்திறனை மேம்படுத்தலாம். போலவே, நம்பிக்கை மற்றும் நேர்மறைச் சிந்தனையானது அதிக விடாமுயற்சி மற்றும் வெற்றிக்கான அதிக வாய்ப்புடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நேர்மறையான விளைவுகள் சாத்தியம் என்று நம்புவது பின்னடைவுகளை எதிர்கொண்டாலும் கூட உந்துசக்தி மற்றும் கரடுமுரடான புறச்சூழலை சமயோசிதமாக உபயோகிக்கவும் உதவுகிறது.

**8. குழு இயக்கவியல் மற்றும் தலைமை** (Team Dynamics and Leadership): இது மிக முக்கியமான கூறென நாம் புரிந்துகொள்ள வேண்டும். குழு அடிப்படையிலான முயற்சிகளில், வெற்றி பெரும்பாலும் பயனுள்ள தொடர்பு, பகிரப்பட்ட இலக்குகள், நம்பிக்கை மற்றும் வலுவான தலைமை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. கூட்டுச் சூழலை வளர்க்கும் தெளிவான எதிர்பார்ப்புகளை அமைத்து, மன உறுதியை அதிகரிக்கும் மனிதர்கள் தங்கள் அணிகளை அடிக்கடி வெற்றிக்கு இட்டுச் செல்கின்றனர். இது மனிதர்களுக்கு மாற்றங்களைச் செயல்படுத்துதலைத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது.

மேலும், சூழல்களைத் தேவையான வகையில் தகவமைத்துக் (adaptability) கொள்ளும் தன்மை மற்றும் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளுதல் போன்ற பண்புகள் முக்கியத்துவம் கொண்டவை. வெற்றிகரமான நபர்கள் பெரும்பாலும் தோல்வியைத் தோல்வியாகப் பார்க்காமல் அனுபவமாகப் பார்க்கிறார்கள். விரைவாக மாற்றியமைக்கும் திறன், தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வது மற்றும் மாற்றங்களைச் செயல்படுத்துவது போன்றன தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிக்கின்றன. இது நீண்ட கால வெற்றிக்கு முக்கியமாகும். ஆக, வெற்றி என்பது உடல் திறன் அல்லது தொழில்நுட்பத் திறன்களைப் போலவே மன ஆயத்தம் மற்றும் உணர்ச்சிகளின் தாங்குசக்தி (emotional endurance) குறித்தானது. சரியான மனநிலை, சகிப்புத் தன்மை மற்றும் உளவியல் உத்திகள் ஆகியவை தொடர்ந்து வெற்றியை அடைவதற்கான முக்கியமான கூறுகளாக உள்ளன.

மனிதர்களுடைய தனிப்பட்ட பார்வையில், வெற்றியின் பொருள் ஆழமானது. ஒருவரின் மதிப்புகள், இலக்குகள், அனுபவங்கள் மற்றும்

பண்பாட்டுப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் பரவலாக இப்பொருள் மாறுபடும். ஒரு தனிநபரின் வெற்றி என்பது ஒரு நேரடி அர்த்தத்தில் வெற்றி பெறுவது மட்டுமல்ல, பல சாதனைகள், சுயநிறைவு மற்றும் சவால்களைச் சமாளிப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது.

பலருக்கு, வெற்றி என்பது தனிப்பட்ட அல்லது தொழில்முறை இலக்குகளை வெற்றிகரமாக அடைவதன் மூலம் வரையறுக்கப்படுகிறது. இது வேலையில் ஒரு திட்டத்தை முடிப்பது, பதவி உயர்வு பெறுவது, கல்வியில் வெற்றியை அடைவது அல்லது தனிப்பட்ட விருப்ப இலக்குகளை எட்டுவது வரை இருக்கலாம். தனிநபர்கள் பெரும்பாலும் ஒரு திறமை அல்லது சிக்கலான சிக்கலைத் தீர்ப்பதை வெற்றியுடன் தொடர்புபடுத்துகிறார்கள். கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பிலிருந்து வரும் சாதனையுணர்வு தனிப்பட்ட வெற்றியாக உணர முடியும்.

பல மனிதர்கள் வெற்றியைத் 'தடைகள், சிரமங்கள் அல்லது தனிப்பட்ட சவால்களைச் சமாளிப்பது' என்று கருதுகின்றனர். இது, நோயிலிருந்து மீண்டு வந்தாலும், தனிப்பட்ட இழப்புகள் வழியாகச் செல்வதாயினும், அல்லது மனநலப் போராட்டங்களைச் சமாளிப்பதாயினும், வெற்றி என்பது சிரமங்களைத் தாண்டி உயிர் வாழ்வதும், செழிப்பதுமாகவே உணரப்படும். இவர்களுக்கு வெற்றி என்பது பெரும்பாலும் வளர்ச்சி மற்றும் மாற்றம் பற்றியது. கணிசமான மாற்றங்களுக்கு உள்ளான நபர்கள் கற்றல், குணப்படுத்துதல் அல்லது சுயகண்டுபிடிப்பு மூலம் தங்கள் தனிப்பட்ட நிலையைப் பார்க்கலாம்.

சிலருக்கு, வெற்றி என்பது சுய முன்னேற்றம் மற்றும் தன்னைப் பற்றிய சிறந்த 'அடையாளமாக' மாறுவதுடன் பிணைக்கப்பட்டுள்ளது. கெட்ட பழக்கங்களை உடைத்தல், ஆரோக்கியமான நடைமுறைகளை உருவாக்குதல் அல்லது உணர்ச்சி நுண்ணறிவைப் (emotional intelligence) பெறுதல் ஆகியவை இதில் அடங்கும். குறைந்த சுயமரியாதை அல்லது சுய சந்தேகத்துடன் போராடும் நபர்கள், இந்த உள் தடைகளைக் கடக்கும்போது அல்லது தங்களால் முடியும் என்று தாங்கள் நம்பாத ஒன்றைச் செய்யும்போது 'வெற்றியைக்' காணலாம்.

வெற்றி எப்போதும் வெளிப்புறமானது அல்ல. பலருக்கு, உண்மையான வெற்றி உள்ளிருந்து வருகிறது. வெளிப்புற விளைவுகளைப் பொருட்படுத்தாமல், உள் அமைதி, நிறைவு அல்லது மகிழ்ச்சியின் நிலையை அடைவது குறிப்பிடத்தக்க வெற்றியாக உணரப்படலாம்.

சிலர் வெற்றி என்பது தங்களுக்கு உண்மையாக வாழ்வதாகவும், அவர்களின் அடிப்படை மதிப்புகளுடன் ஒத்துப்போகும் தேர்வுகளை மேற்கொள்வதாகவும், சமூக எதிர்பார்ப்புகளுக்கு எதிராக இருந்தாலும் அவர்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருவதைப் பின்பற்றுவதாகவும் உணர்கிறார்கள்.

ஒருசிலர் தங்களுக்குத் தொடர்புடைய உறவுச் சூழலில், வெற்றிகரமான தகவல்தொடர்பு, சமரசமான சச்சரவுத்தீர்வு அல்லது மற்றவர்களுடன் அர்த்தமுள்ள தொடர்புகளை உருவாக்குவதன் மூலம் வெற்றியை உணரலாம். சிக்கலான உறவுகளை வழிநடத்துவது மற்றும் வலுவான பிணைப்பைப் பேணுவது தனிப்பட்ட வெற்றியாக உணரலாம்.

தனிநபர்கள் தங்கள் அச்சங்களையும் பாதுகாப்பின்மையையும் எதிர்கொள்ளும் தருணங்களிலும் வெற்றியைக் காணலாம். பொதுவில் பேசுவது, சவாலை ஏற்றுக்கொள்வது அல்லது கடினமான உண்மையை எதிர்கொள்வது, பயத்தைச் சமாளிப்பது போன்றவற்றைக் குறிப்பிடத்தக்க வெற்றியாக அவர்கள் உணர முடியும். போலவே, சுயமதிப்புடன் போராடும் நபர்களுக்கு, வெற்றி என்பது தங்களது குறைபாடுகள் மற்றும் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதில் இருக்கலாம். குறைபாடுகளைத் தழுவி, அவர்கள் யார்

என்பதைக் கண்டறிவது, உள் வெற்றியின் ஒரு வடிவமாகும், அது வலிமையைக் கொண்டுவருகிறது.

சிலருக்கு, தொழில், தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் சுய பாதுகாப்பு போன்ற வாழ்க்கையின் வெவ்வேறு பகுதிகளில் சமநிலையைக் கண்டறிவதன் மூலம் வெற்றி அடையப்படுகிறது. நல்லிணக்கத்தை அடைவது மற்றும் மன அழுத்தத்தைக் குறைப்பது ஒரு பெரிய தனிப்பட்ட வெற்றியாக இருக்கும்.

சிலர் தங்கள் உணர்ச்சிகள் மற்றும் எதிர்வினைகளின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவது, கோபம், பதட்டம் அல்லது சோகத்தை ஆரோக்கியமான முறையில் நிர்வகிக்கக் கற்றுக்கொள்வது என வெற்றியைக் கருதுகின்றனர். உணர்ச்சி நிலைத்தன்மை மற்றும் முதிர்ச்சி ஆகியவை சுய கட்டுப்பாடு மற்றும் நினைவாற்றலின் வெற்றிகள் எனக் கருதுகிறார்கள்.

சில சமூகச் சூழல்களில், வெற்றி என்பது தனிப்பட்ட சுதந்திரம் அல்லது சமத்துவத்தைக் கட்டுப்படுத்தும் சமூக அல்லது பண்பாட்டு நெறிமுறைகளைச் சவாலாகக் கருதுவதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரே மாதிரியான கருத்துக்களில் இருந்து விலகுவது அல்லது எதிர்பார்ப்புகளை மீறுவது ஓரங்கட்டப்பட்ட நபர்களுக்கு ஒரு வகையான வெற்றியாக உணரலாம்.

சிலர் ஒடுக்கிய அல்லது ஓரங்கட்டிய உலகில் தங்கள் அடையாளம் அல்லது பண்பாட்டை நிலைநிறுத்துவதன் அடிப்படையில் வெற்றியை உணர்கிறார்கள். தங்கள் பாரம்பரியம், இனம், பாலினம் அல்லது பாலியல் நோக்குநிலை ஆகியவற்றில் பெருமிதம் கொள்ளும் ஒருவர், தங்கள் அடையாளத்தை நம்பிக்கையுடன் அரவணைத்து உறுதிப்படுத்துவதில் வெற்றியைக் காணலாம்.

சிலருக்கு, வெற்றி என்பது என்ன என்பதை மறுவரையறை செய்வதில் வெற்றி இருக்கிறது. இது பரிபூரண வாதத்திலிருந்து விலகி அல்லது சமூகத் தரங்களின் அழுத்தத்திலிருந்து விலகி, முடிவைப் பொருட்படுத்தாமல் தங்களால் முடிந்ததைச் செய்வதில் மனநிறைவைக் கண்டறிவதை உள்ளடக்கியிருக்கலாம்.

அதுபோல, தனிநபர்கள் தோல்வியை எப்படிக் கையாளுகிறார்கள் என்பதிலும் வெற்றியைப் பார்க்கலாம். தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்வது, மீண்டு எழுவது மற்றும் தொடர்ந்து வளரும் திறன் ஆகியவை வெற்றியின் வடிவங்களெனக் காணலாம். அங்கு இறுதி முடிவை விட பயணமும் செயல்முறையும் முக்கியம், அவ்வளவே.

ஆன்மீக அல்லது தத்துவப் பாதையைப் பின்பற்றுபவர்களுக்கு, வெற்றி என்பது ஞானம், உள் அமைதி, உயர் சக்தி அல்லது நோக்கத்துடன் ஆழமான தொடர்பை அடைவதாகக் கருதப்படலாம். இந்த நபர்கள் தங்கள் ஆன்மீக நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்வதில் வெற்றியைக் காணலாம். சில தனிநபர்கள், குறிப்பாக வாழ்க்கையின் பிற்காலக் கட்டங்களில் இருப்போர் அல்லது சில தத்துவ மரபுகளைப் பின்பற்றுபவர்கள், வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஏற்றத்தாழ்வுகள், வெற்றிகள் மற்றும் தோல்விகளை ஏற்றுக்கொள்வதாக வெற்றியைக் காணலாம்.

பொதுவாக, மனிதர்களின் தனிப்பட்ட பார்வையில், வெளிப்புற வெற்றிகளை அடைவது முதல் உள் அமைதியை அடைவது வரை, வெற்றி என்பது அகநிலை மற்றும் பன்முகத்தன்மை கொண்டது. வெற்றியின் பாரம்பரியப் பார்வைகள் வெளிப்புறப் போட்டி மற்றும் விளைவுகளை வலியுறுத்தும் அதே வேளையில், பலர் அதை முன்னேற்றம், நிறைவு, சகிப்புத்தன்மை அல்லது சுயத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்று பார்க்கிறார்கள். இறுதியில், வெற்றியின் அர்த்தம் நபருக்கு நபர் மாறுபடும். ஏனென்றால் வெற்றி என்பது தனிப்பட்ட அனுபவங்கள், குறிக்கோள்கள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளது அல்லவா? ■

தமிழ் நிலத்து வீர மங்கையர்கள்

தொடர் 8

# மணியம்மையார்

தந்தை பெரியாருக்கு 54 வயதாகும்போது, அவரின் மனைவி நாகம்மையார் காலமானார். பல அரசியல் பணிகளில் இருந்த பெரியாருக்கு முதுமை தொடங்கியதிலிருந்து அவ்வப்போது உடல்நலம் பாதிக்கப்பட ஆரம்பித்தது. அவரின் நிலையை அறிந்த சுயமரியாதை இயக்கத் தொண்டரான கனகசபை மற்றும் பத்மாவதி தம்பதியினர் தம் மகள் மணியம்மையை உதவிக்கு அனுப்பினர். மணியம்மை 1917 மார்ச் 10ஆம் நாள் வேலூரில் பிறந்தவர். அவரின் இயற்பெயர் காந்திமதி. மணியம்மை குலசேகரப்பட்டினம் தமிழ்க் கல்லூரியில் தமிழ் வித்வான் படிப்பில் சேர்ந்தவர். அவருக்கு அண்ணல் தங்கோ, இயக்கப் பெயராக 'அரசியல் மணி' என்று பெயர் வைத்தார். பத்திரிகைகளில் 'கே.ஏ.மணி' என்று எழுதினார். பின்நாளில் மணியம்மை என்று அழைக்கப்பட்டார்.



1943ஆம் ஆண்டிலிருந்து, சமூகத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும், எளிய மக்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவற்றுக்கு எதிராகவும் போராடும் பெரியாருக்குப் பக்கபலமாக இருந்தார்.

1949ஆம் ஆண்டு, தம் 71ஆம் வயதில் பெரியார் தன் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தார். தந்தையார் ஈட்டிய சொத்துக்களையும், திராவிடர் கழகத்திற்காக அவர் சேர்த்து வைத்த சொத்துக்களையும் பாதுகாக்க, மிகவும் உண்மையாக உழைத்த மணியம்மையாரிடம் ஒப்படைக்க எண்ணினார்.

மணியம்மையை தன் வாரிசு ஆக்க விரும்பினார். ஆனால் ஒரு ஆண் பிள்ளையைத்தான் தத்து எடுத்துக்கொள்ள முடியும் என அந்த நாளில் ஒரு சட்டம் இருந்தது. பெண் பிள்ளையைத் தத்து எடுக்க முடியாது என்றால் அவரைத் திருமணம் செய்துகொண்டு மனைவி என்ற நிலையில் வைப்பது ஒன்றுதான் சட்டப்படி இயன்றதாக இருந்தது. அந்த சூழ்நிலையின் காரணமாக வேறு வழியின்றி மணியம்மையைத் தன் வாரிசு ஆக்குவதற்காக 1949ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் நாள் சட்டப்படி அவரைப் பதிவுத் திருமணம் செய்தார் பெரியார்.

திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றோ, மற்ற பெண்களைப் போல் இல்லற வாழ்வு நடத்த வேண்டும் என்றோ மணியம்மை நினைக்கவில்லை. கொள்கைக்காக வாழும் பெரியாருக்காக வாழ்வதே தம் கொள்கையாக எண்ணிய அவர், பெரியாரின் விருப்பத்திற்கு இணங்க அவருக்குப் பிறகு தன் பொறுப்பைக் கடமை உணர்வோடு சிறப்பாகச் செய்துவந்தார். 1944ஆம் ஆண்டில் சேலத்தில் திராவிடர் கழக மாநாட்டில், தன்னுடைய முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதற்குப் பிறகு இறுதிக்காலம் வரை சுயமரியாதை மாநாடு, திராவிடர் கழக மாநாடு, திராவிட மகளிர் மாநாடு உள்ளிட்ட பல கூட்டங்களில் பேச்சுரை நிகழ்த்தினார்.

அவருடைய சொற்பொழிவுகளில் சில 'அம்மா பேசுகிறார்' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்தது. தமிழ் இலக்கியத்தில் புலவர் பட்டம் பெற்ற மணியம்மை, 1944ஆம் ஆண்டில் குடியரசு இதழில் 'இரண்டும் ஒன்றே' என்னும் தலைப்பில் கந்தபுராணத்தையும் ராமாயணத்தையும் ஒப்பாய்வு செய்து கட்டுரை எழுதினார். இது தவிர திராவிடர் கழகத்தின் அறிக்கைகள், செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதினார். அவை குடியரசு, விடுதலை, உண்மை ஆகிய இதழ்களில் வெளிவந்தன. மேலும் ஈ.வே. ரா.வின் மேடைப் பேச்சுகளைக் குறிப்பெடுத்துக் கட்டுரைகளாக எழுதித் திராவிடர் கழக இதழ்களில் வெளியிட்டும் நூல்களாக அச்சிட்டும் சமூகத்தில் பரப்பினார்.

மணியம்மை பல்வேறு இயக்கப் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றிருக்கிறார்.

1948ஆம் ஆண்டு குடந்தையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கான அரசின்

தடைச் சட்டத்தை மீறிச் செயல்பட்டதால் கைது செய்யப்பட்டார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட 'உங்கள் மதம் எது?' என்ற கேள்விக்கு 'எனக்கு எந்த மதமும் கிடையாது' என்றார். 'உங்கள் ஜாதி?' என்ற கேள்விக்குத் 'திராவிட ஜாதி' என்றும் தெரிவித்தார். பிறகு நீதிபதி தண்டனை அளித்ததை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

1949ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தின்போது சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியலை முன்னின்று நடத்தினார்.

'இளந்தமிழா புறப்படு போருக்கு' என்னும் கட்டுரை 1958 ஜனவரி 19வது தேதியில் விடுதலை இதழில் வெளிவந்தது. அந்தக் கட்டுரையை வெளியிட்டதற்காக அவர் கைது செய்யப்பட்டு, ஒரு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

1974 ஏப்ரல் 4ஆம் நாள் இழிவு ஒழிப்புக் கிளர்ச்சி, தமிழகம் முழுவதும் இருந்த அஞ் சலகங்களின் முன்னர் திராவிடர் கழகத்தால் நடத்தப்பட்டது. சென்னையில் நடந்த கிளர்ச்சிக்கு மணியம்மையார் தலைமை தாங்கினார்.

தில்லியில் 'ராமலீலை' நடத்தி ராவணன் உருவத்தைக் கொளுத்தும் நிகழ்ச்சியில் இந்தியாவின் அன்றைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதுவும் இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் அன்றைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும் கலந்துகொள்ளக் கூடாதென 1974 அக்டோபர் 26ஆம் நாள் மணியம்மையார் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அவர்கள் அந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அதனைக் கண்டிக்கும் வகையில் 1974 டிசம்பர் 25ஆம் நாள் சென்னையில் 'ராவணன் லீலை' திராவிடர் கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்டதற்கு மணியம்மையார் தலைமை வகித்தார். ராமன், சீதை, இலக்குவன் உருவங்களை அவர் தீயிட்டுக் கொளுத்தினார்.

1976 ஜனவரி 31ஆம் நாள் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலையின் பொழுது மணியம்மையார் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

1977 அக்டோபர் 30ஆம் நாள் சென்னைக்கு வருகை தந்த அன்றைய இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் தலைமை அமைச்சர் இந்திரா காந்திக்குக் கருப்புக் கொடி காட்டும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய மணியம்மையார் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் வாழ்ந்த காலத்தில் அவர் திருச்சி நகரில் உருவாக்கிய கல்வி நிறுவனங்களையும், குழந்தைகள் காப்பகத்தையும் திறம்பட நிர்வகித்ததோடு மட்டுமில்லாமல் பெரியாரின் மறைவுக்குப் பிறகு திராவிடர் கழகத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றுப் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்.

பெரியாரின் உடல்நலத்தின் மீது எப்போதும் கவனம் கொண்டிருந்தார் மணியம்மையார். மருத்துவரின் ஆலோசனைப்படி அவரைப் பொறுப்புணர்வோடு கவனித்துக்கொண்டவர். பெரியாரும் அவரை 'அம்மா' என்று அழைத்தார்.

ஒருமுறை பெரியார் 'இந்த வயதிலும் நான் சாகாமல் இருக்கிறேன் என்றால் இந்த அம்மாவால்தான் என்பது யாருக்கும் தெரியாது. எனது உடம்புக்கு ஏற்ற உணவைப் பக்குவப்படி கொடுப்பது, உடை மாற்றுவது எல்லாம் இந்த அம்மாதான்' என்று மணியம்மையைப் பற்றிச் சொன்னார் என்றால் அவரின் பணி எவ்வளவு அர்ப்பணிப்பு மிக்கதாக இருந்திருக்க வேண்டும்.

சுயமரியாதைத் திருமணங்களை முன் நின்று நடத்தி இருக்கிறார். பெரியாரின் மறைவு வரை அவர் இயங்குவதற்கு உறுதுணையாக சமூகத் தொண்டாற்றுவதற்குப் பேருதவியாக இருந்திருக்கிறார்.

1974ஆம் ஆண்டிலிருந்து உடல்நலம் குன்றி இருந்த மணியம்மையார், 1978 மார்ச் 16வது நாள் காலமானார். மணியம்மையாரைக் கௌரவிக்கும்விதமாக, சென்னை எழும்பூரில் உள்ள ஒரு சாலைக்கு ஈ.வே.ரா. மணியம்மை சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இன்னும் எண்ணிலடங்காத எத்தனையோ பெண்களின் தியாக குணங்களும், செயல்திறமைகளும் தூவிய விதைகளில் முளைத்த விருட்சங்களின் நிழல்களில் இன்றைய சமூகம் இளைப்பாறுகிறது. இவர்களின் வரலாறுகளை இருட்டடிப்பு செய்யும் வகையில், பொய்களும் திரிபுகளும் அபத்தமாக விஷக்கிருமி போல் பரப்புரை செய்யப்படுகின்றன. அறிவின் கண் கொண்டு அந்தக் களைகளை அகற்றுவது வளர்ந்துவரும் இளைய தலைமுறையின் இன்றியமையாத பொறுப்பாக முன்நிற்கிறது. ■

கோ. லீலா

சூரியனுக்கு முகம் திருப்பும்
சிறுநெருஞ்சிப் பூவுக்கும்
வாய்க்கிறது மழை

■

பெய்யும் மழை
பூப்பதில் பேதமில்லை
கள்ளியும் அல்லியும்

■

நெருங்கிப் பார்க்கிறேன்
ஒன்றுமில்லாமல் இருக்கிறது
வானும் வாழ்வும்

■

உள்நோக்கிய பயணம்
புறம் அகல
விளைகிறது விதை

■

தலைகுனிந்து நடு
தலைநிமிரச் செய்யும்
பறவைகள்

■

வாரி வழங்கிவிட்டு
சொல்லாமல் நிற்கிறது
மரம்.

■



சிறுகதை

சிறார் அறிவியல்

ராம் பிரசாத்



ஓவியங்கள் : அமு.ரஜினிகாந்தன்

# குளம்

“தம்பிகளா... தண்ணீரில் இத்தனை ஆட்டம் தேவையா? சளி பிடித்துவிடலாம்... விரைவாக வீடடையுங்கள்..” தள்ளாகுளம் கிராமத்தின் அகண்ட குளத்தைக் கடந்து போன வீரையன் கரையில் இருந்தபடியே கத்தினார். வரிசையாக நடப்பட்ட பனைமரங்களுக்கு மத்தியில் மல்லாந்து படுத்திருக்கும் கூத்துக்காரி போல் கிடந்தது குளம்.

கிராமத்தவர்கள் காளைகளையும், பசுக்களையும் அந்தக் குளத்தில் நிற்கவைத்துக் குளிப்பாட்டிவிடுவது வழமை. நாள் கிழமை போக எஞ்சிய நாட்களிலெல்லாம் குளம் என்பது கிராமத்துச் சிறுவர்களின் விளையாட்டுத் திடல்தான். ஒருவகையில் அவர்கள்தான் குளத்தின் ஜீவாதாரமும் கூட. முங்கிக் குளிக்கையில், குளத்தின் அடிப்பகுதியில் முளைவிடும் சின்னச்சின்னச் செடிகளைக் கையோடு பிய்த்துவிடுவதால், குளத்தைத் தூர்வார வேண்டிய தேவையே கிராமத்தார்களுக்கு எழுவதில்லை. சிறுவர்களின் சேட்டைகள் அவ்விதம். குளத்தால் சிறுவர்களும், சிறுவர்களால் குளமும் சுத்தமானது.

வீரையன் குரலைக் கேட்டுக் குளத்திலிருந்து சிறுவர்கள் முத்து, பழனி, ராசு, கதிர் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் இடுப்பளவு நீரில் நின்றிருக்க, அவர்களுக்கிடையில் தக்கைகள் (Thermocol) பரவிக்கிடந்து நீரிலாடிக் கொண்டிருந்தன. ஒவ்வொன்றின் மீதும் சிறிது சிறிதாய் முகம் பார்க்கும் கண்ணாடிகள்!

“இதோ முடிந்தது.. செல்கிறோம்..” என்று மட்டும் சொன்னான் ஒருவன். அதற்கு மேல் குரல் உசந்தால் மரியாதை கெட்டுப்போகுமென்று எண்ணியவராய், குளத்தைக் கடந்து போனார் வீரையன்.

“கதிர், இழுத்துப் பிடி..” என்றான் ராசு. கதிரும், பழனியும், முத்துவும் இணைந்து நான்கைந்து தக்கைகளைக் (Thermocol) கயிற்றால் இழுத்துக் கட்ட, அவற்றின் மீதிருந்த மிகப்பெரிய முகம் பார்க்கும் கண்ணாடிகள் சூரியனின் கிரணங்களை

அப்படியே பிரதிபலித்து விண்ணுக்குத் திருப்பி அனுப்பின.

அத்தனை பெரிய சூரியனின் கிரணங்களை விண்ணுக்கே திரும்பச் செய்துவிட்டதில் அறிவியலின் ஏதோவொரு விடைத்த நரம்பைச் சற்றே வளைத்துப் பார்த்துவிட்ட, தளர்த்திப் பார்த்துவிட்ட, நெகிழ்த்திப் பார்த்துவிட்ட பூரிப்பு அவர்களின் முகத்தில் வியாபித்திருந்தது.

~ * ~

காலை எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துவிட்டு, குளித்துவிட்டு, ஒரு கப் காபியுடன் ஹாலுக்கு தியாகு வந்தபோது ராஜீவ் ஏற்கனவே தொலைக்காட்சியில் ஈ.எஸ்.பி.என்.(E.S.P.N.) சானலில் கால்பந்தாட்ட விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“ராஜீவ், காலையிலேயே கால்பந்தாட்டப் போட்டியா? இன்றைக்கு முழுவதும் இது மட்டும்தானா...”

“ஏன் கூடாதா? பன்னிரண்டாவது வகுப்பு அடுத்த வருடம்தானே. இந்த வருடம் கொஞ்சம் சாவதானமாக இருந்தால்தான் என்ன?” என்றான் ராஜீவ்.

“அந்தக் க்ளையன்ட் என்னிடம் இந்தியா குறித்துக் கேட்டுத் தெரிந்துகொள்ளத்தான் வாய்ப்புகள் அதிகம்” என்று சொல்லிவிட்டு, ராஜீவிடமிருந்து தொலையியக்கியைப் (Remote) பிடுங்கிச் செய்திச் சானல் ஒன்றைத் தெரிவு செய்து வருவித்தான் தியாகு. செய்திச் சானல் ஒன்று, திரையில் ஓடும் எழுத்துக்களுடன் அன்றைய செய்திகளை விவரித்துக்கொண்டிருந்தது.

‘சற்று முன் கிடைத்த தகவல். தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தள்ளாகுளம் கிராமத்தில் திடீரென ஒரு கரும்பள்ளம் தோன்றியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. சிறிது நாட்களுக்கு முன்னர் உலகின் பல இடங்களில் உலோக ஸ்தூபிகள் தோன்றி பீதி உண்டாக்கி பின் மறைந்தது நினைவிருக்கலாம். இப்போது தோன்றியிருக்கும் இந்தக் கரும்பள்ளங்கள் அதன் தொடர்ச்சியோ என்ற ஐயம் விண்வெளி ஆய்வாளர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. தள்ளாகுளம் கிராமத்திலிருந்து புறப்பட்டிருக்க வேண்டிய பேருந்து புறப்படாததால், விவசாயச் சந்தைக்கு வந்திருக்க வேண்டிய காய்கறிகள், நெல் முதலான பொருட்கள் வராததால் விவசாயப் பொருட்கள் பதுக்கப்படுகின்றனவா என்றொரு கேள்வியும் இதனடிப்படையில் எழுந்திருக்கிறது....’

தொலைக்காட்சிப் பெட்டியில் செய்தித் தொகுப்பாளர் செய்தி வாசித்துக்கொண்டிருந்தாள். தொடர்ந்து ஒரு சிறிய காணொளி காட்டப்பட்டது.

“தஞ்சாவூரில் தள்ளாகுளம்.. ஏய்? அது நம் ஊருக்குப் பக்கத்து ஊர்” தியாகுவின் குரல் கேட்டு ராஜீவ் ஸ்தம்பித்துத் திரும்பினான்.

“ஓ... சரி.. அதற்கென்ன?”

“அதற்கென்னவா? வாழ்க்கையில இதுகாறும் இப்படி எத்தனை முறை கேட்டிருக்கிறாய் நண்பா?”



“பூஜ்யம்.”

“பிறகு என்ன? கிளம்பி வா..”

“எங்கே?”

“அந்தக் கிராமத்துக்கு. போய்ப் பார்ப்போம்.”

“ஆனால், அடுத்த வாரம் மாதிரித் தேர்வுகள் (Model Exams) இருக்கிறதே. அதுவும் கணினித் தேர்வு... இன்றைக்கே நான் கோட் அடித்து (coding) முடிக்கவேண்டும்.. அப்போதுதான் ஆற அமர உட்கார்ந்து நான் எழுதியதை நானே பூரணமாய்ச் சோதித்துத் தேர்வுக்குத் தயாராக முடியும்.”

“அதெல்லாம் நீ நிச்சயம் செய்துவிடுவாய்.. உன் மீது எனக்கு அபார நம்பிக்கை

இருக்கிறது. இதற்கெல்லாம் நீ ஒரு வாரம் எடுத்துக்கொண்டால் அது உன் திறமைக்கே அசிங்கம்.”

“அடப்பாவி.. இந்தத் தேர்வில் என்னை மொத்தமாகக் காலி செய்துவிடலாம் என்பதுதான் உன் உத்தேசமா” என்ற ராஜீவ் சிறிது அமைதிக்குப்பின்,

“சரி..வருகிறேன்” என்றான்.

தியாகு சமையற்கட்டிற்குச் சென்று அவசரமாக ரொட்டியை முட்டையில் நனைத்து, அடுப்பில் பிரட்டி எடுத்து மதிய உணவுக்கான பாத்திரத்தில் வைத்துக்கொண்டான். ஒரு கைப்பையில் அணிந்துகொள்ள சில மேலாடைகள், கால்சட்டைகள், பல் துலக்கி, மின்கலன் (Battery) என எல்லாவற்றையும் எடுத்துத் திணித்துக்கொள்வதற்கும், ராஜீவின் மிதிவண்டி வாசலில் மணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது. வீட்டைப் பூட்டிவிட்டு ராஜீவின் மிதிவண்டியின் பின்பக்க இருக்கையில் ஏறி அமர்ந்துகொள்ள ராஜீவ் மிதிவண்டியை ஊர் நோக்கிச் செலுத்தினான்.

அங்கே தள்ளாகுளம் கிராமமே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. கிராமத்தில் கரும்பள்ளம் என்றவுடன், அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் தள்ளாகுளம் கிராமத்துக்கு வந்து பார்க்க, அந்தக் கிராமத்துக்குத் தற்காலிகமாகச் சுற்றுலா மதிப்பு கிடைத்துவிட்டிருந்தது.

மிதிவண்டியை நிறுத்திவிட்டு ராஜீவும், தியாகுவும் கிராமத்தின் எதிர்பாராத பரபரப்பைத் தங்கள் அலைபேசியில் சலனப்படங்களாக உள்வாங்கிக்கொண்டார்கள். பொழுதுபோக்கு உலகில், இந்தச் சலனப்படங்களுக்கும் ஏதேனும் கிராக்கி இருக்கலாம் என்பது அவர்களது ஊகமாக இருந்தது.

கூர்ந்து அவதானித்ததில் கரும்பள்ளம் உண்மையிலேயே கரும்பள்ளம் இல்லை எனவும், குளத்து நீர் அடர் கருமை நிறம் கொண்டிருக்கிறது என்பதுவும் புரிந்துவிட்ட பிறகும், ‘கரும்பள்ளம்’ என்ற பதம் ஏதோவொரு விதத்தில் கவர்ந்ததில், அவ்விதமே தொடர்ந்து அழைக்கப்பட்டதை ராஜீவும், தியாகுவும் புரிந்துகொண்டார்கள். அந்தப் பதம்தான் அந்தக் கிராமத்தை உலகறியச்செய்யவும் செய்திருந்தது.

கிராமத்தில் இருந்த ஒரே குளமும் இப்படியாகக் கரும்பள்ளமாகிவிட்டபடியால் இனி கிராமத்தில் வாழ்க்கை இல்லை என்று தோன்றி மக்கள் பரபரப்பானார்கள். அந்தக் குளத்து நீரை இனிமேலும் பயன்படுத்தலாமா என்ற கேள்வி எழுந்திருந்தது.

கோயில்களில் சிலர் சாமியாடினார்கள். கோயில் பூசாரி, தெய்வக்குத்தம் நடந்துவிட்டதாய் ஆரூடம் சொல்லிப் பரிகாரமாகக் கிடாய் விருந்து வைக்கச்சொல்லிப் பணித்தார். கிராமம் அவசரமாகக் கூடி, கிடாய் விருந்துக்குப் பரபரப்புடன் தயாரானது. கிராமத்திலிருந்த ஒரே ஒரு பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டதால், பள்ளிக்கூடத்திலிருந்த வாத்தியார் தானியம்மா நகரத்திற்குச் சென்றுவிட்டிருந்தாள்.

கிராமத்திற்கு நாட்டின் பரபரப்பான செய்தி நிறுவனங்களிலிருந்து நிருபர்களும், பத்திரிக்கையாளர்களும் குவிந்தார்கள். ஆளுக்கொரு கிராமத்து மனிதரை அண்டி பேட்டி எடுத்து ஒளிபரப்பினார்கள். அயலூர் செய்தி நிறுவனங்கள் தங்கள் வசதிக்கு உபகரணங்களை நிறுத்திவைக்க கூடாரம் அமைக்க, அந்தக் கிராமம் சட்டென நவ நாகரீக கால்சட்டை, மேலங்கி அணிந்த கிராமத்துப்பெண் போலத் தோற்றப்பொலிவு கண்டிருந்தது.

“அதெப்படி.. திடீரென்று ஒரு குளம் இருளாகும்? ஒருவேளை குளத்துத் தண்ணீரில் யாரேனும் கருப்பு நிறச் சாயத்தை (paint) ஊற்றிவிட்டார்களோ?” என்றான் தியாகு.

“தெரியவில்லை. நான் கூட ஏதோ புரளி என்றுதான் நினைத்தேன்.. இப்போதுதான் தெரிகிறது.. உண்மையாகவே இங்கு ஒரு

முழுக் குளம் கருப்பாகியிருக்கிறது” என்றான் ராஜீவ் எட்ட நின்று கருப்பாகிவிட்ட குளத்தை வேடிக்கை பார்த்தபடி.

கரையில் நின்றபடி சிலர் குளத்தினுள் கல் விட்டு எரிய, கல் குளத்தில் நீரில் ‘பளக்’ என்ற ஓசையுடன் முங்க, அந்தக் கல்லிற்குச் சமமான எடையுள்ள நீரைக் குளம் தூக்கிப்போட்டுப் பிடித்துக்கொண்டது. அப்படி மேலெழும்பிக் குதித்த நீர், எப்போதும் போலான நீர் போலத்தான் தோற்றத்தில் இருந்தது. எனினும், அது சென்று சேர்ந்த குளம் கருப்பாகவே இருந்தது. தன் மேல் விழுந்த ஒளியைப் பிரதிபலிக்க மறந்துபோனது போலவே நடந்துகொள்வதாகத் தோற்றம் தந்தது அந்தக் குளம்.

ராஜீவும், தியாகுவும் கிராமம் முழுக்க அலைந்தார்கள். எங்கேனும் கிராம மக்களே கூட்டாகச் சேர்ந்து தங்கள் கிராமத்திற்குச் சுற்றுலா மைய அந்தஸ்தைப் பெற குளத்திற்கு மட்டுமென ஏதேனும் செய்துவிட்டார்களோ என்று சோதிப்பது அவர்களது நோக்கமாக இருந்தது. கிராமத்தின் ஒரே ஒரு பள்ளிக்கூடம், மலையடிவாரம், பெரிய கிணறு, ஒரே ஒரு அய்யனார் கோயில் என எதையும் விடாமல் அலைந்தார்கள்.

அரசுத் தரப்பிலிருந்து சிலர் வந்து குளத்து நீரைக் கொஞ்சம் எடுத்துப்போய்ச் சோதித்துவிட்டு, நீர் இயல்பாகவேதான் இருக்கிறது என்றும், எவ்விதக் களங்கமும் இல்லை என்றும் சான்றிதழ் அளித்தார்கள். ஆயினும் அவர்களாலும், எவ்விதக் களங்கமும் இல்லாதிருப்பினும், குளம் ஏன் கரும்பள்ளமாகக் காட்சி அளிக்கிறது என்பதை விளக்க முடிந்திருக்கவில்லை. ஆராயக் கால அவகாசம் கோரிவிட்டுச் சென்றார்கள்.

“எனக்குத் தெரிந்து வாண்டாப்ளாக் (Vantablack) என்ற ஒன்று இருக்கிறது. அது தன் மேல் படுகிற ஒளியை நூறு சதம் பிரதிபலிக்காதாம். ஒருவேளை அப்படி ஒன்றை எடுத்து இந்தக் குளத்தில் வீசிவிட்டிருப்பார்களோ?” என்றான் தியாகு.

“அப்படி ஒரு சமாச்சாரம் இருப்பதையே இவர்கள் அறியாதவர்களாகத்தான் இருப்பார்கள் தியாகு. அதுமட்டுமில்லாமல், அப்படி ஏதேனும் கலக்கப்பட்டிருப்பின், அரசுத் தரப்பில் சோதனை மேற்கொண்டபோது வெளிப்பட்டிருக்கும். குறைந்தபட்சம், நீர் களங்கப்பட்டிருக்கும் அல்லவா? நீருக்கு ஏது நிறம்?” என்றான் ராஜீவ்.

“பிறகு ஏதேனும் பில்லி சூன்யம்....” என்றான் ராஜீவ் தொடர்ந்து.

“நீயெல்லாம் கணினியை விருப்பப் பாடமாக எடுத்துப் படிப்பவனென்று சொல்லிக்கொள்ளாதே ராஜீவ்.. ” என்றான் தியாகு கிண்டலாக.

அந்தக் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் வெளிச்சம் பரவிக்கிடந்தது. ஆனால் அந்தக் குளம் மட்டும் இருளாகியிருந்தது. எட்டிப்பார்த்தால் எல்லையில்லாத கரும்பள்ளம் போல் காட்சி அளித்தது. தொட்டால் ஒட்டிக்கொள்ளுமோ என்று அச்சம் தரும் அளவிற்கு இருந்த அந்தக் கருமை நிறம் தோற்றத்திலேயே பார்ப்பவரை அச்சமூட்டுவதாய் இருந்தது. யாரேனும் கல் வீசி எறிந்தால், நீர் சற்று மேலெழும்பி மீண்டும் குளத்தில் விழுந்தது. அந்த நீர், நீர் போலத்தான் இருந்தது. குளத்துள் விழுந்ததும் மீண்டும் கருப்பாகிப்போனது.

தியாகுவும், ராஜீவும் அந்தக் கிராமத்தினருடன் அந்த நாளின் மாலை, பின்மாலை மற்றும் இரவைக் கழித்தார்கள். கிராமத்தில் அந்தக் கிராம மக்களின் பொருட்டு, உதவ முன்வந்த அனைவருக்கும் கிராமத்தார் உணவு வழங்கினார்கள்.

குளம் கரும்பள்ளமாகிப்போய், குளத்து நீரைப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துவிட்ட பிறகு கிராமத்தை, கிராமத்தின் மக்களை ஒட்டுமொத்தமாகத் தத்து எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வந்திருப்பதாகத் தொலைக்காட்சிகளில் அறிவிக்கப்பட்டது.

நேரம் செல்லச்செல்ல அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்து மாட்டு வண்டிகளில்

குடிநீரைக் குடம் குடமாக எடுத்துவந்து தள்ளாகுளம் கிராமத்து மக்களுக்குத் தந்து உதவினார்கள்.

இரவு வரை திரும்பிடாத இயல்பில் சோர்வுற்றிருந்த கிராம மக்களை உற்சாகப்படுத்த, இரவெல்லாம் பாட்டு பாடியும், நடனமாடியும் கழித்தார்கள். வள்ளி திருமணம், நல்லதங்காள் நாடகங்கள் கிராமத்து மக்களால் ஒரு பொதுவான இடத்தில் அரங்கேற்றப்பட அதுவே மற்றவர்களுக்கு அந்த இரவைக் கழிக்கும் ஒரு மார்க்கமாகவும் ஆயிற்று.



நாடகங்கள் நடந்துகொண்டிருக்கையிலேயே கிராமம் முழுக்க அலைந்ததில் சோர்வுற்றிருந்த தியாகுவும், ராஜீவும் கிராமத்தின் குளத்தில் இறங்கிச் சற்று நீரள்ளி முகத்தில் தெளித்துக்கொள்ள, அவர்கள் கண்களில் ஒன்றிரண்டு தக்கைகளின் (ஜிலீமீக்ஷீனிஷீநீஷீறீ) துண்டுகள் தென்பட்டன. அதன் மீது முகம் பார்க்கும் கண்ணாடிகள் தெரிந்ததையடுத்து தியாகு மணி பார்த்தான். விடிகாலை ஐந்து மணியை நெருங்கிக்கொண்டிருந்தது.

“அது நம்ம பயல்கள் விளையாடியதுதான்..” என்ற குரல் கேட்டுத் திரும்ப, அங்கே கரையில் வீரையன் நின்றிருந்தார்.

“விளையாடியதா? என்ன விளையாட்டு?” என்றான் தியாகு.

“அந்தத் தக்கைகள் (Thermocol) மேல் கண்ணாடியை வைத்தால், கண்ணாடி சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும்.. அந்த விளையாட்டுத்தேன்.. நேற்று இந்த நேரத்திற்குக் கண்ணாடியை வைத்து சூரியனுக்கே சூரிய ஒளியைத் திருப்பிவிட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள்” என்றார் கரையோரம் நடந்தபடியே.

அவர் நடந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த தியாகு, ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்க, “என்ன?” என்பதாய்த் தியாகுவை ஏறிட்டான் ராஜீவ்.

தியாகு அவசர அவசரமாகத் தேட, சற்று தள்ளி, குளத்தில் மீன் பிடிக்கும் பொருட்டு கிடத்தப்பட்டிருந்த வலை ஒன்று கரையில் தென்பட்டது.

தியாகு அந்த வலையை எடுத்துத் தலையைச் சுற்றி இரண்டு முறை சுற்றி, குளத்தில் வீச, வலை அழகாய் வட்டமாய் விரிந்து குளத்தில் விழுந்தது. பின் தியாகு வலையைப் பலம் கொண்ட மட்டும் இழுக்க, ராஜீவ் தியாகுவுக்கு உதவ, இருவருமாய் வலையைக் கரைக்கு இழுத்தனர். வலையோடு எல்லாக் கண்ணாடிகளும், தக்கைத் (Thermocol) துண்டுகளும் வலையில் சிக்கிக் கரைக்கு வந்தன.

“இன்னும் சற்று நேரத்தில் இங்கு இந்தக் கரும்பள்ளம் மறைந்துவிட்டால் நான் நினைப்பதுதான் சரி” என்றான் தியாகு.

சொல்லிவிட்டு தியாகு குளத்தையே பார்க்க மெல்ல மெல்ல குளத்தை மூடிக்கிடந்த கருமை நீங்கி, குளம் இயல்பான தோற்றத்துக்கு வந்தது. பகல் பொழுதானதால், குளம் வானத்தையும், அதில் கடந்து போகும் வெண் மேகங்களையும் அவற்றினூடே பறந்து திரியும் பறவைகளையும் பிரதியெடுத்தது.

இருபத்து நான்கு மணி நேரத்துக்குப்பின் குளம் தன் இயல்பான தோற்றத்திற்கு மீண்டதைப் பார்த்த சந்தோஷத்தில் கிராம மக்கள் துள்ளிக்குதித்தனர். ஒருவரையொருவர் கட்டி அணைத்துக்கொண்டனர். செய்திகளில் தள்ளாகுளம் கிராமத்தின் பிரச்சனை தீர்ந்ததென்று அறிவிக்கப்பட்டு, அடுத்தடுத்த பிரச்சனைகள் முன்னுரிமை தரப்பட்டு மக்களின் கவனம் தள்ளாகுளம் கிராமத்தை

விட்டகன்றது.

குளத்தைப் பார்க்க அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்து வந்தவர்களெல்லாம் தத்தமது ஊர்களுக்குத் திரும்பத்துவங்கினர்.

கிராமத்தில் குவிந்திருந்த செய்தித் தொகுப்பாளர்கள், தள்ளாகுளம் கிராமத்தில் இருபத்து நான்கு மணி நேரத்துக்குப் பிறகு கரும்பள்ளம் நீங்கிவிட்டதாக விவரித்து செய்திச் சலனப்படங்கள் உருவாக்கி தங்கள் செய்தி நிறுவனங்களின் தலைமைச் செயலகங்களுக்கு அனுப்பினர்.

“எப்படிடா சொன்னாய், கரும்பள்ளம் மறைந்துவிடுமென்று?” என்று காதருகே வந்து வினவினான் ராஜீவ்.

“சொன்னாலும் நீ நம்ப மாட்டாய் ராஜீவ்.”

“அட! சொல்லடா.”

“சொல்கிறேன். நேற்று இந்தக் கிராமத்தின் சின்னப் பிள்ளைகள் சூரியனை நோக்கிக் கண்ணாடியைத் திருப்பிக் காட்டியிருக்க வேண்டும். அதனால், சூரியனின் ஒளி மீண்டும் சூரியனுக்கே திருப்பி விடப்பட்டிருக்க வேண்டும்.”

“அதனால்?”

“கொஞ்சம் கற்பனை செய்து பார். நீ ஒரு கணினி மென்பொருள் படிக்கிறவன். ஒரு கணினித்திரைக்கான மென்பொருளை உருவாக்குகிறாய் என்று வைத்துக்கொள்வோம். நீ கணிப்பொறியை வைத்து உருவாக்குற ஒரு திரையில் ஒரே ஒரு இடத்தில் ஒரு வெளிச்சப்புள்ளி அளவுக்கு அதிகமாக ஒளிர்ந்தால், எப்படி நீ அதைச் சரி செய்வாய்?”

“அது எங்கிருந்து வருகிறதென்று பார்த்து, அந்த இடத்தில் என்ன பிழை என்று பார்த்து, அதைச் சரி செய்வேன்.”

“எங்கிருந்து வருகிறதென்று உன்னால் சட்டென்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு மிகவும் கடினமான சிக்கலான செயல்முறை அது. ஆனாலும், நீ உடனடியாக அதைச் சரி செய்யவேண்டுமென்ற ஓர் இலக்கு இருந்தால்?”

“வோல்க்ஸ்வேகன் (volkswagen) மகிழுந்துகளில் புகை போக்கிச் சோதனைக்கென (emission test) செயற்கையாக ஒரு தீர்வை வைத்தார்களே. அது போல, அப்போதைக்கு, அதிகப்படியான வெளிச்சம் வரும் இடத்தில் ஒளி தானாகவே மங்குவதாகத் தற்காலிகமான ஒரு தீர்வை மென்பொருள் வாயிலாகவே வழங்குவேன். எப்போது அப்படி ஒரு மிகை ஒளி வந்தாலும், மென்பொருள் தானாகவே அந்த ஒளியை மங்கச்செய்துவிடுமாறு செய்வேன்.”

“அதுதான் இங்கும் நடந்திருக்கிறது. அந்தப் பிள்ளைகள் சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடி மூலமாகப் பிரதிபலித்து விண்ணுக்கே திருப்பி அனுப்பியபோது, அதை அதிகப்படியான ஒளி என்று உணர்ந்து, தற்காலிகமாக தள்ளாகுளம் கிராமத்தை நாமிருக்கும் பாவனை நிரல் (Simulation) மென்பொருள் மங்கலாக்கிவிட்டிருக்கிறது. அதுதான் தள்ளாகுளம் கிராமத்துக் குளத்தில் கரும்பள்ளம் உருவான தருணம்,” என்றான் தியாகு.

“எனக்கு ஒன்றுமே புரியவில்லை தியாகு” என்றான் ராஜீவ் பரிதாபமாக.

“தெளிவாக விளக்குகிறேன். உன் கணினியில் வைரஸ் (virus) வந்தால் என்னாகும்?”

“ஆன்டிவைரஸ் (anti-virus) போன்ற ஒரு சுத்தம் செய்யும் மென்பொருள் உடனே வந்து அந்த வைரஸ் மென்பொருளை அழிக்கும்.”

“இப்போது தள்ளாகுளம் கிராமத்துக் குளத்தில் கரும்பள்ளம் வந்ததற்கு நாம்தான் சுத்தம் செய்ய வந்த மென்பொருள்.”

“என்ன சொல்கிறாய் நீ? நிஜமாகவா?”

“ஆமாம். நன்றாக யோசித்துப்பார். நீ ஈ.எஸ்.பி.என்னில் கால்பந்தாட்ட விளையாட்டு பார்த்துக்கொண்டிருந்தாய். நான்தான் உன்னைக் கட்டாயப்படுத்தி, செய்திகளுக்குத் திருப்பினேன். நீயும் நானும் ஒன்றாக இங்கே வந்தோம். இங்கே இருந்த

பிரச்சனையைச் சரி செய்தோம்."

"அப்படியானால் நாம் தள்ளாகுளம் கிராமத்தில் குளம் கரும்பள்ளம் ஆனதைச் சரி செய்ய அனுப்பப்பட்டவர்களா?"

"ஆமாம்."

ராஜீவ் தலையில் கைவைத்தபடி மிதிவண்டியை நோக்கி நடந்தான். இருவரும் தங்கள் மிதிவண்டி அருகே அமர்ந்தார்கள்.

"இது நிஜமாவே நடக்கிறதா தியாகு? நாம் ஒரு பாவனை நிரலுக்குள் (Simulation) இருக்கிறோமா?" என்றான் ராஜீவ் நம்பிக்கையே இல்லாமல்.

"சர்வ நிச்சயமாக.. இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்பும் நடந்திருக்கிறது.."

"இதற்கு முன்புமா?"

"ஆமாம்.. பிள்ளையார் பால் குடித்தார் என்று கேள்விப்பட்டதில்லையா? இயேசு கண்ணீர் விட்டார் என்று கேள்விப்பட்டதில்லையா? அதுவெல்லாம் வேறு என்ன? நாம் எல்லோருமே ஒரு பாவனை நிரலின் (Simulation) அங்கமாகத்தான் இருக்கிறோம், ராஜீவ்.. நன்றாகக் கவனித்துப்பார்.. நம் எல்லாருக்குமே ஏதோ ஒரு பிரச்சனை யாராலோ நேர்கிறதுதான். அதே நேரம் அந்தப் பிரச்சனைகளும் யாராலோ எப்படியோ தீர்ந்தபடியேதான் இருக்கிறது. தீர்வுகள் நமக்குச் சாதகமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், யாரோ தீர்த்தபடிதானே இருக்கிறார்கள்... இந்தக் கிரகம், இதில் இருக்கிற மானுட வாழ்வு, இதிலுள்ள கஷ்டங்கள், நஷ்டங்கள், சந்தோஷங்கள், துக்கங்கள் என்று எல்லாமுமே ஒரு பெரிய மென்பொருள் போலத்தானே செயல்படுகிறது."

"எப்படிச் சொல்கிறாய்?"

"நம் பார்வைக்கோணங்களை வைத்துத்தான் நாம் விரும்பவோ, வெறுக்கவோ படுகிறோம். அதை கவனிக்கிறாயா? எந்த விதமான பார்வைக்கோணங்களும் அற்ற ஒருவர் ஏன் யாராலுமே விரும்பப்படுவது இல்லை? இதற்கு என்ன பொருள்? நாம் சுமந்திருக்கிற கருத்தாக்கம், பார்வைக்கோணம், நம்மால் யாருக்கு எவ்வகையில் எந்தளவிற்குப் பயனுள்ளவராக இருக்க முடியும்? இதுதான் இந்த உலகத்தோடு நம்மைப் பிணைக்கிற சக்தியாக இருக்கிறது. அப்படியானால் நாம் எல்லோருமே வெறும் கவனிப்பான்களாகவே (listener) இருப்பது போலத்தான் இருக்கிறது. இல்லையா?"

"சரிடா.. இதற்கெல்லாம் என்ன நிரூபணம்?"

"எதிர்கால மனிதர்கள் (Post-Humans) தொழில்நுட்பத்தில் நம்மை விடவும் பன்மடங்கு மிகவும் ஆற்றல் மிக்கவர்களாய் இருப்பார்களென்று நம்புகிறாயா?"

"ஆமாம்."

"அதை ஏற்றுக்கொள்ளும் நீ, அவர்களால் நாம் ஒரு பாவனை நிரல் (simulation) ஆவோம் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சில சமயங்களில், நாம் சரியான பார்வைக்கோணங்களையே பெற்றிருந்தாலும், அதைச் சரியான முறையில் வெளிப்படுத்தியிருக்காவிட்டாலும், வெளிப்படுத்தியிருந்தால் அடைந்திருக்கக்கூடிய சாதகங்களை அடைவதில்லை. நாம் நமக்குள்ளாக சரியாகவே இருந்தாலும், நாம் வெளிப்படுத்திக்கொள்கிற விதம் சரியாக இல்லாதபோது, நாம் தவறாகப் பார்க்கப்படுகிறோம் எனில் அதற்கு என்ன அர்த்தம்? இப்படியெல்லாம் நம் இயங்கு இயல்பைத் தீர்மானிப்பது ஒரு கணினி மென்பொருளை ஒத்திருக்கிறது அல்லவா?" என்றான் தியாகு.

"இல்லை. இந்த உன் பதில் உன் வாதங்களை ஒப்புக்கொள்ளவைப்பதாக இல்லை தியாகு" என்றான் ராஜீவ் உதட்டைப் பிதுக்கியபடி.

"சரி. உன் வாதம்தான் என்ன? இது ஏன் பாவனை நிரல் (simulation) இல்லை என்கிறாய்?" என்றான் தியாகு.

"நாம் ஒரு பாவனை நிரல் (simulation) என்றால் இன்னொரு நிரலை உருவாக்கும்

வகையினதான ஒரு தொழில்நுட்பத்தை, அதற்குத் தேவையான சக்தியை இந்த நேரம் பெற்றிருந்திருப்போம். அது இதுகாறும் நிகழவில்லையே? இன்றும் நகரத்தில் சுமார் பதினாறு மணி நேரத்துக்கு மின்சாரம் துண்டிக்கப்படுகிறதே. அதுமட்டுமில்லாமல் இது பாவனை நிரல் (simulation) என்றால், பிள்ளையார் பால் அருந்தியதோ, ஜீசஸ் கண்ணீர் விட்டதோ சிமுலேஷனிலிருந்து நீக்கப்பட்டு, நம் நினைவுகளிலிருந்தும் அகற்றப்பட்டிருக்கலாம் அல்லவா? அப்படி நடக்கவில்லையே?" என்றான் ராஜீவ்.

"நீ சொல்வதெல்லாம் இது பாவனை நிரல் (simulation) இல்லை என்பதாக நம்மை நம்ப வைக்கும் உத்தியாகக்கூட இருக்கலாம். எப்படியாகினும், உன் வாதம் அதுவானால், என் கேள்வி இதுதான். நாம் விண்மீன்களுக்கிடையே ஏன் பயணிக்கவில்லை?"

"அதற்கு ஒளியின் வேகத்தில் செல்ல வேண்டும். அது சாத்தியமில்லை அல்லவா?"

"கொஞ்சம் யோசித்துப்பார். ஏன் சாத்தியமாவதில்லை? அது சாத்தியமானால், நீ பாவனை நிரலுக்கு (simulation) வெளியே சென்றுவிடுவாய். ஆகவே அது திட்டமிட்டே நமக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், இது பாவனை நிரல் (simulation) இல்லாமல் என்ன?" என்றான் தியாகு.

ராஜீவ் யோசனையாய் தியாகுவைப் பார்த்துவிட்டு மௌனித்தான். சற்று நேரம் இருவருமே எதுவுமே பேசிக்கொள்ளாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்கள். சற்று நேர ஆழ்ந்த யோசனைக்குப் பின்,

"சரி. இருக்கட்டும் தியாகு. இது பாவனை நிரலா (simulation) இல்லையா என்பது நமக்கோ, இந்த கிராம மக்களுக்கோ தேவையற்றது என்று எண்ணுகிறேன். இது பாவனை நிரலாக (simulation) இல்லாமல் நிஜ உலகாக இருந்தாலும், நீயும் நானும் பிறிதேதோவோர் காரணத்திற்காகவோ காரியத்திற்காகவோ விரும்பப்படவோ வெறுக்கப்படவோதான் ஆகியிருக்கும். இது பாவனை நிரலோ (simulation) இல்லையோ, இந்த அமைப்புக்குள் இருக்கக் கிடைத்த வாய்ப்பில், இந்த ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பில், இந்த ஒட்டுமொத்தச் சட்டகத்தில் நீயும் நானும் எதை நடத்திவைக்க, எதை அனுபவிக்க, எதற்குக் காரணகர்த்தாவாக விதிக்கப்பட்டிருக்கிறோமோ, அதைப் பூரணமாக நிறைவேற்றுவதில்தான் நம் இருப்புக்கான அர்த்தமும் கிடைக்கிறது என்று எண்ணுகிறேன்."

"ஒருவேளை, இது பாவனை நிரலாகவே (simulation) இருந்தாலும் கூட, இந்த நிரலை உருவாக்கிய அந்த அதியுயர் உயிர்களும் இவ்விதம், தங்களின் இருத்தலைக் கொண்ட ஒருங்கிணைப்பில், கட்டமைப்பில், தாங்கள் எதை நடத்திவைக்க, எதை அனுபவிக்க, எதற்குக் காரணகர்த்தாவாக விதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அதைப் பூரணமாக நிறைவேற்றுவதில் தங்கள் இருப்புக்கான அர்த்தங்களைக் காண்பவர்களாகத்தான் இருக்க அதிகபட்ச வாய்ப்பிருக்கிறது. அப்படியானால் அவர்களின் இயக்கமும் கூட, ஒரு மென்பொருளின் இயக்கத்தை ஒத்திருக்கவே வாய்ப்பிருக்கிறது. இந்தப் பின்னணியில் இது பாவனை நிரலா (simulation) இல்லையா என்பது ஒரு பொருட்டாக இருக்க வேண்டியதில்லை என்றே தோன்றுகிறது," என்றான் ராஜீவ்.

"அதுவும் சரிதான்" என்றான் தியாகு.

தள்ளாகுளம் கிராமத்துக்குளத்தில் இப்போது அந்த கிராமத்துக் மக்கள் தத்தமது வீடுகளின் தேவைக்கெனத் தண்ணீர் எடுக்கவும், தத்தமது மாடுகளைக் குளிப்பாட்டவும், பொடியன்கள் தொப்பென்று விழுந்து விளையாடவும் செய்து தங்கள் வழமைக்குத் திரும்பியிருந்தார்கள்.

தியாகுவையும் ராஜீவையும் சுமந்துகொண்டு அவர்களது மிதிவண்டி, நகரத்தின் வழமைக்குத் திரும்ப சாலையில் விரையத் துவங்கியிருந்தது. ■

தொடர்-41

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

கனவுகள் பூக்கும் பருவத்தில்தான் கவிதைகளும் பூக்கின்றன. இன்னும் பட்டவர்த்தனமாகச் சொல்ல வேண்டுமானால், கனவுகள் துளிர்க்காத மனதில் கவிதைகள் ஒருபோதும் பூப்பதில்லை. மனசுக்குள் விழும் கனவின் விதை, வேரிறக்கி, மெல்லத் துளிர்த்து வளரும்போது, கூடவே கவிதைகளும் வளரத் தொடங்குகின்றன.

நொடிதோறும் கண்ணில் படுகிற காட்சிகளிலெல்லாம் ஏதேனுமொரு புதிய கனவு பூத்துக்கொண்டேயிருக்கும் வயதை, காதல் பூக்கும் பருவமென்றும் சொல்லலாம்; இல்லையேல் கவிதை பூக்கும் பருவமென்றும் சொல்லலாம். இந்தப் பதினைந்து முதல் இருபது வரையான இடைப்பட்ட வயதில், காதலையோ கவிதையையோ கடக்காமல் யாரேனும் வந்திருந்தால் அவர்களது மனதைக் கனவுகள் பூக்காத தரிசு நிலமென்றுதான் சொல்ல வேண்டும்.

எனது பன்னிரெண்டாவது வயதில் என் கனவுகளே என்னைக் கவிதை எழுதவும் தூண்டின. எப்போதும் கவிதைக்குள்ளாகவே என் மனம் லயித்துக் கிடந்ததினால் காதல் கொஞ்சம் தாமதமாகவே எனக்குள் நுழைந்தது.

எனது பதினெட்டு வயது முதல் இருபத்தைந்து வயதுவரையிலான ஏழாண்டுக்காலத்தில் நான் அதிகம் பயணம் செய்த ஊர் காவிரி பாய்ந்தோடிய தஞ்சையே. புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருப்பதாலேயே எனக்குத் தஞ்சைப் பயணம் அதிகமாக அமைந்துவிடவில்லை. மாறாக, தஞ்சையில் தொடர்ந்து நடைபெற்ற இலக்கிய விழாக்களே என்னைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு போயின.

தொடக்கத்தில் நான் மட்டுமே சென்று வந்த தஞ்சையின் இலக்கிய விழாக்களுக்கு, பின்னர் எனது நண்பர்கள் குழாமோடும் சென்று வருவதை வழக்கமாக்கிக்கொண்டேன்.

பேருந்து நிலையம் அருகிலேயே இருந்த இராமநாதன் செட்டியார் மன்றமும், நடந்துபோகிற தூரத்தில் எதிரேயிருந்த பெசன்ட் அரங்கமும் என் இலக்கியக் காதலுக்கான குடியிருப்புகளாக மாறின.

எனது உறவுகள் என்பது புதுக்கோட்டையின் நான்கு நீள்தெருக்களுக்குள் முடிந்து போய்விடக்கூடியதே. ஆனால், இலக்கியத்தின் வழியாக எனக்குக் கிடைத்த நட்புறவு என்பது தமிழகம் கடந்தும் உலகின் திசையெங்கும் பரந்து விரிந்திருக்கிறது.




தஞ்சை மண்ணின் என் நேசத்திற்குரிய நட்புறவுகளான சுகன், செழியன், வல்லம் தாஜுபால், தங்க.செந்தில்குமார், ச.சீனிவாசன், ஆலங்குடி ஆ.ப, தியாக ஜோதி இராமலிங்கம், கவிநிலா மோகன், கதிர்பாரதி ஆகியோரைப் போலவே, திருவாரூரைச் சேர்ந்த அன்புக்கவிஞர்கள் அண்ணன் ஆரூர் தமிழ்நாடன், வெற்றிப்பேரொளி, மானா. பாஸ்கரன் உள்ளிட்ட பலரது அறிமுகமும், அவர்களது நட்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் பெருவாய்ப்பும் எனக்குத் தஞ்சையில் நடைபெற்ற இலக்கிய விழாக்களின் வழியாகவே கைகூடின.

காலவோட்டத்தில் மேலுள்ள பலரது கைகளை இன்னமும் இறுக்கமாகப் பற்றியபடியும், மேலும் பல புதிய நட்புறவுகளை இணைத்தபடியும் என் இலக்கியப் பயணம் இனிதே தொடர்கிறது.

தஞ்சையில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களில் சுற்றுவட்டாரத்திலுள்ள ஊர்களிலிருந்தும் கவிஞர்கள் சிலர் ஆர்வத்துடன் பங்கேற்று வந்தனர். அப்படியாக பங்கேற்பவர்களில் என் கவனத்தைக் கவர்ந்தவர்களுள் என் வயதொத்த பெண் தோழியும் ஒருவர்.

மெலிந்த மேனி. முகத்தில் அடர்ந்த சிரிப்பு. ஒப்பனை பூச்சுகளேதுமில்லாத அசலான கிராமத்துப் பெண்ணின் வெள்ளந்தியான தோற்றம். விழா அரங்கின் ஏதாவது ஓர் ஓரத்தில்தான் எப்போதும் அவர் அமர்ந்திருப்பார். யாரோடும் அதிகம் பேச மாட்டார். விழா நிகழ்வுகள் இரவில் வெகுநேரம் தொடரும்போது ஊருக்குக் கிளம்பிப் போய்விடுவார். ஏதோ தூரத்துக் கிராமத்திலிருந்து வருகிறார் போலும் என்று நினைத்துக்கொள்வேன்.

ஒருமுறை ‘சௌந்தர சுகன்’ இதழின் ஆண்டு விழா கவியரங்கில் நானும் அவரும் பங்கேற்றோம். அன்றைய கவியரங்கில் அவர்

வாசித்த அம்மாவைப் பற்றிய கவிதை பலரையும் கலங்கடித்தது. கண்களில் ஈரம் கசிய நானும் கவிதைக்குள் கலந்துபோனேன்.

கவியரங்கம் முடிந்த பிறகு, கவிஞருக்கு எனது பாராட்டுகளைச் சொல்லிவிட்டு, அவரைப் பற்றி விசாரித்தேன்.

“என் பேரு பஞ்சவர்ணம். நாகப்பட்டினத்திலுள்ள சாட்டியக்குடி என் ஊரு...” என்று தன்னைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்திக்கொண்டார். அதன்பிறகு இலக்கிய விழாக்களில் சந்திக்கும்போதெல்லாம் இருவரும் பேசிக்கொள்வதுண்டு.

அந்தக் கவிஞருடனான நட்பு உண்டாகி, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. ஆனாலும், அன்றொரு நாள் கவியரங்கில் அவர் வாசித்த அந்த மூவரிக் கவிதை இன்னமும் என் நினைவில் எரிந்துகொண்டேயிருக்கிறது.

‘அம்மா...

அடுப்பைப் பற்ற வை;

குளிராவது காயலாம்.’

மிகச் சிறிய கவிதைதான்; எவ்வளவு வலிமிக்க சமூக உண்மையை முகத்திலறைந்து சொல்கிறது. இந்தக் கவிதையையும் இதையெழுதிய கவிஞரின் பெயரையும் என் மனதில் ஆழமாகப் பதிந்துகொண்டேன்.

அந்தப் பஞ்சவர்ணம்தான்... இன்றைக்குத் தமிழ்க் கவிதைகளில் தனது காத்திரமான கவிதைப் பங்களிப்பினைத் தொடர்ந்து வழங்கிவரும் அன்புத்தோழமை கவிஞர் இளம்பிறை.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சியிலுள்ள சாட்டியக்குடி எனும் கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பமொன்றில் 1971 இல் ஏப்ரல் 23 அன்று பிறந்த பஞ்சவர்ணம், சன்னாசி-கருப்பாயி தம்பதியினருக்கு ஐந்தாவது மகள். இளவயதிலேயே கல்வி கற்பதிலும், கவிதைகள் படிப்பதிலும் ஆர்வம்கொண்ட பஞ்சவர்ணம், சாட்டியக்குடியிலுள்ள அரசுப்பள்ளியில் படித்தார்.

கிராமத்துப் பாட்டிகள் வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்துகொண்டு சொல்லும் கதைகளை விரும்பிக் கேட்டுக்கொண்டும், வானொலியில் ஒலிபரப்பாகும் நாடகங்களை ரசித்துக்கொண்டும், திரைப்படம் பார்க்கச் செல்வதை ஒரு திருவிழாவுக்குப் போவதைப் போல வைபவமாக்கிக்கொண்டும் தனது சிறுவயது நாட்களைக் கழித்தார் பஞ்சவர்ணம்.

மின்சார வசதிகூட இல்லாத குடிசை





வீட்டிலே வளர்ந்தார் பஞ்சவர்ணம். பொழுது சாய்ந்தால் வீட்டில் மண்ணெண்ணெய் விளக்கேற்றுவார்கள். அதிலும் மண்ணெண்ணெய் சிக்கனத்திற்காக இரவு எட்டு மணிக்கே விளக்கை அணைத்துவிட்டு, வீட்டுக்கு வெளியே பாயை விரித்துப்போட்டு, பக்கத்து வீடுகளிலுள்ள உறவினர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து கதை பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பேசும் கதைகளில் முனி, காட்டேரி என்று விதவிதமான பேய்கள் வரும். சிறுவயதில் அந்தக் கதைகளைக் கேட்டு, அதில் வரும் பேய்களெல்லாம் உண்மையென்று நம்பி, பயந்திருக்கிறார் பஞ்சவர்ணம்.

அன்றைய காலத்தில் குடும்பத்தோடு சினிமா பார்க்கப்போவதுதான் பல குடும்பங்களுக்கான ஒரே பொழுதுபோக்காக இருந்தது. பக்கத்து ஊரிலிருந்த சினிமாக் கொட்டகைக்குப் படம் பார்க்கப் போவதற்குப் பல நாட்களுக்கு முன்பாகவே திட்டமிட்டுக்கொண்டு செல்வது வழக்கம். ஒவ்வொரு திரைப்படம் பார்க்கச் சென்ற அனுபவமும் பஞ்சவர்ணத்திற்குள் ஒரு கவிதையெனப் படர்ந்தது. தனது கிராமத்துச் சூழலில் எதிர்கொண்ட மனிதர்களையும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் எழுதிப் பார்க்கும் ஆவல் பஞ்சவர்ணத்திற்குள் எழுந்தது.

குடும்பத்தின் வறிய நிலையிலும் முயன்று போராடி, எம்.ஏ., பி.எட்., வரை படித்த முதல் பட்டதாரியானார் பஞ்சவர்ணம்.

தனது குடும்பச் சூழலைப் பற்றியும், தன்னைச் சுற்றி வாழும் விவசாயக் குடும்பங்கள் சந்திக்கும் அன்றாட அல்லல்களையும் எளிய மொழியில் கவிதைகளாக்கினார். பாசாங்கும் பம்மாத்துமில்லாத பாமரத்தனமான தனது கவிதை மொழியால் வாசிப்பவர் உள்ளங்களில் பெரும் அதிர்வுகளை உண்டாக்கினார்.

‘இளம்பிறையே வருந்தாதே...
உனக்குள்தான்
ஒரு பூரண சந்திரன் புதைந்திருக்கின்றான்’

எனும் மகாகவி இக்பாலின் வரிகளுக்கேற்ப, பஞ்சவர்ணத்திற்குள் உறங்கிக்கிடந்த கவிதை உணர்வு, இளம்பிறையாக வெளியே வந்தது.

1990இல் ‘இளவேனில் பாடல்கள்’ எனும் தனது முதல் கவிதை நூலினை வெளியிட்டார். பின்னர், 1993இல் செல்ல மருது பதிப்பக வெளியீடாக ‘மவுனக்கூடு’ எனும் இரண்டாவது கவிதை நூலினை வெளிக்கொண்டுவந்தார். கடந்த 30 ஆண்டுகாலங்களில் தனது கவிதையின் ஊற்றுக்கண் அடைந்துவிடாமல், அவ்வப்போது கவிதை நூல்களையும், கட்டுரை நூல்களையும், ஆய்வு நூலினையும் தொடர்ந்து தந்துகொண்டே இருப்பது தமிழிலக்கியத்திற்கான கவிஞரது சிறந்த பங்களிப்பாக காலம் வரவு வைத்துக்கொண்டுள்ளது.

நிசப்தம் (1998), முதல் மனுசி (2003), பிறகொரு நாள் (2008), இறகுகள் உதிர்ந்து கிடக்கும் ஏரி (2011), அவதூறுகளின் காலம் (2018), நீ எழுத மறுக்கும் எனது அழகு (2018, மொத்தத் தொகுப்பு), கண்ணாடியில்

தெரியும் பறவை (2024) ஆகிய கவிதை நூல்களையும், வனாந்திர தனிப்பயணி (2011), காற்றில் நடனமாடும் பூக்கள் (2018) ஆகிய கட்டுரை நூல்களையும், அரங்க வெளியில் பெண்கள் (2024) எனும் ஆய்வு நூலையும் படைத்துள்ளார்.

இளம்பிறையின் கவிதைகளை மொழிபெயர்ப்பாளர் கே.எஸ்.சுப்பிரமணியன் ஆங்கிலத்தில் 'லிங்கரிங் இம்பிரிண்ட்ஸ்' (Lingering Imprints, 2019) எனும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

எதையும் கற்பனையில் எழுதாமல், வாழ்வின் ஈரம் சுரக்கும் கவிதைகளை எழுதுபவராக, வாசக மனசுக்கு நெருக்கமான கவிஞராக இளம்பிறை இருக்கிறார்.

'உங்கள் கிணற்றிலிருந்து
தூர்வாரி வெளியேற்றப்படும்
வெற்று மண்ணாய்
கொட்டப்படுகிறேன் நான்
என் கிணற்றில்
எப்போதும்
நிரம்பித் ததும்பும் நீராக
இருக்கிறீர் நீங்கள்.'

இக்கவிதையைப் படிக்கையில் நாம் யாராவாக இல்லாமல், இளம்பிறையின் கவிதைக்குள் ததும்பும் நீராகிவிடுகிறோம்.

'யாரோ சிலர்' எனும் இளம்பிறையின் கவிதையொன்று;

'யாரோ சிலரிடம்தான்
சட்டெனப் பழகத் தோன்றும்
யாரோ சிலரிடம்தான்
மனம்விட்டுப் பேசத் தோன்றும்
யாரோ சிலரிடம்தான்
உதவிகள் கேட்கத் தோன்றும்
யாரோ சிலரைத்தான்
தேடிப்போய்
பார்க்கத் தோன்றும்
அந்த
யாரோ சிலரில்
இருப்பதில்லை சிலர் கூட
உறவினர்
ஊரினர்
உடன் பணிசெய்வோர்
குடும்பத்தினராய்
ஒருபோதும்.'

உண்மைதான்; நமக்கே நமக்கான ஆறுதலான நட்பென்று நாம் நம்புபவரில் ஒருவர்கூட நம் உறவாகவோ, ஊரினராகவோ, உடன் பணி புரிபவராகவோ, நம் குடும்பத்தினராகவோ இல்லாது போகிற பெருஞ்சோகத்தை இக்கவிதை சொல்லுகையில், நாமும் சரியென்றே ஆமோதிக்கின்றோம்.

'எவ்வளவுதான்
நீருற்றிக்கொண்டே இருந்தாலும்
ஒரு மழை வருவது
போலாகுமா
தோட்டத்திற்கு.'

அன்பெனப்படும் தோட்டத்தில் பெய்கிற மழையைப்போலவே, இளம்பிறையின் கவிதைகளில் எப்போதுமே பெருக்கெடுத்தோடுவதைப் பார்க்க முடிகிறது.

'ஆனந்த விகடன்' (1926-2001) வார இதழ், தனது பவழ விழா ஆண்டினையொட்டி 75 முத்திரை கவிதைகளைத் தேர்வுசெய்து வெளியிட்டது. அதில் இடம்பெற்ற இளம்பிறையின் கவிதையொன்று இன்றைக்கும் பல இடங்களில் மேற்கோளாகச் சுட்டப்படுகிறது.

'பசுவுக்கு
உண்ணி பிடுங்கிக்கொண்டிருக்கும்
அப்பாவும்



ஆட்டுக்குட்டியை
மடியில் போட்டு
ஈத்திக்கொண்டிருக்கும்
அம்மாவும்
படித்ததில்லை
'உயிர்களிடத்தில் அன்பு வேணும்."



கிராமத்து மண்வாசத்தோடு மென்மையான மனித உணர்வுகளை அப்படியே போகிறபோக்கில் தொட்டுச் செல்வதும், தேவையெனில் குட்டிச் செல்வதுமாக எழுதும் இளம்பிறையின் கவிதைகளுக்கு நிகர், அவரது கவிதைகளே!

அன்பும் காதலும் இழைந்தோடும் இளம்பிறையின் காதல் கவிதைகளில் வெளிப்படும் வலி, நம் மனதில் நீங்கா வடுவென உறுத்திக்கொண்டே இருக்கும் வீர்யமுடையவை. வரத்தைப் பெற்ற அதே காதல் சாபத்தைப் பெறுகையில் என்னவாகிப் போகிறது? இதோ... கவிஞர் இப்படிச் சொல்கிறார்;

“இறந்த பின்பும்
ஒரே குழியில் புதைபட வேண்டும்’
என்றெல்லாம்
பேசிக்கொண்டவர்கள் நாம்.
காலம்
கற்றுத் தந்திருக்கிறது பார்த்தாயா..?
பார்த்தும்... எது குறித்தும்
பேசாமல் பிரிவதற்கு.’

கவிதைத் தளத்தில் தனித்துவ ஆற்றலுடன் இயங்கிக்கொண்டிருக்கும் இளம்பிறை, தனது கவிதை நூல்களுக்காக யாளி, களம், திருப்பூர் தமிழ்ச்சங்கம், புதுக்கோட்டை தமிழ்ச்சங்கம் ஆகியவற்றின் விருதுகளைப் பெற்றுள்ளார். மேலும், தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான பரிசு, கவிஞர்கள் திருநாள் விருது, இளையராஜா இலக்கியப் பெருமன்றப் பாவலர் விருது, புரட்சிக் கவிஞர் விருது, சிற்பி இலக்கிய விருது, ஆனந்த விகடன்

குழுமத்தின் இலக்கிய ஆளுமை விருது உள்ளிட்ட பல விருதுகளையும் பெற்றுள்ளார். பல்வேறு கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் கவிஞரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. திரைப்படங்களில் சில பாடல்களையும் எழுதியுள்ளார். தற்போது சென்னையிலுள்ள அரசுத் தொடக்கப்பள்ளியொன்றில் தலைமையாசிரியராகப் பணியாற்றிவருகிறார்.

'அவதூறுகளின் காலம்' கவிதை நூலிலுள்ள கவிஞரது 'முள்ளிவாய்க்கால்' எனும் கவிதை என்னை உலுக்கியெடுத்த ஒரு கவிதை;

'பதில் சொல்ல முடியாத
உங்களின் வினாக்களில்
பற்றி எரிகின்றன
எங்கள் வஞ்சகங்கள்
தளர்த்த முடியாத
மன இறுக்கத்தை
எமக்கான தண்டனையாக நினைத்து
சரி செய்துகொள்ள முடியவில்லை
நினைவை
குறுந்தகடு காட்சிகளாக
குவிக்கப்பட்ட உங்கள் சடலங்களிலிருந்து
நீங்க முடியாத குற்ற உணர்வுகளால்
உற்றுப் பார்க்கிறேன்
உம் இறந்த உடல்களில்
அசைகிறது உயிர்
எம் உயிர் உடல்களில்
நடக்கிறது பிணம்.'

கிராமத்து வாழ்வியலைப் பேசும் இளம்பிறையின் கவிதைகளுக்குள் பல கதைக் கவிதைகளும் உள்ளீடாகப் பொதிந்துள்ளன. அவற்றுள் 'அப்பாவின் கையெழுத்து' எனும் கவிதையும் 'அம்மா' எனும் கவிதையும் சிறுகதைக்கான உள்ளடக்கமும் செறிவும் நிரம்பியவை.

'அம்மா' கதைக்கவிதை இதோ!

தாலாட்டுப் பாடாம
தனித்தழுக விட்டவளே...
காட்டு வேலைக்கென்னை
கதறவிட்டுப் போனவளே...
வயது பத்தாகுமுன்னே
வயலுக் கிழுத்தவளே...
பள்ளிக்கூடம் போனாக்க
பணமா குடுக்கிறாங்க
இடுப்புத்துணி சரியில்லாம
படிப்பென்னடி ஒனக்கு
வாடி வயலுக்கென
வம்பு செஞ்ச எந்தாயே...
மணிக்கணக்கா படிச்சாக்க
மண்ணெண்ணைக்கு எங்க போவேன்?
பரிட்ச பரிட்சேனு எம்
பாவத்தைக் கொட்டுறியே என
விளக்க அணைக்கச் சொல்லி
வேதனப்பட்ட தாயே...
பரீட்சைக்குக் கட்டவேணும்
பணங்குடும்மாயின்னுக் கேட்டா
படிக்க வச்சி எப்பேர்ப்பட்ட
பாவத்தை நா செஞ்சுபுட்டேன் என
அழுதழுது ஒரு
அஞ்சு ரூபா தந்தவளே...
காலுக்குச் செருப்பில்லாம நான்
கஷ்டப்பட்டு நடக்குறேன்னு
மொட்டக் காலோட நீ
முள்ளு வெட்டி வித்துப்புட்டு
மட்ட விலையில் ஜோடி
செருப்பு வாங்கித் தந்தவளே...
வீடு ஒழுகுனப்ப
வேதனய மாத்த நீயும்
'கோட மழைதானே...
குளிர்ச்சிதான் பெய்யட்டும் போ'னு
ஐப்பசி மாசத்து
அடமழய சொன்னவளே...
ஏரோப்பிளேனாமே
எட்டிப் பறக்குமாமே
நேராக் குதிக்கணுமா
நின்னுக்கிட்டே போவணுமாயென
தொண்ணூத்தி மூனுலேயே
துணிச்சலாக் கேட்டவளே...
என்னப்பெத்த... எந்தாயே உன்
பள்ளிக்கூடத்து மக
பாட்டுக்கட்டிப் பாடுறேம்மா - நான்
எங்க திரிஞ்சாலும் என்
இதயத்துல வாழுகிற
உனக்குத்தான் மொதப்பாட்டு - என்
உயிர் பாடும் தாலாட்டு.'

வாழ்வின் அனுபவங்களைத் தன் கவிதைகளால் ஆவணமாக்கிவரும் கவிஞர் இளம்பிறைக்குள் இருக்கும் பூரணச் சந்திரனின் ஒளியால் தமிழ்க் கவிதை இன்னமும் அழகும் பொலிவும் அர்த்தமும் பெறும் என்பது மட்டும் நிச்சயமான உண்மை.

- இன்னும் வரும்.

கடிதங்கள்-11

# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..




*கடிதம்–74*

*எழுதியவர் : பத்திரிகையாளர்*

*டி.எஸ்.ரவீந்திரதாஸ்*

சென்னை

*13.7.80*

அன்பிற்குரிய நண்பர் நம்பிராசன் அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலம் காண ஆவல். தங்களுக்கு இம்மாத கல் இலக்கியக் கூட்டத்திற்கான அழைப்பிதழை அனுப்பியிருந்தேன். ஏனோ தங்களைக் காணவில்லை.

மேலும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி 'தமிழில் சிறுகதைகள்' என்ற தலைப்பில் LLA கட்டிடத்தில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. திரு. அகிலன் அவர்கள் தலைமை ஏற்க ஒப்புக்கொண்டுள்ளார்.

திருமதி இந்துமதி, திருவாளர்கள் சமுத்திரம், வண்ணநிலவன் ஆகியோரை அழைக்க முடிவு செய்துள்ளோம். நண்பர்கள் சமுத்திரம், வண்ணநிலவன் ஆகியோர் ஒப்புக்கொண்டுள்ளனர். திருமதி இந்துமதி அவர்களை எனக்கு நேரடியாக அறிமுகம் இல்லை. எனவே தாங்களே நமது மன்றத்தின் சார்பில் அவர்களை அணுகி வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த வாரத்தில் நான் தங்களின் அலுவலகத்திற்கு வருவேன். தங்களுடன் அவர்களைச் சந்திக்கிறேன்.

தாங்கள் முடிந்தால் கடிதம் எனக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் ஞாநி எப்படியிருக்கிறார்? அவருக்குக்கூட கடிதம் எழுதினேன் – கவிதை விஷயமாக. பதில் இல்லை.

தாங்களாவது எழுதுவீர்கள் அல்லது போன் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கிராமத்து அத்தியாயத்தில் தங்களின் தந்தை நடித்திருப்பதாக தோழர் தி.க.சி. சொன்னார்.



மிக்க மகிழ்ச்சி. உண்மையில் அவரது நடிப்பு தத்ரூபமாக இருந்தது. ஒருவேளை உண்மையிலேயே அவர் அப்படித்தானோ என்ற சந்தேகம் எனக்கு. நேரிலும் அவ்வளவு முரட்டுத்தனமாக இருப்பாரோ?

பிற பின்.

தோழமையுடன்

டி.எஸ்.ரவீந்திரதாஸ்



**கடிதம்–75**

**எழுதியவர் : சிற்றிதழாசிரியர்**
**மலர்மன்னன்**

சென்னை-5
27.5.80

அன்புள்ள நண்பருக்கு,

கடிதம், கவிதைகள் கிடைத்தன. கடந்த பத்து நாட்களாக மஹாராஷ்டிரத்தில் இருந்துவிட்டு நேற்றிரவுதான் ஊர் திரும்பினேன். கடல் மற்றும் உங்கள் நண்பர் கபிலாவின் கதைகளை அனுப்புங்கள்.

ஜூன் முதல் வாரம் வரை கிடைக்கலாம். கவிதைகளை இன்னும் படிக்கவில்லை. காலாண்டு இதழை Information value உள்ளதாகவும் இருக்கச் செய்ய உத்தேசம். ஆகவே உங்களைப் பற்றிய சிறு தகவல் குறிப்பையும் எழுதி அனுப்புங்கள்.

முகவரி, இதுவரை வந்துள்ள கவிதைத் தொகுதிகள் (வெளியிட்டவர் முகவரி பெயர்) போன்றவை. கணையாழிக்கு அனுப்பியவற்றை இதற்குப் பயன்படுத்திக்கொண்டால் நன்றாயிருக்காது. எனவே ‘கடல்’ கவிதையை அனுப்புங்கள்.

முதலில் அதைக் காலாண்டு இதழில் பிரசுரித்துவிட்டு அதன்பிறகு தொகுப்பில் போடலாம் (பரிசீலனைக்கு ஏற்கப்படும் பட்சத்தில்).

அன்புடன்
மலர்மன்னன்

**கடிதம்–76**

**எழுதியவர் : சிற்றிதழாசிரியர்**
**மலர்மன்னன்**

மலர்மன்னன் வெளியீடு
திருவல்லிக்கேணி,
சென்னை
10.4.81

அன்புள்ளவருக்கு,
தங்கள் கடிதம்.

வெளியூர் சுற்றுப்பயணத்திலிருந்து நேற்று மாலை ஊர் திரும்பிய பின்னர்தான் பார்க்க முடிந்தது.

ஏதேனும் ஒருநாள் காலை பத்து மணிக்குள் அல்லது மாலை 7 மணிக்கு மேல் நேரில் வந்து கவிதைகளைப் பெற்றுச் செல்லலாம். அல்லது தபாற் செலவுக்கு ரூ.1 தபால் வில்லை அனுப்பிவைத்தால் நானே திருப்பியனுப்பிவிடுவேன்.

நீங்கள் அவசரப்படுத்துவதால் பரிசீலனை முடியப்பெறாமலேயே திருப்பி அனுப்ப வேண்டியுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தனி மனிதன் ஏராளமான பக்கங்களுடன் கூடிய காலாண்டு இதழை நடத்துவதில் உள்ள நடைமுறை சங்கடங்களை நீங்கள் புரிந்துகொள்ள முயற்சித்தால் சந்தோஷமாயிருக்கும்.

உங்களிடமிருந்து கவிதைகள் வருமுன்னரே நிறைய கவிதைகள் சேர்ந்து பரிசீலிக்கப்பட்டுவருகின்றன.

அன்புடன்
மலர்மன்னன்



கவிச்சித்திரம்

ஜின்னா அஸ்மி



கண்ணாடியில் முகம் பார்க்கிறேன்
தெளிவாகத் தெரியவில்லை
என் முகமூடி

▪

அழுகிறது குழந்தை
அம்மா என்று கத்துகிறது
தொழுவத்தில் பசு

▪

தூரமாய்த் தட்டு
பக்கத்தில் வானம்
சோறு உண்ணும் குழந்தைக்கு

▪

உடையும் முனை
ஓவியமாய் மரம்
பென்சில் சீவுகிறான் சிறுவன்

▪

பெரியாரின் கல்லறையைச் சுற்றி
பூத்துக்கொண்டிருக்கிறது
ஜாதி மல்லி

▪

நீந்திக்கொண்டே
நிலவைச் சுற்றிப் பார்க்கிறது
நதியில் மீன்கள்

▪

தண்டவாளங்கள் பிரிந்திருந்தாலும்
சேர்ந்தேதான் செல்கிறோம்
நானும் ரயிலும்

▪

பட்டாம்பூச்சியைப் பிடிப்பவனுக்கு
என்ன செய்வதென்று தெரியவில்லை
அதன் வண்ணங்களை

▪

ஜின்னா அஸ்மி



நிறைகுடம்
நீர் தளும்பாது
குளமும் கடலும்

வெளிச்சமே
இருட்டு
மின்மினிப் பூச்சிகளுக்கு

இலையுதிர் காலத்திலும்
பூ இருக்கிறது
அவள் கூந்தலில்

நீரில் நிலா பார்க்கிறேன்
நேரில் மீன் வருகிறது
நினைவில் ஆம்ஸ்ட்றாங் வருகிறார்

அமைதிக்கும் புறாக்களுக்கும்
எந்தச் சம்பந்தமும் இல்லை
அவை சிறகடித்துப் பறக்கின்றன

நகர முடியாமல் இருக்கின்றன
மலைப்பாம்பும்
அது விழுங்கிய சினையாடும்

குயில் பாடும்போதெல்லாம்
காகத்தை நினைத்துக்கொள்கிறாள்
வாடகைத் தாய்

நூல் விமர்சனம்

# வழித்துணையாக.. வலிநிவாரணியாக..

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அருகில் வெள்ளாகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் கனகா பாலன் பொறியியல் பட்டயப் படிப்புடன், ஆசிரியர் பட்டயப் படிப்பும் முடித்தவர். தற்போது தன் குடும்பத்தாருடன் சென்னையில் வசித்துவருகிறார். கவிஞர் கனகா பாலன் “அகயாழின் குரல்”, “என் கனா யாழ் நீ”, “உன் கிளையில் என் கூடு” என்ற கவிதை நூல்களையும், “பாறை குளத்து மீன்கள்” என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

“கூராப்பு” என்னும் கவிதைத் தொகுப்பு இவரின் ஐந்தாவது புத்தகம்.

மாறிவரும் பருவ நிலைக்கு மிக முக்கியமான காரணம் மரங்களை மனிதர்கள் அழிப்பதுதான். மரங்கள்



இல்லை என்றால் பூமி மிகவும் வெப்பம் அடைந்து மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருக்காது. மரங்கள் பூமியின் பசுமைச் சேலை. மரங்கள் அழிக்கப்படுவதால்தான் இயற்கைச் சீற்றங்களான சுனாமி, நில நடுக்கம், மண் அரிப்பு, புயல், வெள்ளம், வறட்சி, புவி வெப்பமயமாதல்



போன்றவை உருவாகின்றன. நாம் மரங்களுக்கு எவ்வளவு தீமை செய்தாலும் மரங்கள் ஒருபோதும் நமக்குத் தீமை செய்வதில்லை. அவை நன்மையை மட்டுமே செய்கின்றன. இந்தக் கருத்தைக் கவிஞர் தனது கவிதைகளில் அற்புதமாகச் சொல்கிறார்.

சூழலியல் சார்ந்து மூன்றே வரிகளில் வனத்தைப் பற்றி உரக்கப் பேசுகிறார்.

மணக்கிறது நடுப்பக்கம்
எந்த மரமென்று தெரியவில்லை
இந்தக் காகிதம்.

மண்புழுவைச் சீண்டினால் எதிர்த்து நிமிரும். ஆனால் மண்புழுவிற்கு எலும்பு கிடையாது. உன் கூன் நிமிரட்டும் ஆதிக்கம் செய்பவரின் எலும்புகள் உடையும் என்று ரௌத்ரம் பேசுகிறார்.

குனிந்து பணிந்து
கூன் பெறுதலை விட
எதிர்த்து நிமிரலில்
நொறுங்கட்டுமே எலும்பு.

நம்புவதே வழி என்ற மறைதனை நாமின்று நம்பிவிட்டோம், என்பது மகாகவி பாரதி கூற்று. அதைப்போல நம்மிடமிருந்தே ஓர் உள்முக தரிசனத்தை அளிப்பதுதான் கவிதையின் சிறப்பு. வானம் போல எங்கெங்கு காணினும் நீயாக இரு என்று உணர்வுப்பூர்வமாக நினைக்கவைக்கிறார்.

நினைக்கும்போதெல்லாம்
வாசலிலிருந்து
பார்த்துக்கொள்ள இயலும்
வானத்தைப்போல்
கண்முன் தெரி.

குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சி மற்றும் அப்பாவித்தனத்தை மிகவும் தீவிரமான மற்றும் வயதுவந்த உலகத்துடன் வேறுபடுத்திக் காட்டுகின்றன கவிதைகள். எளிமையான மொழி மற்றும் கற்பனைகளும் நிலையற்ற தன்மை மற்றும் இழப்பின் அடிப்படையிலான கருப்பொருள்களும் ஒரு தீவிரமான தொடுதலைச் சேர்க்கின்றன. காதலின் உள்ளுணர்வுகளைக் கவிதையில் வடிக்கும்போது காதலாகிக் கசிந்துருகுகிறது. அப்படித்தான் இக்கவிதையும்.

ஊதிப் பறக்கவிட்ட பலூனின்
உள்ளிருக்கும் மூச்சு
உனது
கைப்பிடி இதயம்
கட்டுக்கடங்காமல் துடிக்க
வசைபாடிக் கொண்டிருக்கிறேன்.
வேலி மரத்தை
காற்றே காதலாயிரு...

வாழ்க்கை என்பது ஒரு தொடர்ச்சியான பயணம், அதில் பலவிதமான அனுபவங்கள் அடங்கியிருக்கின்றன. சில நேரங்களில் மகிழ்ச்சி, சில நேரங்களில் கஷ்டம், சில நேரங்களில் சவால்கள் என்று பல மாற்றங்கள் நம்மைச் சுற்றி நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு தருணமும் நமக்கு ஒரு பாடமாக அமைகின்றது. வேடிக்கை பார்க்கும் சில தருணங்கள் கூட வாழ்க்கையின் அர்த்தத்தை உணர வைத்துவிடுகின்றன. அப்படியாக இக்கவிதை நம் மனதுக்கு நெருக்கமாகிவிடுகிறது.

எல்லாம் முடிந்துவிட்டதாக
எல்லாம் கடந்துவிட்டதாக
எல்லாம் தொலைந்துவிட்டதாக நொந்து
வெறுமனே
வேடிக்கை பார்க்கத் தயாராகையில்
எதையெதையோ கலைத்துப்போட்டு
அடுக்க நிர்பந்திக்கும்
இந்த வாழ்வுக்குத்தான்
எத்தனை அக்கறை நம்மீது.

“கூராப்பு” என்ற இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற அனைத்துக் கவிதைகளும் நம் மனதுக்கு ஏதோ ஒருவகையில் வழித்துணையாகவும் நம்மை ஆற்றுப் படுத்துவதாகவும் வாசிக்க வாசிக்க நமக்கு வலிநிவாரணியாகவும் இருக்கின்றன. ■

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்...!



"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரியஎண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின்ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துசிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது."

## புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

இலக்கிய படைப்பு குழுமம்

3, அஜந்தா டவர்ஸ், தரைத்தனம், கார்ப்பரேஷன் காலனி தெரு.கோடம்பாக்கம், சென்னை 600 024. Ph: +91 73388 97788